ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், 'ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" | "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" | "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—ஸா. | யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹு தைமீ ௧௯௩௬ (26-1-36) ஞாயிற்றுக்கிழமை | பகுதி—௨௮.

### தோத்திரம்.

அடிமுடியும் நடுவுமற்ற பரவெளிமேற் கொண்டால் அத்துவித ஆனந்த சித்தமுண்டாம் நமது
குடிமுழுதும் பிழைக்குமொரு குறையுமில்லை யெடுத்த கோலமெல்லாம் நன்றாகுங் குறைவுநிறை வறவே
விடியுமுத யம்போல அருளுதயம் பெற்ற வித்தகரோ டுங்கூடி விளையாட லாகும்
படிமுழுதும் விண்முழுதுந் தந்தாலுங் களியாப் பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் வருமே.

—தாயுமானசுவாமிகள்.

**விளம்பரம்**

## பருத்தித்துறை, கரைச்சி, பூநகரி வாக்காளர்களுக்கு!

## பருத்தித்துறைப் பகுதிக்கு உங்கள் பிரதிநிதியாக

இலங்கைத் தமிழருள் முதன்மை பெற்றவரும் பல ஆண்டுகளாக இலங்கைச் சட்டசபையிலும், சட்ட நிருபண சபையிலும் அங்கத்தவராயிருந்தவரும், இலங்கை ஆயுள்வேத வைத்திய சபையின் தலைவரும், அரசினர் ஈட்டுவங்கி ஸ்தாபகரும், அதிகார சபை அங்கத்தவரும், சட்டநூல் வல்லுநரும்,



பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் விஞ்சிய ஞானம் படைத்தவரும், கல்வி அறிவாற்றல் முதலியவற்றில் தலைசிறந்தவரும், அரசினராலும் மற்றைய எல்லாச் சாகியத்தாராலும் நன்கு மதிக்கப்படுபவரும், சிறந்த தேசாபிமானியும், ஒப்பற்ற தலைவருமாகிய

# திரு. க. பாலசிங்கமவர்களையே

## அன்புடன் தெரிவுசெய்யுங்கள்!

(73) 19-1-36.

அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த, இன்பப் பெருக்கே இறையே பராபரமே.

# பாரதி பாடலும் பட்டிக்காட்டானும்.

(தேசிக விநாயகம்பிள்ளை)

[பட்டிக்காட்டான் பட்டணம் போனான்—பாரதி பாடலைப் பண்ணோடு கேட்டான்—அதில் அவன் மனம் ஈடுபட்டது—சில தினங்களில் ஊருக்குத் திரும்பினான்—அங்கே தன் நண்பர்களுக்கு அப்பாடல்களின் அருமை பெருமைகளை உணர்ந்தமட்டில் விவரித்துக் கூறுகிறான்.]

(வெண்பா)

உள்ளக் கருத்தையெலா முள்ளபடி யானிந்த
வெள்ளைக் கவியில் விளம்பினேன்—தெள்ளுதமிழ்
வெண்பாப் புலியும் விகட கவியுமெனைக்
கண்பார்த்துக் காத்தல் கடன்.

1. பாட்டுக் கொருபுலவன் பாரதியடா – அவன்
பாட்டைப் பண் ணோடொருவன் பாடினனடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா – அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா.

2. சொல்லுக்குச் சொல்லுமழ கேறுமேயடா – கவி
துள்ளு மறியைப் போலே துள்ளுமேயடா
கல்லும் கனிந்துகனி யாகுமேயடா – பசும்
கன்றும் பாலூட்டிடாது கேட்குமேயடா

3. குயிலும் கிளியும் பாட்டில் கூவுமேயடா – மயில்
குதித்துக் குதித்து நட மாடுமேயடா
வெயிலும் மழையுமதில் தோன்றுமேயடா - மலர்
விரிந்து விரிந்து மணம் வீசுமேயடா.

4. அலைமேலே அலைவந்து மோதுமேயடா – அலை
அழகான முத்தையள்ளிக் கொட்டுமேயடா
மலைமேலே மலைவளர்ந் தோங்குமேயடா – அதை
வணங்க ளடர்ந்தடர்ந்து சூழுமேயடா.

5. விண்ணி லொளிருமீன்கள் மின்னுமேயடா—விண்ணில்
விளங்கு மதிநிலவு வீசுமேயடா
கண்ணுக் கினியசோலை காணுமேயடா – அதில்
களித்திள மான்கள்விளை யாடுமேயடா.

6. தேனும் தினையும்பாவில் உண்ணலாமடா – மிகத்
தித்திக்கும் முக்கனியும் உண்ணலாமடா
கானக்குழ லிசையும் கேட்கலாமடா – ஊடே
களிவண்டு பாடுவதும் கேட்கலாமடா.

7. நாட்டு மொழியுமவன் பாட்டினிசையில் – மிக்க
நல்ல கற்கண்டினிமை சொட்டுமேயடா
ஏட்டிலிடும் மந்திரந்தான் கண்டவருண்டோ – ஈதவ்
வீசன் திருவருளென் றெண்ணுவாயடா.

8. உள்ளந் தெளியுமொரு பாட்டிலேயடா – மிக்க
ஊக்கம் பிறக்குமொரு பாட்டிலேயடா
கள்ளின் வெறி கொளுமோர் பாட்டிலேயடா – ஊற்றாய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர் பாட்டிலேயடா.

வேறு.

9. 'கரும்புத் தோட்டத்திலே' – எனுங்கவி
காதைச் சுடுதடா
இரும்பு நெஞ்சமுமே – நீராய்
இளகி யோடுதடா.

10. 'செந்தமிழ் நாட்டின்' – முதன்மொழி
செவியிற் சேருமுன்னே
அந்தமில்லாமல் – உள்ளத்தில்
அமுத மூறுதடா

11. 'பாப்பாப் பாட்டிலே' – நெஞ்சைப்
பறிகொடுத் தேனடா
சாப்பா டேதுக்கடா – சீனி
சர்க்கரை ஏதுக்கடா.

12. அன்னை 'பாஞ்சாலி – சபதம்'
அறைதல் கேட்டேனடா
முன்னைக் கதையெல்லாம் – கண்ணின்
முன்ன டந்ததடா.

13. 'வந்தே மாதரத்' தைப் – பாடவே
வாய்தி றந்தவுடன்
சந்தேக மில்லை – ஒரு புதுச்
சத்தி தோன்று தடா.

14. 'எங்கள் நாடு' தான் – பூபாள
இசையி லேறிடுமேல்
கங்கை யாறுபோல் – உள்ளத்தில்
களிப்பொழுகுதடா.

15. 'சின்னஞ் சிறுகிளி' – கனவில்
தினமும் காணுதடா
கன்னங் குளிரவே – முத்தமும்
கனிந்தளிக்குதடா.

16. 'கண்ணன் காதலன்' – எனக்கொரு
களியமுதமடா
விண்ணமுதமுமே – அதனை
வெல்ல மாட்டாதடா.

17. குயிலின் பாட்டி'லே – காதல்
கொப்புளிக்குதடா
செயல்ம றந்தேனடா – லாகிரி
சிரசிற் கொண்ட தடா.

18. 'சுதந்திரப் பாட்டி'ல் – உள்ளம்
துடிதுடிக்குதடா
பதமெழும்புதடா – கையும்
படபடக்குதடா.

19. 'தொண்டு செய்யு மடிமை' – என்னும்
சுடுசரமோடி
மண்டையைத் தாக்குதடா – நெஞ்சம்
மடியப்பாயுதடா.

20. பெண்டு பிள்ளைகளின் – பெருமை
பெரிதறிந்தேனடா
சண்டைகள் செய்ததெல்லாம் – எண்ணித்
தலைகவிழ்ந்தேனடா.

21. ஏழை துயரெலாம் – அவனும்
எடுத்தடுக்கையிலே
மூளை கலங்குதடா – விம்மி
மூச்சும் முட்டுதடா.

22. பாவின் நயமெலாம் – யானும்
பகரவல்லேனோ?
ஆவின் பாற் சுவையை – நாழி
அளந்து காட்டிடுமோ?

—"கலைமகள்."

## நல்லூர் கத்திக்குத்து.

யாழ்ப்பாணம் 23

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் நல்லூர் வாசிகளாகிய (1) K. செல்லத்துரை (2) சண்முகம்பிள்ளை முதலியவர்களுக்கெதிராக சரவணமுத்து என்பவரைக் கத்தியால் குத்திப் படுகாயப்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்காளி சார்பாக நியாயதுரந்தரர் திரு. T. C. இராசரெத்தினமும், எதிரிகள் சார்பாக சாம். ஏ. சபாபதி அவர்களும் விவாதித்தார்கள். விசாரணையின் போது டக்ரர் K. இராசா அவர்கள் கூறியவை வருமாறு:—

"சென்ற டிசம்பர் மாதம் காயமடைந்தவனாகிய சரவணமுத்துவைப் பரிசோதித்தேன். அக்காயம் கூரிய ஆயுதமொன்றினால் ஏற்பட்டிருத்தல் வேண்டும். புறமுதுகிலேற்பட்ட அக்காயம் மிகவும் அபாயகரமானதும், சீவமோச முண்டாக்கத்தக்க தானதுமாகும். அது இன்னமும் சரியாக ஆறவில்லை. 34 நாட்கள்வரை காயமடைந்தவன் ஆஸ்பத்திரியிலிருந்தான்"

இத்துடன் நீதிபதி வழக்கைத் தவணையிட்டார். ந. நி.

## யாழ்ப்பாணத்தில் அரசர் பெருமான் மரண அறிக்கை.

யாழ்ப்பாணம் 21.

இன்றைய தினம் எமது அரச சக்கிரவர்த்தியாகும் 5-ம் ஜோர்ஜ் அவர்கள் தேகவியோகமாகினாரென வடமாகாணத் தலைவர் மூலமாக செய்தி வெளிவரலாயிற்று. யாழ்ப்பாண மக்கள் யாவரும் கவலைப்பட்டார்களென்பதற்கறிகுறியாக வீடுகள், வியாபாரஸ்தலங்கள் ஆதியனவற்றின் முன்றிலில் கறுப்புக்கொடிகள் காணப்பட்டன. சந்தோஷமான செயல்கள் எதுவும் நடைபெறவில்லை. வித்தியாசாலைகள், கோடு, கச்சேரி முதலியவைகள் யாவும் மூடப்பட்டன. ந. நி.

## பொலிஸை அடித்த வழக்கு.

யாழ்ப்பாணம் 23

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் பொலிஸ் நீதிபதி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை முன்பாக (1) ஜேம்ஸ், (2) மாட்டின், (3) அமரசிங்கி முதலியவர்களுக்கெதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் டேசனைச்சேர்ந்த பொலிஸ் கொன்ஸ்டேபிள் சில்வா என்பவரை சென்ற டிசம்பர்மீ 25-ம் திகதியளவில் அடித்துக் காயப்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக சப் இன்ஸ்பெக்டர் திரு. ஜே. டபிள்யு. எல். அற்றிக்கலையும் எதிரிகள் சார்பாக நியாயதுரந்தரர் திரு. கே. வீ. சின்னத்துரையும் விவாதித்தார்கள்.

விசாரணையின்போது டக்ரர் கே. இராசா அவர்கள் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"சென்றமாதம் 25-ம் திகதியன்று சாயங்காலம் 6 மணியளவில் பொலிஸ் கொன்ஸ்டபிள் சில்வா என்பவரைப் பரிசோதித்தேன். அப்போது அவரது இடது முழங்காலில் ஓர் காயமும், வலது பக்கத்தில் ஓர் காயமும், கழுத்தில் நகம்பதிந்த காயங்களையும் கண்டேன். காலில் ஏற்பட்ட அடையாளம் பொல்லாலும், கழுத்திலேற்பட்டவை நகத்தாலும், மற்றவை கையாலுமேற்பட்டவையாயுமிருத்தல்வேண்டும். சைக்கிளிலிருந்து கீழே விழுந்தால் இம்மாதிரிக் காயங்கள் ஏற்பட ஏதுவில்லை. பொலிஸ் கொன்ஸ்டபிள் குடிவகை பாவித்ததாகத் தெரியவில்லை."

இவ்வளவில் நீதிபதி வழக்கை வருகிற மாசிமீ 18-ம் திகதிக்கெனத் தவணையிட்டார். ந. நி.

## மஞ்சள் நிற மழை

மத்திய இந்தியாவில் நம்பாலி என்னும் இடத்திற் கருகாமையில் இப்போது சில நாட்களாக மஞ்சள் நிறத்தில் மழை வருஷித்ததாம். இதனையிட்டு அங்குள்ளவர்கள் மிகவும் ஆச்சரியப்படுகின்றனர்.

பத்திரக்கிரயம்
இலங்கை, இந்தியா,
பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணா 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 7.

# ஈழகேசரி

விளம்பரவிகிதம்
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, கால்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான
விளம்பரங்களுக்குச்
சலார் வேறு.

தொகுதி—ஈ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹூ தைமீ கஉ (26-1-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி- உஅ


## நாகர்.

["விவேகானந்தசபை" இயற்றமிழாசிரியர்
சிவங். கருணாலயபாண்டியப் புலவர் அவர்கள்.]

(பதிப்புரிமை ஆக்கியோர்க்கேயுரித்து.)

(24-ம் இலக்கத் தொடர்)

அங்ஙனம் உயிர்நீத்த ஆபுத்
திரன் தன் ஊண்கொடைப் பேற்
றான் உயிர்விடுபொழுதத்து உள்ளி
யவாறே சாவகநாட்டிலே வெண்ம
லையெனப்படும் மலக்கண் மண்முக
ன் என்னும் ஒரு நற்றவ முனிவன்
மாட்டுள்ள பொற்கொம்பும் பொற்
குளம்புமுடைய ஒரு ஆவின் வயிற்
றுப் புக்கு முட்டைக்குட்டங்கி புத்
தமுனிவன் தோன்றிய வேனிற்பரு
வத்து வைகாசித் திங்களின் நிறை
உவா (பௌர்ணமி) வின்கண் ஓர்
ஆண் மகவாகத் தோன்றினன். அ
துகாலை மண்ணகமெல்லாம் மாரியி
ன்றியும் புண்ணிய நன்னீர் போ
தொடு சொரிந்தது. இச்சேயீன்ற
ருளிய ஆவே முற்பிறவிக்கண் தா
யொழிகாலைப் பாலூட்டி யுயிர்ப்பி
த்ததாகும். இஃதிப்பொழுது இவ
னை ஈனுமை முன்னரே இன்னுயிர்
க்கெல்லாம் நன்முலைசுரந்து தன்பா
ல் ஊட்டிற்று. ஆபுத்திரனும் செ
ய்நன்றி மறக்ககில்லாது இறக்கும்
ஞான்றும் ஆவின் நன்றியை உன்
னினன். அந்நினைவே அவனை அச்
செல்வப்பிறப்பின்கட் செருஇயது.

"ஆன்பாலும் செய்யு மழுதோடு முக்
கனியுந், தேம்பாய வுண்டு தெவிட்டுமென்ந்
—தீம்பாய், மறக்குமோ வெண்ணை வரு
சடையா கம்ப, னிறக்கும்போ தேனுமினி"
என்பது நினைவிற்கு வருகின்றது.

இப்பிறவியினுள்ளும் ஆவா
னீனப்பட்டமைகாரணத்தானே ஆ
புத்திரன் எனப் பெயரிடப்பட்டு
மண்முகமுனிவன் தண்ணளியொடு
வளர்வுழி அந்நாட்டினை அற்றை
ஞான்றுஆளும் பூமிச்சந்திரன் என
ப்படும் வேந்தன் மகப் பெறுக்குறை
மொழிந் திரந்து முனிவனது திரு
ந்தவடிவணங்கிக் "கடவுளீர்! மக்
களையில்லாதேன் தங்கள் திருவரு
ளால் மகப்பெற்றேனாயினேன்" என
வழிமொழிந்து அம்முனிவன் கொ
டுப்பக் கொடுபோய்,மன்னன் வளர்ப்
ப அரசாள்செல்வம் அவன்பாலுண்
மையின் நிரை தார்வேந்தனாயினன்
ஆபுத்திரவள்ளல் என்பதாம். முனி
வரினீங்கி இவன் வேந்தர்பாற்பட்ட
வழிப் புண்ணியராசன் என அரசி
யற்பெயர் புனையப்பெற்றனன். இப்
பழமை(கதை) முழுவதூஉம் காட்சி
யளவைக்கெய்தும உலகியலொடு மு
ரணுதலின் வாய்மைத்தன்றெனி
னும் யாதானுமொருவாற்றான் நிக
ழ்ந்திருத்தல்வேண்டு மாதலானும்,
அருளறத்தைப் புலப்படுத்தி வற்பு
றுத்தலே குறிக்கோளாதலானும்
பொய்யாய் வழுவெனக் கடியப்படா
து மெய்ம்மைப்பாற்படுமென அமை
க்கப்படும்.

"பொய்ம்மையும் வாய்மையிடத்த பு
ரைதீர்த்த, நன்மை பயக்கு மெனின்"
என்னும் மறைபணித்தலையும் ஈண்
டு நினைக்க. ஆரியமொழிக்கட் பரந்
துள்ளனவாகக் கேட்கப்படும் புரா
ணக்கூற்றுக்கள் பெரும்பாலவும் அ
ன்னவியல்பினவாம். இனி, புண்ணி
யராசன் மணிமேகலையாற் பௌத்
தமதம் தழுவி அதனைச் சிறப்பித்
து அந்நாட்டெங்கணும் பரவச்செய்
த சிறப்புடைமையான் அவன் குடி
முதல்வனாகி நாகனது மெய்ப்புகழ்
வரலாற்றை ஒற்றுமை நயத்தான்
அவன்மேற் சார்த்திக்கூறினர். மது
ரைக் கூலவாணிகன் சீத்தலைச் சா
த்தனார் புண்ணியராசன் முன்னைப்
பிறவிக்கண்வதிந்த பேரூர் பாண்டி
நாட்டுத் தென்மதுரையெனக் கூற
ப்பட்டுளது. அஃதிற்றைக்கு ஏற
க்குறைய ஏழாயிரத்து மூந்நூற்றை
ம்ப திற்றையாண்டைக்கு(7350)மு
ந்து நாலாயிரத்து நானூற்று நாற்
பத்தொன்பதிற்றியாண்டு (4449)
வீற்றிருந்த தமிழ்கூட்டுண் கழகத்
திற்கு நிலைக்களமாயிற்றெனக் களவி
யற்பொருள்கண்ட கணக்காயனார்
மகனார் நக்கீரனார், பேராசிரியர்,
அடியார்க்கு நல்லார் முதலிய பழை
ய செந்தமிழ் உரைச்செல்வர் கூ
றுப. இப்பொழுதைய மதுரை வட
மதுரையெனக் கூறப்படுதலை, "புவி
யிற்சங்கம் புகழ்வடமதுரை" எனு
ம் அகவலடியா னுணர்க. இவ்வக
வல் திரு. உ. வே. சாமிநாதையர்
அவர்களால் 'சிலப்பதிகாரச்' சுவ
டிக்கண் உரைப்பாயிரக் குறிப்பா
கக் காட்டப்பட்டுள்ளது. இதனுள்
முத்தமிழ்க் கழக வரலாறும் பெரு
ம்பாலும் பிறர்கூற்றொடு முரணாத
வாறு விளக்கும். சிறுபான்மை ம
றுக்கப்படுமென்ப. இனி வடமது
ரை மதுரையென வழங்கப்படாநி
ற்கும். அன்றியும் புதிய சொக்கர்
இடைக்காடன்பின்போயிருந்த மது
ரைக்கு வடபாற்கூற்றினை வடமது
ரையெனவும், முன்னிருந்த தென்
பாற்கூற்றினைத் தென்மதுரையென
வும் சொல்லுப. இத்தென்மதுரை
யன்று ஈண்டுக்கூறிய தென்மதுரை.
இங்ஙனம் முதனூழிமரபினை மொ
ழிதலின் இவ்வரலாற்றுத்திறன் பு
ண்ணியராசனதன்று புனைந்துரை
யெனவே படும். படவே நாகன்
எனும் பெயர் ஆபுத்திரன் எனப்
பொருள்படலின் நாகன் உடையதே
யாதல்வேண்டும். இன்னோரன்ன உ
லகியலொடு முரணிய செய்திகள் பி
றமொழிக்கண்ணுமெல்லாம் இன்றி
னாங்கு நாலாயிரம் யாண்டுக்கு முற்
படநிகழ்ந்தனவாகவேமொழியக்கே
ட்டுமாதலானும் ஆயிரத்தெண்ணூ
ற்றைம்பதி யாண்டையடுப்ப நிழ்ந்த
தென்றலும் பொருந்துமாறில்லை.
இஃதொப்பவே மணிமேகலைச்செய்
யுளில் ஏனைச் சில வரலாறுகளும்
கொள்ளப்படும். அறவணவடிகள
ஆபுத்திரனை அவன் முற்பிறப்பின்
கண் மணிமேகலைப் பொழிற்பால்
வடக்கிருந் துயிர்நீக்கும் எல்லைக்கட்
கண்டவாறு கூறுதல் மாதவி, சுத
மதி, மணிமேகலை என்றிவர்களையும்
அவர்கள் முற்பிறப்பின்கட் கண்ட
தாகக் கூறுகின்றனர். இலங்கை மு
தலாங் கயவாகு மன்னனோடு ஒருகா
லத்தானாத கிள்ளிவளவனுடைய
புகார்ப்பட்டினத்தை இயல்பானே
அகப்படுத்த கடல்கோளுக்குக் காக்
கைப் பனம்பழ முறையானே புனைக்
துரையானே காரணம் படைக்கின்
றது மணிமேகலை. இவற்றிற்கெல்
லாம் வழக்கும் பிறசெய்யுளும் முத
லிய கரிபோவனவற்றுள் ஒன்றும்
துணையின்றாமாற்றையும் நோக்குக.
அஃதன்றியும் எல்லாக் கதைகளுக்
கும் பௌத்தமதத் தெய்வங்களோ
டும் இயைபும் அமைக்கின்றது.இது
புத்தன் பிறப்பிற்கு முன்னும், யா
ண்டும், பிறவற்றிற்கும ஒப்ப உள
தாகாத இயைபு ஒருதலையாகக் கார
ணமாத லமையாமையிற் பின்னர்ப்
படைத்துக்கோடலேயா மென்பது
தெளிக. இனி, முன்னே ஆபுத்திர
னுடைய தாய் தென்கட் குமரியாறு
படிவான் போந்தனள் என்றலின
அவள் போந்தது குமரியம பேரி
யாறு கடல்கோட்படா ஞான்றென்
பதூஉம் ஈண்டு நினைக்கற்பாற்று.
அக்கடல்கோள்தானும் இராமா
யண வரலாற்றுக்கு முன்னர்த்தாத
லின் இற்றைக்கு ஐயாயிரத்தைந்
நூற்றைம்பதிற்றியாண்டிற் குறைந்
தின்றென்ப. இனி, நாகன் முதனூ
ழியனாதல் தலைத்தமிழ்க் கழகத்து
முரஞ்சியூர் முடிநாகராயர் என்பா
ரொரு புலவர் பெருமானார் வீற்றி
ருந்தாரென்றலின் அவர்கருமுதல்வ
னாய நாகன் ஒருவாறு கி. மு. ஆறா
யிரம் ஏழாயிரம் யாண்டுகட்கு முந்
துற வாழ்ந்து நிகழ்ந்தனன் எனப்
படுதலிற் போதரும். பண்டைக்கால
த்துப் பாண்டியமன்ன னொருவனு
டைய, இந்திரனோ டினிதிருந்த
தும், வேலைக்கடல் சுவறவிட்டதும்,
ஆழிவடிம்பலம்ப நின்றதும் என்

(தொடர்ச்சி அடுத்தபக்கம் பார்க்க.)


விளம்பரம்.

## அரசாங்கசபைத் தெரிவு.

காங்கேசன்துறைப்பகுதி வாக்காளர்களுக்கு:

உங்கள் பிரதிநிதியாக

நமது நாட்டின் அனுபவங்களை நன்குணர்ந்தவ
ரும், பல ஆண்டுகளாக ஆசிரியராகவும், வித்தியாதரிசி
யாகவும், ஆசி
ரிய கலாசாலை
அதிப ராகவும்
தொண்டாற்றி
இளைப்பாறி யி
ருப்பவரும், 30
ஆண்டுகளாகக்
கல்வி உலகத்தி
லும், கைத்தொ
ழில், கமத் தொ
ழில் முதலிய
பல துறைகளி
லும் பெற்றுள்
ள அரிய அனு
பவத்தின் பெ
றுபேற்றைத்
தமது நாட்டுக்
குப் பயன்படுத்
த வேண்டு மெ
ன்னும்பேரவா
வுடையவரும்,
சமய ஆசாரசீல
ரும், உதாரண
வாழ்க்கையைக்
கைக்கொண்டு



ஒழுகுபவரும், அரசியல், பொருளாதார நிலை, கல்வித்திட்
டம் முதலியவற்றில் தேர்ச்சியுடையவரும், யாவராலும்
நன்கு மதிக்கப்படுபவருமாகிய

திருவாளர்

### அ. பொன்னையா அவர்களையே

அன்புடன் தெரிவுசெய்யுங்கள்!

(74) 19-1-36—5.

# தகுதியையறிந்து நடுநின்று உண்மையை நாட்டல்.

*(By Prof. C. Suntharalingam)*

அப்படியாக, திரு. 'Y.' என்பவர் அவ்வுத்தியோகத்துக்கு நியமிக்கப்பட்டனர். அவர் திரு. 'X' அவர்களின் மகன். எவ்விதமாகவோ 'இரகசியமாகவேலை நடந்திருக்க வேண்டும். இலங்கையில் இவ்வாறு விஷயங்கள் நடைபெறுவதை எத்தனையோமுறை கேள்விப் படுகிறோம். உத்தியோகத்தைப் பெற மனுப்பத்திரமனுப்பி உதவாதவரென ஒதுக்கப் பட்டவர்களன்றி, வேறு அனேக சனங்கள் பொதுவாக அரசாங்க உத்தியோக நியமனத்தைப்பற்றி விவாதிக்கும்போது மேற்கூறியவாறு பேசுகின்றனர். ஒரு உத்தியோகத்துக்குத் தெரியப்பட்டவர் மிகவும் எற்றவரா யிருப்பினும், அவர் தெரியப்பட்டதற்கு இன்னதுதான் காரணமெனச்சில சாட்டுகள் கூறப்படுகின்றன. அவர் மிகவும் அதிகாரப்படைத்த ஒருவரின் உறவினர் ஆகையாற்றான் அவரை நியமித்தனர் என்பார்கள்.

உறவினர், நண்பர் என எண்ணுபவர்கட்கு ஓரபட்சமாக நடந்துஒருவகுப்பினரின் கணிசத்தைப் பெறுவது இலகு. தாம் காரியசித்தியடையாமைக்குத் தகுந்த நியாயம் காட்ட வியலாமையால் அபஜெயமடைந்த ஒருவர் வகுப்பு பிரிவினையேதமக்கு நட்டத்தைக் கொண்டுவந்ததென்பர். சிலர் தகுதியிற் குறைந்தவராயின் வகுப்புவாதத்தைக்கிளப்பி, தமது குறைகளை நிவிர்த்திசெய்ய முயல்கின்றனர். சென்ற சிலவருடங்களாக உத்தியோகம் நியமிக்கும் முறை, கைக்கூலி, நட்பு, அதிகாம் என்பவற்றால் பாதிக்கப்பட்டே வருகின்றதென்பது வெளிப்படை. தமதுநண்பருக்கு அல்லது உறவினருக்கு உத்தியோகம் வளங்கும் பொருட்டுப் புதிதாக ஒரு உத்தியோகத்தைச் சிருட்டிப்பதும் வழக்கமாய் விட்டது. ஒருவரை நோக்காகக் கொண்டு புதிதாக ஒரு உத்தியோகஸ்தானத்தைச்சிருட்டித்து விட்டுப் பின் அவ்வுத்தியோகத்தை, பெற விரும்பியோர் மனுப்பத்திரம் முதலியன பெற்று மனுப்பத்திரம் அனுப்பி வீணுக அலையவேண்டிய தாகின்றது.

இலங்கைத் தேசம் ஏற்ற வழியில் முன்னேற வேண்டுமென எண்ணுவோர், இவ்வாறு நடப்பதைக் கண்டு மனக்கவலையடையக்கூடும். இவ்வாறு எண்ணுவன யாவும் ஆதாரம் அற்றனவாகலாம். ஆனல், இது உண்மையானதென்பதை எவரும் மறுக்கமாட்டார். டொனமூர்த்திட்ட அரசியல் அனுசரணைக்கு வருமுன், தகுதியுள்ள இலங்கை வாசிகளைக் கவனியாது அரசினர் ஐரோப்பியர் முதலிய புறநாட்டவரையே விரும்பி உத்தியோகஸ்தானங்களுக்கு நியமித்தனரெனச் சொல்லப்பட்டது. இலங்கைவாசிகள் உயர்ந்த உத்தியோகங்கள் பெறவியலாதிருக்கும்படி எத்தனையோ தடைகள் ஏற்படுத்தப்பட்டன. சிலபோது உத்தியோகத்தரை நியமிக்குங்கால் பல விஷயங்கள் நோக்கப்பட்டன. பலகாலமாக அரசினரின் கீழ் மிக விசுவாசமாக உத்தியோகக் கடமை யாற்றியவரின் மகனென்ற காரணமும் எழும். களங்கமற்ற இராச விசுவாசியின மகளுக்குப் பேசிவைக்கப் பட்டுள்ள மாப்பிள்ளை என்ற காரணத்தாலும் சிலர் உத்தியோகம் பெறலாம். புதிய அரசியற்றிட்டம் ஏற்பட்டதும் குறை கூறுவதில் அதிக மாற்றமேற்பட்டது. தற்போது இருப்பதிலும் பழைய அரசியல் முறையில் உத்தியோகத்திற்குத் தகுதியும ஆற்றலும் வாய்ந்தோர் நன்கு பொருட் படுத்தப்பட்டனரென அனேகர் கருதுகின்றனர்.

புதிய திட்டப்படி உத்தியோகத்தர் நியமிக்கப்படும் விஷயத்தில் பல்வேறு நிர்வாக சபைக்கூட்டத்தினரும் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட உரிமைபெற்றது சிறிதும் ஏற்றதல்ல வெனப்பலர் கருதுகின்றனர். தென்னாபிரிக்காவின் அரசாங்கத்திலிருப்பது போல் எல்லா உத்தியோக நியமனமும் அரசியல் வாதிகளால் பாதிக்கப்படாதிருப்பது மிகவும்நல்லதாயிருக்கும். இவ்விஷயம் இலங்கைஅரசியற்றிட்டம் திருத்தப்படுங்கால் பெரிதும்கவனிக்கப்படவேண்டியவிஷயம்.

இவ்விஷயத்தைக்குறித்துப் பொதுசனங்கள் உண்மையையறிந்து அபிப்பிராயங்கொள்ளக்கூடியதாக நடபடிக்கைகள் கையாளப்படவேண்டும். நாங்கள் அதிகம் முன்னேறவில்லை, மேலைத்தேசத்தினரின் சனநாயக ஆட்சிமுறை நன்கு கிழைத்தேசங்களில் பரம்பவில்லை. எம்மை அரசுபுரியும் பிரிட்டிஷாரது நாட்டிலும் இற்றைக்கு ஐம்பதுவருடங்கட்குமுன் விஷயங்கள் நமது நாட்டிலும்மிகக் கேடாகவேயிருந்ததெனக் கூறிச் சிறிது மனமாறுவோமாக. அங்கே ஜோவெற் என்னும் ஒருவர் உயர்ந்த எழுத்தாளர் உத்தியோகத்திற்கு நியமிக்கப்படுவோர் பகிரங்க பரீட்சையில் முதன்மைபெறுபவரெனவிருக்கவேண்டுமென பலகாலமாக வாதாடிவந்தனர், ஈற்றில் இவர் முயற்சி சித்தியெய்தியது. இந்த விஷயம் அனுட்டானத்துக்கு வந்ததும் அநேக நன்மைகள் அரசியல் முறையில் ஏற்படலாயிற்று என்பதை எவரும் மறுக்கமாட்டார். இவ்வித முறை பலகாலமாக இருந்துவந்தது. பின் இதன் பெருநன்மையிலும் சந்தேகமேற்படலாயிற்று. ஓரபட்சமின்றி நடுநின்று தகுதியுடையவரை உத்தியோகத்திற்கு நியமிக்கும் முறையை எவராவது வெளிவந்து கண்டித்தாரில்லை. உத்தியோகத்தைப் பெற விரும்பிச் சிலர் அநீதியான வழிகளை அனுட்டித்துக் காரியசித்தியடைய விரும்புகின்றனரென பொதுசன அபிப்பிராயம் ஏற்பட்டுளது. சமீபத்தில் தேசாளுமன்றத் தெரிவில் முதன் மந்திரியாக இருந்த ஒருவரும் அவர் மகனும் தமது ஸ்தானங்களை இழக்க நேர்ந்தது. அதற்குக் காரணம் முதன் மந்திரியாகவிருந்த இவர், தமது மகனுக்கும் மந்திரிப்பதவிபெற சிறிது நீதியீனமாக முயன்றுள்ளாரென்பதே. பொதுவாகக் கூறின், ஆங்கிலேயரின் அரசியல் முறையில் தகுதி வாய்ந்தோர்க்கே உத்தியோக ஸ்தானங்கள் வழங்கப்பட்டுவந்ததைக் காணலாம். சன்மார்க்கமும் தகுதியுமுடையோர்க்கே உயர்ந்த பதவி பிறிட்டிஷ் கட்சிமுறை யரசியலில் வழங்கப்பட்டது. அப்படியே பகிரங்க பரீட்சைகளில் முதன்மை பெற்றோர்க்கும் உரிய இடம் ஏற்பட்டது. சில்லறை வியாபாரியின் மகன், அல்லது செருப்புக்கட்டியின் மகன், மிக உயர்ந்த உத்தியோகம் வகிப்பதை நாங்கள் காண்கிறோம். இத்தாலியில் அரசியல் உத்தியோகம் வழங்கும்முறை இன்னும் திறமைவாய்ந்ததாகக் காணலாம். கொல்லனின் மகனுகும் மூசோலினியின் அபிப்பிராயப்படி ஜனநாயக ஆட்சியென்றாலென்ன? மிகத்திறமையும் தகுதியும் ஆற்றலும் வாய்ந்தவர்களால் சனங்களின் சார்பில் அரசாங்கம் நடத்தப்படுதலே. பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுங்காலத்தும், அபேட்சகர்களாக முன்வருவோர் தாமாக முன்வந்து மன்றாட வேண்டியதே கிடையாது. இத்தாலியின் அரசியலை நடத்தும் பாஸிற் கட்சியினர் தகுதிவாய்ந்த இருவர் மூவர்களின் நாமத்தைக் குறித்துவிடுவர். சனங்கள் அவர்களுக்குள் ஏற்றவரைத் தெரிவுசெய்வர். யப்பான் தேசத்தில் உத்தியோகம் நீதியாக வழங்கப்படுகிறதா என்பதை ஆராய்ந்து பார்த்தற்கு ஒரு சபையை அரசினர் ஏற்படுத்தியுள்ளார்.

இலங்கையிலோவெனில், இவ்விஷயம் மிகக் கேவலமான நிலையிலேயேயிருக்கின்றது. அரசாங்கசபைத் தெரிவு காலங்களில் மக்களும் மருமக்களும் தமது தந்தையாரதும் மாமனாரதும் அரிய தொண்டுகளை எடுத்துக்காட்டி, தம்மை யரசாங்க சபைக்கு அனுப்பும்படி கேட்கின்றனர். இப்படி வாதிப்பதால் நன்மை வராதிருப்பதைக் கண்டால் பக்கத்திலிருக்கும் தவறணையின் துணையை நாடுகின்றனர். பட்டினச் சங்கங்களில் எழுத்தாளர் உத்தியோகத்தர் நியமிக்கப்படுங்கால் B. A. பட்டதாரிகள் ஒதுக்கப்பட்டு சீனியர் பரீட்சையில் அபஜயமடைந்த சிலர் நியமிக்கப்படுகின்றனர். நகரசங்கத் தலைவரின் இனத்தவராகவிருப்பின் பின் எப்படியாகும்? மணியகாரன் வேலையைப்பெற, கொழும்புசென்று உள்நாட்டு நிர்வாக சபையினர் ஆதரவையும் சிலர் நாடுவர். இவ்வித உத்தியோகங்களைப் பெற்றுக்கொடுக்கும் தரகு வேலையை, சிலர் இரகசியத்தில் நன்கு நடத்தி அதிகம் நன்மையடைகின்றனராம்.

இவ்விதமாக நடக்கும் முறையீனங்கள் ஆதாரமற்ற கதைகளாகப்பேசப்படுங்கால், இளைஞர் சிந்தைகள் எவ்வளவுக்குப் பாதிக்கப்படுகின்றன. சன்மார்க்கம் நீங்கித் துன்மார்க்கமே தலையெடுக்கின்றது. உண்மைவழிநின்று முயன்று விரும்பியதைப் பெறுவதிலும் நீதியீனமான வழிகளை அனுட்டிப்பின் ஜெயமடையலாமென அவர்கள் எண்ண முற்படுகின்றனர். பாடுபட்டு கஷ்டத்துடன் உழைப்பதைவிட்டு, அதிகாரப்படைத்தோரின் நட்பினைப்பெற்றால் போதுமென எண்ணுகின்றனர். உண்மைவழிச் செல்வோர்க்கு நன்மை ஏற்படுகின்றிலது. சன்மார்க்கத்துக்கு மாறான வழிகளே வெற்றியைக் கொண்டுவருகின்றன. விஷயமிவ்வாறாயின், தேசத்திற்குப் பெருநட்டம் ஏற்படுவது நிச்சயம். கல்விகற்ற அநேக வாலிபர்கள் உத்தியோகம்பெறாது இருப்பதற்கும் இதுவே காரணமாகும். அடுத்தாப்போல் வரவிருக்கும் உத்தியோகத்தைத்தாம் பெறுதற்கு எந்த அதிகாரியைப் பிடித்தால் நலமெனவாலிபர் நினைத்து ஆலோசிப்பர். இப்படியே உத்தியோகத்தை நாடி காவல்காத்து நிற்பர். இவர் வேலையில்லாதவரில் ஒருவராயிருந்து பின் கடைசியாக ஒரு வேலையும்பார்க்கத் தகுதியற்றவராய்விடுகின்றனர்.

விஷயம் இவ்வாறாக நமது தலைவர்கள் ஏற்றதைச் செய்வது அவசியமாகிறது. தமது செய்கைகளாலும் உதாரணங்களாலும் உண்மைத் தகுதிக்கே ஏற்ற மதிப்புண்டாகுமென்பதைப் பிரத்தியட்சத்தில் காட்டவேண்டும். உண்மையைப்பொருட்படுத்தாது அனுப்பப்படுவது இயல்பாகவிட்டது. தேசம் உண்மைவழியில் முன்னேறி, இளைஞர்கள் இழிந்த வழிகளை நாடாது பாதுகாக்கப்பட வேண்டுமாயின், உயர்ந்த நிலையிலுள்ளோர் உயர்ந்த உத்தியோகங்களை வகிப்போர் தமக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை நடுநின்று உபயோகிப்பது அவசியம். இது ஒருவாறாக சனங்களுக்கிடையிலும் உயரிய பொதுசன அபிப்பிராயம் வேரூன்ற வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனது மகன் தனக்கு எவ்வளவு அருமையும் பெருமையும் உடையானோ, அப்படியே தனது அயலவரின் மகனும் அவனது தந்தையார்க்கு இருப்பானென எண்ணவேண்டும். பொது விஷயங்களில் நடுநீதியும், நேர்மையும் பெரிதும் ஓம்பப்பட வேண்டியதாகும். நீதிதவறாது தகுதிக்கு வேண்டிய மதிப்புக் கொடுக்கவேண்டும்.—"*The Mahajanan*"

## நாகர்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

றிச் செயல்கள் கி. பி. 1118 முதல் 1136 வரையும் சோழநாட்டை யாண்ட உக்கிரமசோழன் காலித்தனை பராந்தக பாண்டியனுடையனவாக ஒரு கல்வெட்டுப் புனைந்துரைக்கின்றது. புகழேந்திப்புலவர் தம் நளவெண்பாச் செய்யுளிடத்து,

"ஆழி வடிம்பலம்ப நின்றானும் அன்றொருகால், எழிசைநூற் சங்கத் திருந்தானும்—நீள்விசும்பில், நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர், செற்றானுங் கண்டாய்இச் சேய்"

என நளன்காலத்துப் பாண்டியன் உடையனவாகப் புனைந்துரைக்கின்றார். சிலப்பதிகாரம் பொருட்டொடர் நிலைச்செய்யுள் கற்புக்கடவுள் கண்ணகி வழக்கிற்றோற்ற பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனுடையனவெனக் கூறுகிற்கும். திருவிளையாடற்புராணம் பாண்டியன் உக்கிரப்பெருவழுதியினுடையனவெனக் கதை புகலாகிற்கும். கரிகால்வளவன் பனிமலைக் கொடுமுடியிற் புலிக்கொடி தீட்டிய புகழ்வரலாறு பிற்றை ஞான்றைச் சோழமன்னர்மாட்டும் ஏற்றிச் சொல்லப்படுதலும் காண்டும். இங்ஙனம் புனைந்துரைவழக்கானும் பிறழவுணர்ந்த வழக்கானும் ஒருவருடைய திறத்தினை முன்னுள்ளோர்மாட்டாதல் பின்னுள்ளோர்மாட்டாதல் படைத்துப் புனைதலும் கதைகூறுதலும் மரபாதலின், ஆபுத்திரன் கதையும் அன்னதாதல் துணியப்படும். (தொடரும்)


## வெளிவந்துவிட்டது!

திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள் இயற்றிய

**புதிய தமிழ் ஏழாந்தரக் கணிதம்**

ஜே. எஸ். ஸி., எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்கும் உபயோகிக்கத்தக்கது.

**கண்ணைக் கவரும் அழகிய பதிப்பு!**

**கருத்தைக் கவரும் உயரிய விளக்கம்!!**

இதுபோன்ற ஒரு கணிதநூல் தமிழில் இதுவரையில் வெளிவந்ததேயில்லை.

**பிரதி விலை ரூபா ஒன்று.**

பிரபல புத்தக வியாபாரிகளிடம் பெறலாகும்.

Publishers :-
வட இலங்கா புத்தகசாலை,
பருத்தித்துறை. (Point Pedro)

(64) 5-1-36.


சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க, சொல்லிற் பயனிலாச் சொல்.

# "எனது கல்விக்கழகம்."

(இஃது, கவியரசர் தாகூர் அவர்கள் அமெரிக்கநாடு நண்ணிய ஞான்று அங்கு நடாத்திய (My School) என்னும் ஆங்கிலச் சொற்பெருக்கின் மொழிபெயர்ப்பு.)

[மேலைவேலணை, ஆசிரியர், திரு. சே. க. சண்முகம்பிள்ளைஅவர்கள்]

(26-ம் இலக்கத் தொடர்)

"எங்களுடைய ஆச்சிரமத்தைச் சுற்றிலும் வெளியான பிரதேசம் ஒன்று உண்டு. அவ்வெளியில் சிறிய பூண்டுகளும் எறும்புகளின் இல்லங்களும் பேரீச்ச மரங்களும் தவிர வேறொன்றுங் கிடையாது. இதற்கப்பால் எண்ணுக் கணக்கற்ற மண் கும்பிகளும் சிறு கன்மலைகளும் செம்மை நிறத்து மணலையும் பலவடிவங்களையுடைய கற்களையும் கொண்டு மிளிரா நிற்கின்றன. அதன் தென்திசைக்கண் உள்ள கிராமத்திற்கருகாமையில் உள்ள பள்ளங்களிலும் குன்றுகளிலும் தங்கிய நீரின் சிரினை வரிசையாக அமைந்துள்ள மாங்கட் கூடாகப் பார்க்கலாம். அங்கு அந்தக் கிராமவாசிகள் அயல் நகரத்துக்குச் செல்வதற்காகப் பாவிக்கும் ஒருதெரு அந்தக் கழனிகட் கூடாக வளைந்து வளைந்து செல்லும். இந்தத் தெருவுக்கூடாக வரும் பிரயாணிகள், அதிக தூரத்திற்கப்பாலுள்ள உயர்ந்த நிலத்தின் உச்சியில் ஒரு கோவிலின் உயர்ந்த நுனியையும் ஒரு கட்டிடத்தின் மேற்பகுதியையும் காண்பார்கள். அவ்விடமே, பலவகைத் தாவரங்கட்கிடையே விளங்கும் "சாந்திநிகேதன்" (Shanti-Niketan) என்னும் கழகத்தானமாகும்.

இக்கழகமானது இவ்விடத்தில் பதினைந்தாண்டுகட்கு மேலதிகமான காலமாக பலவிதமான மாற்றங்களையும் கொண்டு, வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது. புலவனென்னும் தீய புகழினையுடையனாகிய யான், எனது தேசத்தவரின் நம்பிக்கையையும் பலருடைய நல்லெண்ணங்களையும் மிகவும் கஷ்டப்பட்டே பெறவேண்டியிருந்தது என்னுடைய கைப் பொருளோ மிகவும் குறைவு. ஆனால் இந்த வறுமையானது எனக்குப் பூரண சுதந்தர வீரத்தையளித்து உலகப் பொருட்களை வெறுக்கச் செய்து உண்மை வழியில் நிற்கச் செய்தலாகிய அருந் தொழிலை ஆற்றியிருக்கின்றது.

ஆனால் இந்தக் கழகத்தில் என்னுடைய குறிக்கோளை (Ideal) பெற்றுவிட்டேனோ வெனக் கேள்வி எழக்கூடும். எனது விடையென்னவென்றால், எமது அரிய குறிக்கோட்களைப் பெறுதல் வெளித் தோற்றத் தகுதிகளால் அளவிடல் முடியாதென்பதே. எங்களுடைய ஆச்சிரமத்திலே, மனித வாழ்க்கையின் சமத்துவமின்மையையும், அஃது பல திறப்பட நிற்றலையும் ஏற்றுக் கொள்கின்றோம். நாங்கள் வெளித் தோற்றத்திற்காக வேண்டி வித்தியாசங்களை அகற்றி மாணவர்களை இயற்கையாகவளர்ப்பதற்குமுன் வரவில்லை. எங்களிற் சிலர் பிராமணராகவும் சிலர் சைவராகவும் இருக்கின்றார்கள். இன்னுஞ் சிலர் கிறிஸ்தவர்களாகவும் இருக்கின்றார்கள். நாங்கள் சமயங்களோடும் அன்றி வைதிகக் கொள்கைகளோடும் சம்பந்தமுறாது இருப்பதனால் இந்தச்சமய சம்பந்தமான எவ்விஷயங்களும் எமக்கோர் இடரினையும் கொடுக்கமாட்டாதென்பது கூறவேண்டியதில்லை.

இந்தியரல்லாத மற்றையோர்க்கு, "ஆச்சிரமம்" எனப்படும் சொற்களடங்கிய பலவிதத் தொகுதியையும் உணர்தல் சங்கடமாகவே இருக்கும். ஏனென்றால் அச்சொல் இந்தியாவின் கண்ணேயே தோன்றியது. சூரிய பிரபைமிக்க வானத்தின்கீழ்த் தாமரை மலர் அலர்ந்தாலொப்ப ஆச்சிரமம் அமைதற்கேற்ற தன்மைகளுடைய இந்தியாவில் அச்சொல்லும் அலர்ந்தது என ஒருபுடை கூறினும் பொருந்தும். இந்தியாவின் கண்ணுள்ள இயற்கையின் எழிலை இத்தன்மைத்தென மொழிகளிற் பொழிதல் இயலாதிருக்கின்றது. அங்குள்ள சுவாத்தியம் எங்களுக்கு மிக்க தூயகாற்று வந்துலாவும் மகிமையை அளித்திருக்கிறது. இந்திய அன்னையின் எழில்மிகுந்த அருவிகளின் போக்கு மிகவும் சாந்தமும் அமைதியும் சார்ந்திருக்கின்றது. எமதில்லங்களைச் சுற்றிலும் மிகவும் பரந்த பிரதேசங்கள் மிளிராநிற்கின்றன. பரிதி, பாரின்கீழ்த் திசைத்தோன்றி இயற்கையன்னை, நித்தியமாகிய (Eternal) இறைவனுக்குச் செய்யும் வணக்கமெனவே குடதிசைச்சென்று ஆங்கு மறைகின்றனன். இந்தியாவிலே தாவரங்களின் தண்ணிழல் தங்குதற்குகந்தவை. அங்குள்ள மணல்மீது படிதல் மகிழ்ச்சியாகவே இருக்கும். இவைகள் இந்தியாவின் என்ஞான்றும் மாறாத இயற்கை நலங்களாகும். இந்நலன்கள், எங்களுடைய மனதில் பலவிஷயங்களை உதிக்கஞ்செய்கின்றன. மனிதனின் ஆன்மா இறைவனின் ஆன்மாவிற் றங்கியிருக்கிறதென்னும் உண்மையை உணர்தல் இந்தியாவின் மக்களின் முக்கிய கடமையென்பதை எழில்மிகுந்து விளங்கும் இயற்கை எமக்கூட்டுகின்றது. பண்டை நாட்களிலெல்லாம் மேற்கூறிய கடமைகளைத் தாவர உலகினிடையே ஆரம்பித்தனர். அப்படியாகவு மல்லாமல், இப்பொழுதும் எங்களுடைய எல்லையற்ற இறைவனின் நிறைந்த காட்சியை அவருடைய எல்லாப் படைப்புகளிலும் கண்டுகளிக்கும்படி இயற்கை எங்களை ஊக்குகின்றது. நாங்கள் உட்கொள்ளும் உயிர்க்காற்றிலும், கட்பார்வைக்குப் புலனும் வெள்ளொளியிலும், பிறந்திறக்கும் நிலத்திலும் இறைவனைக் கண்டின்பெய்த முன்வரவேண்டும். எம் நாட்டின் இயற்கையோ அவற்றினையடைவதற்கு மிகவும் இடங்கொடுக்கும். ஆனபடியால் இந்த ஆச்சிரமத்தில்வந்து குழுமிய ஆசிரியர்களும் மாணவர்களும் ஒவ்வொருநாளும் தமது மனங்களைக் கடவுளை உணர்வதில் செலுத்தி வருகிறார்கள் என்பதையும் அவர்கள் அப்படியாகச் சிந்தையைச் செலுத்துவது தம்மிடத்திற் கருகாமையிற் சூழ்ந்து விளங்கும் இயற்கையின் வன்மையாலேயாம் என்பதையும் யான் எனது அநுபவ வாயிலாக அறிவேன். அவர்கள் இங்கு கடவுளின் சம்பந்தத்தோடு வாழ்ந்த ஒரு பெரியாரின் மங்கா நினைவையும் மனத்துட்கொண்டு வாழுகின்றார்கள்.

என்னுடைய கழகத்தின் கல்வி கற்பிக்கும் முறைகளில், இவ்வளவுகாலமாக யான், குழந்தைகளின் மனோதன்மையை அறிந்த அநுபவத்தின் பயனாக ஓர் முறையைக் கையாள முற்பட்டு வந்திருக்கிறேன். பின்னர்க்கூறியாங்கு சிறார்களுடைய மனம் அவர்களுடைய புத்தியிலும் பார்க்கக்கூடிய தொழிற்பாடுடையதாக இருக்கின்றதென வெண்ணுகின்றேன். இதனை உள்ளிட்டே, மிகவும் தேவையான பாடங்கள் யாவும் எங்களுக்கு மேற்கூறிய முறையானே ஊட்டப்பட்டு வந்தது. இதனாலே எங்களுக்கு மகிழ்ச்சியோடு பலதிறப்பட்ட அநுபவங்களும் இனிதாகப்புகுத்தப்பட்டன. இந்த, பூரணமற்ற புத்தியின் தன்மையானது எங்களுடைய ஆன்மாவோடு முற்றாகக் கலந்துளதேயன்றி வேறல்ல. அதுகொழுத்தப்பட்டு கூட்டவோ குறைக்கவோ கூடிய தன்மைவாய்ந்த விளக்குப்போன்ற தொன்றல்ல. ஆனால் ஒரு மின்மினி தனதுஉயிர்த்தன்மையால் பெற்றிருக்கும் ஒளியைப் போன்றதேயெனக் கூறலாம்.

(தொடரும்)

# மகாநாடுகள்

"இந்துவாலிபன்" எழுதுவது

யாழ்ப்பாணத்திலும் ஆண்டுக்கொருமுறையாவதொரு மகாநாடு மார்கழி விடுமுறை நாட்களில் நடைபெறுவது வழக்கம். அங்ஙனம் இம்முறையும் நடைபெறுமென எதிர்பார்த்திருந்த யான் ஏமாற்றமடைய வேண்டியதாயிற்று. அகில இலங்கை இந்துமகாநாடு கடந்த இரண்டு ஆண்டுகள் சிறப்பாக நடைபெற்றதைக் குறித்து இந்துக்கள்பெருமைபாராட்டற் கிடமுண்டு. ஆனால் சென்ற மார்கழியில் இம்மகாநாடு கூடாது விட்டமை வருந்தற்பாலது. இந்து சமயத்தில் அழுந்திய பற்றும் ஆராயச்சித்திறனும் ஒருங்கமையப் பெற்ற அறிஞர்கள் நமது தாய்நாட்டில் பலருண்டு. எனவே தலைமை வகிக்கும் ஒருவரைத் தெரிந்தெடுக்க இயலாமைபற்றி மகாநாடு கூடிற்றிலதெனக் கொள்ளற்கிடமில்லை. மகாநாடுகள் பெரும்பாலும் நிறைவேறுதொழிதற்குக் காரணம் ஊக்கமின்மையும் ஆதரவின்மையும் என்றே தெரிகின்றது. மகாநாடு ஆண்டுதோறும் செவ்வனே நடைபெறவேண்டுமென்னும் விருப்புடைய ஒரு சிலர் தமது பணச் செலவிற்றானே இரண்டு மூன்று முறை கூட்டங்களை நிறைவேற்றி முடிக்கலாம். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் அங்ஙனம் செய்தல் இலகுவான காரியமன்று. ஊரவர்களின் உதவியும் ஊக்கமும் வேண்டும். ஒரு நற்காரியத்தைத் தொடங்குபவரே முழுப் பணப்பொறுப்பையும் சில சமயங்களில் ஏற்கவேண்டி நேரிடுகின்றது. இதனால் இவருக்கு இக்காரியத்தைத் தொடங்கும் பொழுதிருந்த ஆர்வம் சிறிது சிறிதாக அருகத் தொடங்கிச் சில ஆண்டுகள் கழிந்தபின் இருந்த இடமும் தெரியாது மறைந்து விடுகின்றது. இங்ஙனம் தோன்றி மறைந்த மகாநாடுகள் பலவுண்டு. ஆனால் இலங்கையில் உள்ள இந்துக்கள் ஆண்டுக் ,கொருமுறையேனும் ஒரு மகாநாட்டைக் கூட்ட முடியாது விடுதல் அவர்களின் சமயப்பற்றின் சால்பினைக் காட்டா நிற்கின்றது. சமய ஆராய்ச்சியில் பல்லாண்டுழைத்த பேரறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டின்புறற்கும் அவர்களைக் கண்ணாரத் தரிசித்து மகிழ்தற்கும் வாய்ப்புடைய இடம் மகாநாடேயாம். இன்னும் இலங்கையிலுள்ள சைவத் தமிழ்வித்துவான்களின் ஆற்றலை நம் இந்திய அறிஞர்களும் கேட்டுக் களித்தற்கும் தாய்நாட்டறிஞர்களை இவர்கள் கேட்டின்புறற்கும் இவ்விரு திறத்தாரும் பல துறைகளிலும் அளவளாவி இன்புறற்கும் இவர்கள் யாவரையும் பொதுமக்களாய் எம்போன்றார் கேட்டின்புறற்கும் மகாநாடு இடமளிக்கின்றதன்றோ? இம்முறை திருவண்ணாமலையில் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் ஆதரவில் நடைபெற்ற சைவர்மகாநாட்டில் தலைமைவகித்தவர் யார்? ஈழத்தாயின் அருந்தவப் புதல்வராய உயர் திரு. சுவாமி விபுலாநந்தரவர்கட்கு இந்திய மக்கள் செய்த மரியாதை எம்மவர்களாற் கனவிலும் நினைக்க முடியாதென்றே திடமாய்க் கூறுவேன். இந்தியாவில் ஒரு கவர்னரை வரவேற்றதுபோலப் பல சந்திகளிலும் பந்தலிட்டு மிகச் சிறப்பாக வரவேற்றனர். கல்விக்கேற்ற மரியாதை செய்யுமிடம் பாதகண்டமென்பதற் கையமுண்டோ? இலங்கையிலுள்ள வித்வான்கள் சிலர் இச்சைவர் மகாநாட்டிற் கலந்து சொற்பொழிவாற்றல் வேண்டுமென்பதே எமது விருப்பம். இதனாலேற்படும் நன்மைகள் அளப்பில. இந்துக்கள் எவ்விடத்திருந்தாலும் சமயவளர்ச்சியைப் பற்றிய விஷயத்தில் ஒத்துழைக்க முன்வரல் வேண்டும். சைவசித்தாந்த மகா சமாஜமும் அகில இலங்கை இந்து மகாநாடும் ஒத்துழைப்பதால் அதன் அங்கத்தவர்களுட் சிலர் ஆண்டுதோறும் இவ்வூருக்கு வந்து சொற்பொழி வாற்றற்கும் இதன் அங்கத்ததவர் சிலர் இந்தியாவுக்குச் சென்று அங்ஙனமே செய்வதற்கும் வசதியேற்படும்.

யாழ்ப்பாணத்தில் சமயத்தை வளர்க்கும் உயர்தரப் பத்திரிகையின்மையால் எமது வித்வான்களுட் பலரை இந்திய நாட்டார் அறியாது விட நேரிடுகின்றது. இக்குறைபாடு நிறைவேறற்கும் மகாநாடு நடைபெறல் ஓர் வாயிலாகும்.

அகில இலங்கை இந்து மகாநாடுதான் ஏதோ சில எதிர்பாராத காரணங்களை முன்னிட்டு நடைபெறவில்லையென வைத்துக் கொள்வோம். வேறோர் மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென எதிர் பார்த்திருந்தேன். சமயத்தைப் பற்றி யில்லாவிடினும் மொழியைப் பற்றியாவது யாழ்ப்பாண அன்பர்கள் ஊக்கமெடுக்கமாட்டார்களாவென ஆவலோடு 'ஈழகேசரி' வெளியீட்டைப் பார்ப்பதுண்டு. மார்கழி 22-ம் திகதி வரையும் ஓர் அறிவிப்பும் வெளிவராமையால் யாழ்ப்பாணத்தில் புலவர் மகாநாடும் விடுமுறை நாட்களில் நடைபெறுமென உணர்ந்தேன். சரி, இதுதான் இல்லையென்றாலும் சின்னத்தம்பிப் புலவரின் இருநூறுவது ஆண்டுவிழாவாவது நடைபெறுமோவென எதிர்பார்த்ததுமன்றிப் பலரையும் இடைக்கிடை உசாவியும் வந்தேன். எத்தனையோ பரிசுகள் வழங்குவதாகவும் குறிப்பிட்டிருந்தமையால் ஏதாவதொரு நாமத்துடன் ஒரு கூட்டம் கட்டாயம் நடைபெறுமென எமது நண்பர்கள் பலர் குறிப்பிட்டிருந்தமையால், அத்தகைய கூட்டத்தை எதிர்பார்த்திருந்தேன். அதுதானும் இவ்விடுமுறையில் நிகழாதென உணர்ந்தபின் யாழ்ப்பாணத்திற்குச் செல்வதில் அதிகம் விருப்பமுண்டாகவில்லை. மகாநாடுதான் இல்லையென்றாலும் சங்கீதவித்துவான்கள் சேர்ந்து ஒரு சமயம் ஏதாவதொரு கச்சேரி நடத்தக்கூடும். சங்கீத அபிவிருத்திக் கழகம் பலவுண்டு. இவற்றுள் ஒன்றாவது மார்கழியில் கச்சேரி நடத்தக்கூடுமென எதிர்பார்த்தேன். அதுவும் சரிவரவில்லை. இங்ஙனம் கவலைகொண்டிருக்கும் பொழுது எமது நண்பரொரு

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

# அரசாங்க சபைத் தெரிவு.

இலங்கையில் பற்பல தெரிவுப் பகுதிகளில் தேர்தல் பின் குறிக்கப்படும் திகதிகளில் நடைபெறுமென 'கஜெற்'பத்திரிகையில் அறிவிக்கப்படுகிறது. தெரிவு 43 பகுதிகளில் நடக்கவிருக்கின்றன. எல்லாப்பகுதிகளிலும் அபேட்சகராக முன்வந்து போட்டிசெய்வோர் தொகை 117. பெப்ரவரிமீ பிற்பகுதியிலும் மார்ச்சுமாத முற்பகுதியிலும் தெரிவுகள் நடந்து முடிவெய்துமாம். புதிய அரசாங்கசபை கூடவிருக்கும் தினம் மார்ச்சுமீ 10-ம் திகதியாகுமென முன்னர் அறிவிக்கப்பட்டுள்ளது.

**பெப்ரவரி 22-ம்உ**—பருத்தித்துறை, பலப்பிட்டியா, கொழும்பு வடக்கு, கொழும்பு மத்தி, கொழும்பு தெற்கு, நீர்கொழும்பு, பாணந்துறை, மாத்தளை, திரிகோணமலை, மட்டக்களப்பு வடக்கு, இரத்தினபுரி, கமலா, பண்டாரவளை.

**பெப்ரவரி 24-ம்உ**—கலகெதரு.

**பெப்ரவரி 25-ம்உ**— யாழ்ப்பாணம், காலி, ஹொரணை.

**பெப்ரவரி 26-ம்உ**—உடப்புரு.

**பெப்ரவரி 27-ம்உ**— காங்கேசன்துறை, உடுகமம், மத்துகமம், வதுளை.

**பெப்ரவரி 28-ம்உ**— கம்பளை, ரூவான்வெலை.

**பெப்ரவரி 29-ம்உ**— மட்டக்களப்பு தெற்கு, அவிசாவலை, களுத்துறை, கண்டி, வெலிகமம், புத்தளம்.

**மார்ச்சு 2ம்உ**—ஹற்றன்,டெடிகமம்.

**மார்ச்சு 3ம்-உ**— கம்பஹா, மொறவாக்கை, காட்டுக்கம்பளை.

**மார்ச்சு 5-ம்உ**— தலவாக்கொல்லை, மாத்துறை, பிபிலி, கேகாலை.

**மார்ச்சு 7ம்உ**— அம்பாந்தோட்டை, மன்னார், முல்லைத்தீவு, நுவரெலியா, முறட்டுவா.

### காங்கேசன்துறைப்பகுதி

(1) உடுவில் அமெரிக்கன் மிஷன் பெண் ஆங்கில வித்தியாசாலை – **ஆண்களும் பெண்களும்.**

உடுவில், இணுவில், சுன்னாகம். (பொலிஸ் விதானைமார் பகுதி)

(2) மல்லாகம் பொலிஸ்கோடு – **ஆண்களும் பெண்களும்.**

ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், மல்லாகம், அளவெட்டி. (பொ. வி. பகுதி)

(3) தெல்லிப்பளை மகாஜன ஆங்கில வித்தியாசாலை – **ஆண்கள்.**

(4) தெல்லிப்பளை மகாஜன தமிழ்ப்பாடசாலை – **பெண்கள்.**

தெல்லிப்பளை வடமேற்கு, தென்மேற்கு கிழக்கு, கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை, வீமன்காமம், கட்டுவன். (வி. ப.)

(5) மயிலிட்டி வடக்கு கிராமக்கோடு – **ஆண்கள்.**

(6) மயிலிட்டி தெற்கு பாலர்ஞானோதய சங்க வித்தியாசாலை – **பெண்கள்.**

வயாவிளான், மயிலிட்டிவடக்கு,பலாலி, கடற்கரை, பளை. (வி. ப.)

(7) கோப்பாய்தெற்கு சேட்ச் மிஷன் பாடசாலை – **ஆண்களும் பெண்களும்.**

நீர்வேலி, உரும்பராய், கோப்பாய் வடக்கு தெற்கு. (வி. ப.)

(8) புத்தூர் 'மெதடிஸ்ற்' தமிழ்க் கலவன் பாடசாலை –**ஆண்களும் பெண்களும்**

புத்தூர் கிழக்கு மேற்கு, சிறுப்பிட்டி. (வி. ப.)

(9) அச்சுவேலி அமரிக்கன் மிஷன் ஆங்கில பாடசாலை – **ஆண்களும் பெண்களும்**

பத்தைமேனி, அச்சுவேலி. (வி. ப.)

### யாழ்ப்பாணப்பகுதி

(1) சிவியாதெரு துவிபாஷா பாடசாலை– **ஆண்களும் பெண்களும்.**

சிவியாதெரு கிழக்கு மேற்கு, கொழும்புத்துறை கிழக்கு மேற்கு. (வி. ப.)

(2) கரையூர் செயின் ஜேம்ஸ் ஆண்பாடசாலை – **ஆண்கள்.**

(3) கரையூர் செயின் ஜேம்ஸ் பெண்பாடசாலை – **பெண்கள்.**

கரையூர் (வி. ப.)

(4) வண்–தென்மேற்கு கொட்டடி நமசிவாய வித்தியாசாலை – **ஆண் பெண்.**

சோனகதெரு, வண்ணார்பண்ணை வடமேற்கு தென்மேற்கு. (வி. ப.)

(5) நல்லூர் சேட்ச் மிஷன் ஆண்பாடசாலை – **ஆண்கள்.**

(6) நல்லூர் சேட்ச் மிஷன் பெண்பாடசாலை – **பெண்கள்.**

நல்லூர், திருநெல்வேலி. (வி. ப.)

(7) வண்ணார்பண்ணை கிழக்கு இந்துக்கல்லூரி – **ஆண்கள்.**

(8) ஷை. தமிழ்ப்பாடசாலை – **பெண்கள்.** வண்ணார்பண்ணை கிழக்கு. (வி. ப.)

(9) கொக்குவில் இந்து ஆங்கில பாடசாலை – **ஆண் பெண்.**

கொக்குவில் (வி. ப.)

(10) கோண்டாவில் இந்து தமிழ்ப்பாடசாலை–**ஆண் பெண்.**

கோண்டாவில் (வி. ப.)

(11) கைதடி சேட்ச் மிஷன் ஆங்கில பாடசாலை – **ஆண் பெண்.**

கைதடி, கைதடி–நுணுவில், கோயிலாக்கண்டி, மறவன்புலவு. (வி. ப.)

(12) சாவகச்சேரி பொலிஸ்கோடு – **ஆண்**

(13) சாவகச்சேரி கிராமக்கோடு –**பெண்**

சாவகச்சேரி வடக்கு தெற்கு, மீசாலை வடக்கு தெற்கு, நுணுவில், தனங்கிளப்பு (வி. ப.)

(14) மட்டுவில் வடக்குக் கமலாசனி வித்தியாசாலை – **ஆண் பெண்.**

மட்டுவில் வடக்கு தெற்கு,சரசாலை.(வி.ப.)

(15) கொடிகாமம் திருநாவுக்கரசுநாயனர் வித்தியாசாலை – **ஆண் பெண்.**

எழுதுமட்டுவாள், கச்சாய், கொடிகாமம், மிருசுவில், உசன். (வி. ப.)

(16) வரணி – இயற்றாலை கிராமக்கோடு– **ஆண் பெண்.**

இடைக்குறிச்சி, மந்துவில், நாவற்காடு, வரணி வடக்கு, வரணி–தவலை–இயற்றாலை (வி. ப.)

### பருத்தித்துறைப் பகுதி

(1) குடத்தனைகிராமக்கோடு-ஆண்,பெண்

அம்பன், குடியிருப்பு, குடத்தனை–கரையூர், நாகர்கோயில். (வி.ப)

(2) பருத்தித்துறைத் துறைமுகக் கட்டடம் – **ஆண் பெண்.**

கற்கோவளம், பருத்தித்துறை, புலோலி கிழக்கு தெற்கு மேற்கு, தும்பளை (வி. ப.)

(3) அல்வாய் தெற்கு சைவத் தமிழ்ப்பாடசாலை – **ஆண் பெண்.**

அல்வாய் வடக்கு,தெற்கு,மேற்கு(வி. ப)

(4) கரவெட்டி கிழக்கு உவெஸ்லியன் மிஷன் பாடசாலை–**ஆண்**–பெண்.

கரவெட்டி கிழக்கு–வடக்கு–மேற்கு, துன்னாலை–வடக்கு–தெற்கு.(வி. ப.)

(7) வல்லுவெட்டித்துறை சிதம்பர வித்தியாசாலை–ஆண்–பெண்

கெருடாவில், பொலிகண்டி, தொண்டமானாறு, வல்லுவெட்டி, வல்லுவெட்டித்துறை. (வி. ப.)

(8) காரணவாய் வடக்கு சைவப்பாடசாலை – **ஆண்கள்.**

(9) உடுப்பிட்டி கிராமக்கோடு-**பெண்கள்**

கரணவாய் வடக்கு, தெற்கு, தனக்காரகுறிச்சி. (வி. ப.)

(10) பளை, கிராமக்கோடு – ஆண் - பெண்.

செம்பியன்பற்று, மருதன்கேணி, இட்டாவில், கிளாலை, முகமாலை சண்டிகுளம், கோயில்வயல், முள்ளியன் மூகால்,புலோப்பளை, சோரன்பற்று. (வி. ப.)

(11) கிளிநொச்சி, அரசினர் பாடசாலை – ஆண்கள் பெண்கள்

கண்டாவலை, புளியம்பொக்கணை, கிளிநொச்சி, பரந்தன், தட்டுவான்கொட்டி, ஊரியன். (வி. ப.)

(12) பூநகரி, மட்டுவில்நாடு, மாகாணத்தெருச் சங்கமடம் –ஆண்கள் பெண்கள்

செட்டியாக் குறிச்சி, கௌதாரிமுனை, கொல்லக் குறிச்சி, மட்டுவில்நாடு, நல்லூர்.

(13) பொன்னாவெளி இந்துகலவன் பாடசாலை –ஆண்களும் பெண்களும்

இரணைதீவு, மண்ணியாக்குளம், பொன்னாவெளி. (வி. ப.)

(14) துணுக்கை மாகாணத் தெருச்சங்க மடம்–ஆண்களும் பெண்களும்

துணுக்கை விதானையின் பகுதி.

### மன்னார் முல்லைத்தீவுப்பகுதி.

(1) மன்னார்க்கச்சேரி–ஆண்கள்.

(2) மன்னார், P. W. D. பண்டகசாலை–பெண்கள்

மன்னார் (வி. ப.)

(3) எருக்கலம் பிட்டி அரசினர்பாடசாலை ஆண்கள்.

(4) எருக்கலம்பிட்டி சேர்க்கிற் பங்களா பெண்கள்.

எருக்கலம்பிட்டி, தொட்டைக்காடு, தொட்டவேலி (வி. ப.)

(5) பேசாலை கத்தோலிக்க பாடசாலை– ஆண்களும் – பெண்களும்.

ஓலைத்தொடுவாய், பேசாலை, தலைமன்னார். (வி ப.)

(6) உயிலன்குளம் சேர்க்கிற் பங்களா (Circuit Bungalow) ஆண் – பெண்

கள்ளிகட்டைக்காடு, பரம்பன்கண்டல், பெரிய நாவற்குளம். (வி. ப.)

(7) முருங்கன் கிராமக்கோடு–ஆண்-பெண்

முருங்கன் பன்னைவெட்டுவன், பெரிய முறிப்பு, புளியடி யிறக்கம். (வி. ப.)

(8) வங்காலைக் கத்தோலிக்க பாடசாலை ஆண்களும் பெண்களும்.

நானாட்டான், நறுவிலிக்குளம், பெரியகட்டைக்காடு, வங்காலை. (வி.ப.)

(9) முசலி அரசினர் பாடசாலை–ஆண்களும் – பெண்களும்

அகத்திமுறிப்பு, அரிப்பு, கொக்குப்புடையன் மெற்றன்வேலி, சிலாபத்துறை(வி.ப.)

(10) மறிச்சுக்கட்டி, சேர்க்கிற் பங்களா– ஆண்களும் – பெண்களும்

மறிச்சுக்கட்டி (வி. ப.)

(11) விடத்தல் தீவு அரசினர் பாடசாலை- ஆண்களும் – பெண்களும்

அத்திமோட்டை, இலுப்பைக்கடவை, வெள்ளாங்குளம், விடத்தல் தீவு (வி, ப.)

(12) நாட்டான் கந்தல் அரசினர்பாடசாலை – ஆண்களும் – பெண்களும்,

முண்டுமுறிப்பு, வன்னி – விளான்குளம் (வி. ப.)

(13) இரணை – இலுப்பைக்குளம், அரசினர்பாடசாலை–ஆண்களும் பெண்களும்.

இரணை – இலுப்பைக்குளம், பாலம்பிட்டி (வி. ப.)

(14) அடம்பன் கிராமச்சங்கக் கட்டிடம் – ஆண்களும் – பெண்களும்.

ஆலைக்கட்டிவேலி நெடுங்கந்தல் (வி.ப.)

(15) முல்லைத்தீவுக் கிராம றிபியூனல் கட்டிடம்–ஆண்கள்

(16) முல்லைத்தீவு கத்தோலிக்க பாடசாலை –பெண்கள்.

முள்ளியவளை, காரைக்காட்டுமூலை வடக்கு (உடையாரின் பகுதி)

(17) புதுக்குடியிருப்பு 'சேட்ச்'மிஷன்பாடசாலை – ஆண்களும் பெண்களும்

புதுக்குடியிருப்பு, (உடை. ப.)

(18) குமுளமுனை சேர்க்கிற் பங்களா– ஆண்களும் – பெண்களும்

அலம்பில், ஆனந்தன்குளம், செம்மாலை,குமுளமுனை (பொலிஸ்விதானைப்பகுதி, இலக்கம்234)காரைக்காட்டுமூலைதெற்கு(உ ப.)

(19) கருநாட்டுக்கேணி, அரசினர் (மேற்பார்வை) வித்தியாசாலை – ஆண்களும் பெண்களும்.

கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், (வி.ப. இலக்கம் 245) காரைக்காட்டுமூலை தெற்கு, (உ. ப.)

(20) நெடுங்கேணி கிராம 'றிபியூனல்' கட்டிடம். ஆண்களும் – பெண்களும்

மேல்பத்துக்கிழக்கு. (உ. ப.)

(21) காலொழுங்கன்–புளியன் குளம் மாகாண ரோட் கொம்மிற்றி மடம் – ஆண்களும் – பெண்களும்.

மேல்பத்து தெற்துஉடையாவூர், (உ. ப.)

(22) ஒட்டுசுட்டான். மாகாண ரோட் கொம்மிற்றி மடம் –ஆண்களும் – பெண்களும்.

கருநாவல்பத்து தெற்கு, மேல் ... து வடக்கு. (உ. ப.)

(23) வெங்கலச்செட்டிகுளம் அரசினர் (மேற்பார்வை) பாடசாலை – ஆண் பெண்

சின்னச்செட்டிகுளம் மேற்கு கிழக்கு, (தமிழ்) [உ. ப.] சின்னச்செட்டிகுளம் கிழக்கு மேற்கு (சிங்களம்).

(24) வவனியா கோட் கட்டிடம் –ஆண்கள்

(25) வவனியா அரசினர்பாடசாலை-பெண்

சின்னச்செட்டிகுளம் மேற்கின் சுடுவெந்தப்புலவு என்னும் குறிச்சியும் (தமிழ்) கிழக்குமுகாலை தெற்கு (சிங்களம்) கோறளையின் பகுதிகள், கிழக்குமுகாலை தெற்கு (தமிழ்) நடுச்செட்டிகுளம் (உ. ப.)

(26) இறம்பைக்குளம் பி. டபிள்யு. டி. சேர்கிற் பங்களா – ஆண் பெண்.

கிழக்குமுகாலை வடக்கு. (உ. ப.)

## விவாகம்

யாழ்ப்பாணத்துப் புலோலியில் உயர்தரக் குடும்பத்திலுள்ளவரும் சிதம்பரம் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் ஐந்துவருஷங்கள் உயர்தரக்கல்விகற்று உயர்தரப் பட்டம் பெற்றவரும், தற்காலம் சாவகச்சேரி சின்னத்தம்பி மெமோரியல் றையினிப் ஸ்கூலில் (ஆசிரியகலாசாலையில்) தமிழ் புலமை நடாத்துபவருமாகிய திருவளர் செல்வன் வித்துவான் க. முருகேசபிள்ளையவர்களுக்கும், உடுவிலில் சிறந்த குடும்பமாக விளங்கிவரும் விதானை காசிநாதர் பௌத்திரியும் சபாபதிப்பிள்ளையின் புத்திரியுமாகிய, சௌபாக்கியவதி தமிழாசிரியை தங்கரத்தினம் அம்மாளுக்கும் சில தினங்களுக்கு முன்பு விவாகம் நடைபெற்றதறிந்து மகிழ்வடையலானோம். தம்பதிகளிருவரும் நீண்ட ஆயுளுடனிருந்து தமிழ்த்தொண்டாற்றித் தமிழ் நாட்டிற்கு நன்மைபுரிய இறைவன் திருவருள் பாலிப்பானாக.

ந. நி.

## அதிசயமான கலியாணம்

ஸங்காய்.

சீனாவில் "குவாங்ரங்" என்னும் மாகாணத்தில் "நான்ஒன்" என்னும் பிரிவிலிருக்கும் கிராமமொன்றில் உலகத்தில் ஒருபோதும் நடந்திராத கலியாணம் ஒன்று நடைபெற்றது. மனைவியையிழந்த 40 வயதுடைய ஒருஆடவனும் அவனின் 3 குமாரர்களும் ஒரு புருஷனில்லாத 40 வயதுடைய ஒரு கைம்பெண்ணையும் அவளின் 3 குமாரத்திகளையும் ஒரே நாளிற் கலியாணஞ் செய்து கொண்டனராம்.

## கள்ளநோட்டுகள்

இப்போது இலங்கையில் கள்ளநாணய நோட்டுக்கள் அதிகமாகப் பரவ ஆரம்பித்து விட்டன முக்கியமாகப் 10 ரூபாய் நோட்டுகளிலேயே கள்ள நோட்டுக்கள் இருக்கின்றன. பொக்கிஷ சாலையிலும் அப்படிப்பட்ட நோட்டுகள் அகப்பட்டிருக்கின்றன. பொது ஜனங்கள் இது விஷயத்தில் ஏமாந்து போகாமலிருக்கும்படி அரசினர் எச்சரிக்கை செய்கின்றனர். திருட்டு நோட்டுகளின் பின்னால் உள்ள ஊதாவர்ணம் சரியான நோட்டுகளில் உள்ளதைவிட மங்கலாக இருக்கின்றது. மற்றும் அவற்றில் காணப்படும் இலக்கங்களும் தெளிவாக இல்லை.

# அரசாங்க சபைக்கு அங்கத்தவரைத் தேர்தல்.

(V. S. M.)

பெரிய பிரித்தானியாவிலுள்ள பாராளுமன்றத்திற்குப் பொது ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தனுப்பும் உரிமை ஏறக்குறைய ஆயிர வருடங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு முன் உற்பத்தியாகி, காலகதியில் பற்பலமாற்றமடைந்து, இக்காலத்தில் சில வருடங்களுக்குமுன்தான் இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட ஆண்பாலார் பெண்பலார்யாவரும் தங்கள் வாக்குரிமையைப் பாவித்துத் தத்தம் பிரதிநிதிகளைத் தெரிந்தனுப்பும் சலாக்கியத்தைப் பெற்றனர். ஆனால் இலங்கையிலோ, வாக்குரிமைபாவிக்கும் உரித்து, ஏறக்குறைய இருபத்துநாலு வருடங்களுக்கு முன்தான் தொடக்கமானது. அப்போது நாலு பிரதிநிதிகளைத் தெரிந்துகொள்ளவும் அதிலும் ஐரோப்பியர் 2 பிரதிநிதிகளையும், பேக்கர் 1 பிரதிநிதியையும், பெருந்தொகையினராகிய சிங்களர், தமிழர், மகமதியர், இந்தியராகிய எல்லாருஞ்சேர்ந்து ஓரளவான ஆங்கிலம் கற்றவரே தங்கள் வாக்குரிமையைப் பாவித்து 1 பிரதிநிதியையும் தெரிந்துகொள்ளும் உரித்தை முதன்முதல் பெற்றனர். அதன்பின் இருமுறை சிற்சில மாற்றங்கள் அடைந்தபின் 20 வருடங்கள் பூர்த்தியாகுமுன்—இவ்வளவு சொற்பகாலத்துக்குள்—டொனமூர் திட்டத்தின்படி யாதொரு தாரதாக் கவனிப்புமின்றி, இருபத்தொரு வயதுக்குமேற்பட்ட ஆண்பாலார் பெண்பாலார் யாவரும் வாக்குரிமைபாவிக்கும் உரித்தைப்பெற்றனர். சர்வசன வாக்குரிமை பெற்றிருப்பதனால் சனங்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும் ஆற்றல் உடையவர்களாய் இருப்பதையே எவருங் காத்திருப்பர். அதுவும் எல்லா விஷயங்களிலும் கூடிய காரியமல்ல.

அரசாங்க சபைக்கு அங்கத்தினரைத் தெரிந்தனுப்புவதில் வாக்குரிமையைப் பாவிக்கும் ஒருவன் (அல்லது ஒருத்தி) அரசாங்க விஷயங்களில் தனது அபிப்பிராயங்களுக்கொத்த அபிப்பிராயமுடைய ஒருவருக்கே தனது வாக்குரிமையைக் கொடுப்பான் (கொடுப்பாள்). அவ்விதம் அரசாங்க விஷயங்களில் அபிப்பிராயங்கள் உடையவராயிருப்பதற்கு வாக்குரிமை உடையோர் கல்வியறிவு உடையோராய் இருத்தல் அவசியம். முன்னேற்றமானதேசங்களில் பெருந்தொகையினர் கல்விகற்றவராயும் மிகச் சிலரே கல்வியற்றவராயுமிருக்கிறார்கள். இலங்கையிலோ குறைந்த தொகையினரே கல்வியறிவுடையோராயும் கூடிய தொகையினர் கல்வியறிவற்றவராயுமிருக்கிறார்கள். கல்வியறிவில்லாவிடினும் அரசியல் ஞானமுடையோர் அரசியல் ஞானமில்லாதோரை அரசியல் ஞானமுடையோராக்கும் வழிவகைகளுமுண்டு. அது எவ்வாறாகுமெனின் அரசியல் ஸ்தாபனங்களினால்தான். அந்த ஸ்தாபனங்களும் கட்சிஸ்தாபனங்களாகவே இருக்கவேண்டும். ஒருபகுதியின் கட்சி ஸ்தாபனம் அப்பகுதியின் கீழ்ப்பிரிவுகளில் கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, அவ்வவ்விடங்களில் அரசியல் விஷயங்களில் தம் கட்சியின் அபிப்பிராயங்களை பிரசாரணவாயிலாய் வெளிப்படுத்துவதினாலேயே அரசியல் ஞானத்தை அரசியல் ஞானமில்லாதோருக்குள் உண்டுபண்ணலாம். இவ்வித ஸ்தாபனங்கள் கட்சி ஸ்தாபனங்களாய் இருக்கவேண்டிய அவசியம் யாதெனின், மனுஷர் எல்லா விஷயங்களிலும் ஒரே கருத்துடையவர்களல்ல.

ஆகிலும் பொது விஷயங்கள் பலவற்றில் சார்பும் மறுப்புமென இருபகுப்பான அபிப்பிராயங்களேயுண்டு. ஆகலால் தொழிற்கட்சி ஏற்படுமுன் பெரிய பிரித்தானியாவில் புராதன கட்சி நவீன கட்சியென இருந்ததுபோல இருகட்சிகள் இருத்தலே உத்தமம். கட்சிகள் இருக்குமாயின் ஒவ்வொரு கட்சியும் தங்கள் அபிப்பிராயங்களைத் திறமையுடன் வெளிப்படுத்தி வாதாடக்கூடிய ஒருவரையே தப்பகுதியில் தங்கள் அபேட்சகராக அழைத்து தேர்தலுக்கு நிற்கச்செய்வர். அப்படியில்லாமையினாலேயே அரசாங் சபை அங்கத்தவராய் வரவிருப்புற்றோர் தான் தானே வெளிப்பட்டு என்னைத் தெரிவு செய்யுங்கள்; எனக்கு உங்கள் வாக்குரிமையை (Vote) க்கொடுங்கள் என்று கொளரவக்குறைவான முறையாகக் கிரிகைசெய்யும் அவசியம் நேரிடுகிறது. ஆதலால், பொதுஜனங்கள் அல்லது அவர்களை நடத்தக்கூடியவர்கள் அவ்வப்பகுதிகளில் கட்சிஸ்தாபனங்களை ஏற்படுத்துவது தகுதி. அவர்கள் அப்படிச்செய்யாவிடின் அரசாங்கசபை அங்கத்தவராய் வரவிருப்புற்றோர், அவ்வப்பகுதிகளின் சனங்களை ஒருங்கு சேர்த்து அவர்களுக்குத் தங்கள் கொள்கைகளையும் போக்கையும் வெளிப்படுத்தித் தங்கள் போக்குக்கு இசைந்தோர் எல்லாரையும் ஒரு கட்சியாக்கலாம். அப்படி ஒரு கட்சியை அமைத்தவருக்கு மாறாய் வெளிப்படும் அபேட்சகர் மாறான போக்கை யுடையவராய் இருப்பின் தமது போக்குக்கிசைந்தோரைச் சேர்த்து மறுகட்சியை ஏற்படுத்தலாம். டொனமோர் அரசியல் முறைத் திட்டப்படி கருமகர்த்தர் கூட்டங்களே (Committee System) அரசியல் நடத்தவும் கூடியதொகையினரையுடைய கட்சியின் தலைவரே அமைச்சராகி, உதவி அமைச்சர்களையும் நியோகித்து அரசியல் நடத்தும்முறை கொடுபடாதிருப்பதால், கட்சிஸ்தாபனங்கள் ஏன் என்னும் கேள்வி நிகழக்கூடும். கட்சிஸ்தாபனங்கள் இல்லாமையினாலேயே கருமகர்த்தர் கூட்டமுறையை ஏற்படுத்துகின்றோமென டொனமூர்க் கொமிசனர்கள் தங்கள் அறிக்கையில் வெளியிட்டிருக்கின்றனர். ஆகையால் இனிவரும் அரசியல் மாற்றத்தில் கருமகர்த்தர் கூட்டமுறை (Committee System) நீக்கப்பட்டு அதனிலும் உசிதமானமுறைஏற்படுவதற்குகட்சிஸ்தாபனங்கள் அவசியம். மேலும் இந்தியாவில் கூடிய தொகையினரையுடைய கட்சியின் தலைவர், பிரதம அமைச்சராகும்முறை ஏற்படுமுன்னே, கட்சிகள் ஒவ்வொரு மாகாணங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன. ஆதலால் இம்முறைத் தேர்தலுக்குமுன் கட்சிஸ்தாபனங்கள் நிறுவுதல் கூடாதாயினும் வருங்காலத்துக்கு உபயோகப்படத்தக்கதாக அவ்வித ஸ்தாபனங்களை ஏற்படுத்த முயற்சிக்கும்மாறு பத்திராசிரியர்களையும் சனசங்கத்தலைவர்களையும் வேண்டுகின்றேன்.

மேலும் இம்முறைத் தேர்தலுக்குப் போட்டியாய் நிற்கும் அபேட்சசர்கள் அந்தந்தப் பகுதியில் பற்பலஇடங்களில் அரசியல் விஷயங்களில் தத்தம் போக்கை வெளிப்படுத்தி ஆங்கிலத்திலும் தமிழிலும் பிரசங்கங்கள் நிழ்த்துமாறு வேண்டுகின்றேன்.

# அபிசீனிய மகாயுத்தம்.

## மத்தித்தரைக்கடலில் யுத்த ஆயத்தம்.

## பிரான்சிய அரசியலில் மாற்றம்.

## இத்தாலிய நண்பராகும் லவாலின் மறைவு.

## அபிசீனியாவில் கட்டாய இராணுவச்சட்டம்.

## பெற்றோல் விஷயமாக நடபடிக்கை விரைவிலேற்படுமா?

### அலெக்சான்றியா துறைமுகம் அரண்செய்யப்படுகின்றது.

மத்தித்தரைக் கடலில் பிறிட்டிஷாருக்கும் இத்தாலியர்க்கு மிடையில் யுத்தம் நிகழ்ந்தால் பிரான்ஸியர் பிறிட்டிஷாருக்கு உதவிபுரிவதாக முன்னரே கூறியுள்ளார். இப்போது வேறுஞ்சில நாட்டினர் இத்தாலியரை எதிர்த்துப் போர்செய்ய முன் வருவதாக வாக்களித்துள்ளார்கள். துருக்கி, கிறீஸ், ஜூக்கோஸிலாவியா ஆகிய நாடுகளே புதிதாக வாக்களித்த நாடுகள். மத்தித்தரைக்கடலில் மாத்திரமன்று பிரான்ஸின் வடகிழக்கெல்லையில் (அதாவது ஜர்மனியருடன்) யுத்தம் ஒருபோது நிகழ்ந்தாலும் மேற்காட்டிய நாடுகள் ஒருங்குசேர்ந்து நிற்பதாக வாக்களித்துள்ளார். இவ்வாறு நிகழ்வதைக்கண்டு இத்தாலியர் சிறிது திகில் அடைகின்றனர். சர்வதேசசங்கத்தினர் நடபடிக்கைகள் கையாண்டதைக் குறித்து இத்தாலியர் எந்நாட்டினரையாவது பயமுறுத்தினது கிடையாதென்றும், விஷயமப்படியாக எதற்காக இவ்வித யுத்த முயற்சிகள் ஐரோப்பாவிலும் நடைபெறுகின்றதெனக் கேட்கின்றனர்.

தெற்குப் போர்முனையில் யுத்தம் செய்யும் ராஸ்டெஸ்ரா என்பவர் சிறிது வடக்கே பின்வாங்கப் போவதாக அறிவிக்கின்றனர். அவ்வாறு செய்யின் இத்தாலியர் முன்னேறுவது கஷ்டமாய் விடுமாம். ஏனெனில் மலைப்பிரதேசங்கட்கூடாக பாரமான பீரங்கிகளும் ராங்கிகளும் நகர்ந்து செல்லவியலாதனவாயிருக்கும்.

தற்போது பிரான்ஸில் அரசியலை நடத்திய அரசியல் கட்சியினர் கலைந்துவிட்டனர். அதாவது லவால் என்பவரைத் தலைமையாகக் கொண்ட அரசியல் விட்டு நீங்கியதெனலாம். இதுவரையும் பிரான்ஸியரின் முதன் மந்திரியாகவும் லவால் வேலை பார்த்து வந்துள்ளார். இவர் இத்தாலியர்மீது சிறிது சார்புடையார். இதுகாரணம்பற்றி இவரது அரசாங்கசபையிலொருவராயிருந்த ஹெறியற் என்பவர் விகாரமடைந்து முன்னரே விலகிவிட்டனர். இனி அமைக்கப்படும் புதிய அரசாங்கசபையை லவால் கூட்ட மறுத்துவிட்டார். இனி யார் முதல்மந்திரியாக வருவாரெனத் தெரியாது. இத்தாலியர்க்கு மாறாக நடபடிக்கைகள் விரைவில் கையாளக்கூடியவரே முன்வருவாரென எண்ணவேண்டியிருக்கிறது. இத்தாலியர்மீது பெற்றோல் விஷயமாக நடபடிக்கை இனி விரைவில் கையாளப்படக்கூடுமெனத் திடமாகக் கூறலாம்.

பெற்றோல் இதுவரையும் கொண்டுசென்ற கப்பல்கள் பிரிட்டன், ஹொல்லந்து, நோர்வே ஆகிய நாடுகளுக்குச் சொந்தமானவை. இந்நாட்டினர் பெற்றோல் ஏற்றிச்செல்லக் கப்பல்கள் உதவுவதில்லையெனச் சொல்லினும் இத்தாலியர் பெருங்கஷ்டமடைவாராம். சர்வதேச சங்கத்தினர் இதுவிஷயமாகவும் முடிவுசெய்யப்போகின்றனர்.

அபிசீனிய அரசர் இப்போது கட்டாய இராணுவ சேவைச்சட்டத்தை அனுட்டானத்தில் கொண்டுவந்துள்ளார். 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் உடனே இராணுவத்தில் சேரவேண்டுமென்பது அச்சட்டத்தின் நோக்கமாகும். இச்சட்டப்படி இப்போ 3,00,000 போர்வீரர்கள் புதிதாக யுத்தத்திற்கு முன்வரக்கூடுமாம். அரசினர் இவர்களுக்குக் குண்டுகளும் துப்பாக்கிகளும் அளிப்பர். யுத்தசேவைக்கு உபயோகமற்ற பெண்களும் மற்றையோரும் யுத்தநிதிக்குப் பணங்கொடுக்கவேண்டும்.

பிரிட்டிஷார் எகிப்து தேசத்தின் பிரதம துறைமுகமாகும் அலக்ஸான்றியா நகரில் போதிய பாதுகாப்புகள் ஏற்படுத்துகின்றனர். துறைமுகம் யுத்தக்கப்பலால் நிறைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றதாம். உயர்ந்த மேடைகளில் அதிக தூரம் பாயக்கூடிய பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கின்றன. ஆகாயக்கப்பல்களைச் சுடும் பீரங்கிகள் அனேகம் நாட்டப்பட்டிருக்கின்றன.

பெற்றோல் விஷயமாக நடபடிக்கைகள் கையாள்வது சடுதியில் என்பது பிறிட்டிஷாரைப் பொறுத்ததாகவிருக்கிறது. காயப்பட்டோர்க்குச் சிகிச்சைசெய்வதற்காக அமைக்கப்பட்ட ரெட்குறொஸ் வைத்தியசாலைகளை இத்தாலியர் ஆகாயவிமானத்திலிருந்து குண்டுபோட்டு அழித்து அநேக உயிர்ச்சேதங்களை உண்டுபண்ணியதைக் குறித்துச் சர்வதேச சங்கத்தினர் ஆலோசனைசெய்வார். அமெரிக்கர், பிறிட்டிஷார், சுவீடின் தேசத்தவர் ஆகிய மூன்று நாட்டினரது வைத்தியசாலைகளும் தாக்கப்பட்டன. முஸோலினி இவ்விஷயமாக ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். வேணுமென்று மேற்படி வைத்தியசாலைகளில் குண்டுகள் போடவில்லையென்றும், இனிமேல் சாவதானமாக இருப்பதாகவுங் கூறுகின்றனர். மேலும் அபிசீனியர் ரெட்குறொஸ் வைத்தியசாலைகளில் போர்வீரர்களைப் பாதுகாப்புக்காக வைத்திருந்தமையாற்றான் தாக்கவேண்டியதாயிற்றென்றும் கூறுகின்றனர்.

தெற்குப் போர்முனையிலுள்ள கொனவிடோறியா என்றவிடத்தில் நடந்த யுத்தத்தில் தாம் 5,000 அபிசீனியரைக் கொன்றுவிட்டதாக இத்தாலியர் கூறுகின்றனர். இது முற்றும் பொய்யென அபிசீனியர் கூறுகின்றனர். இத்தாலிய சேனையில் பலர் நோய்வாய்ப்பட்டுக் கஷ்டமடைகின்றனராம்.


புத்தகங்கள் ! புத்தகங்கள் !!

அச்சுவேலி, ஞானப்பிரகாச யந்திரசாலையில்
அச்சிட்டு வெளியான சகல புத்தகங்களையும்
நான் விலைக்கு வாங்கியிருக்கிறேன்

அம்மானைகள், நாடகங்கள், டிறாமாக்கள்
கீர்த்தனைகள், தபசுகாலத்துக்கேற்ற ஒப்பாரிவகைகள்
வைத்திய நூல்கள் முதலான சகல புத்தகங்களையும்
இனிமேல் என்னிடம் பெற்றுக்கொள்ளலாம்

தொகையாக எடுப்பவர்களுக்கு விசேடமான கழிவு கொடுக்கப்படும்
☞ வீ. பீ. பீ. மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—வ. மூ. சூசைப்பிள்ளை, வயாவிளான் கிழக்கு,
அச்சுவேலி போஸ்ற், யாழ்ப்பாணம். (இலங்கை)


பாவத்துக்குத் தீவினையார் பயப்படார், சீரியர் பயப்படுவர்.

எவ்வுயிர்க்கும் அன்பாயிரு
ஒருவனே கடவுள்
ஈழகேசரி

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகி லென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ் சுண், டொருவொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னாகம்:
யுவ௵ தைமீ ௧௩௨

# அரசர் பெருமானின் பிரிவு.

சடுதியாக ஏற்பட்ட நோய்காரணமாக, சூரியன் அத்தமியாத பிறிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இதுவரையுமரசுபுரிந்து வந்த ஐந்தாவது ஜோர்ஜ் அரசர் இறந்துவிட்டனர் என்பதைக் கேட்டவுடன் உலகம் முழுவதும் பெருந் துயரில் மூழ்கியது. அரசர், அரசாங்கத்திற்குமேற்பட்டவராகவே யாவரும் அவர்மீது விசுவாசமுடையவராயிருந்து வந்தனர் என்பது யாவரும் அறிந்த விஷயம். இவரது அரசியலின் வெள்ளி விழா இற்றைக்குச் சில மாதங்கட்குமுன்னராகவே பிறிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள எல்லா நாடுகளிலும் மிக ஆடம்பரத்துடன்கொண்டாடப்பட்டது. அப்போது எவராவது அரசர்பெருமானின் அந்தியகாலம் சமீபித்துவிட்டதாக எண்ணினாரல்லர். மென்மேலும் பல்லாண்டுகட்கு வாழ்ந்து தமது விசுவாசமுள்ள பிரஜைகளை நேரிய வழியில் ஓம்பி வருவரென யாவரும் எதிர்பார்த்தனர். ஆனால், சென்ற ஏழுவருடங்களாக அதாவது 1928-ம் வருடம் இவரைப்பீடித்த கொடிய நோய் ஏற்பட்ட காலந்தொடக்கம், இவரது ஆரோக்கியம் சீரிதாக இருக்கவில்லை யென்பதை யாவரும் அறிவர். மிகக்கவனமாகத் தமது உடம்பைப்பாதுகாத்து வந்தாராயினும் விதியைவெல்வதெப்படி? இவர்மாட்டுப் பொதுசனங்கட்கிருந்த விசுவாசத்துக்கு அளவின்று எழுபத்தொரு வயதடைந்த முதியவராயினும் இவர், இன்னும் பல்லாண்டுகட்கு வசித்து தமக்குக்கீழ் வைக்கப்பட்ட பிரசைகளை அன்புடன் பாதுகாத்து அரசுபுரிந்து வரவேண்டுமென்றே யாவரும் விரும்பினர்.

மாட்சிமைதங்கிய அரசர்பெருமான் ஆட்சிபுரிந்த இவ்விருபத்தைந்து வருடங்களும் அனேக விசேஷ சம்பவங்களோடு கூடியன என்பதை சரித்திர நூலில்சென்றோர் நன்கறிவர். உலகம் முழுவதையும் பிரதானமாக ஐரோப்பியரை ஐந்துவருடங்களாக கஷ்டப்படுத்திய மகாயுத்தமும் இவர்காலத்திலேயேசம்பவித்தது அந் மகாயுத்தத்தின் பேறாக, அனேக வல்லரசினர் நாடுகளெல்லாம் மறைந்தன. அதிவேகமாய் முன்னேறிவந்த ஐரோப்பிய நாகரீகம் காரணமாகப் பல தீமைகள் வெளிப்பட்டன. யுத்தஞ் செய்து மற்றைய நாட்டினரைத் தமது ஆதிக்கத்துள் கொண்டுவரலாமெனக் கனவு கண்ட தன்னிஷ்ட அரசினர் பலர், தலைகவிழ்ந்து பெருநட்டமடைந்தனர். இவ்வாறேற்பட்ட மாற்றங்களால் ஐரோப்பிய வல்லரசினர் யாவரும் பெருந்துயரையடைய, பிறிட்டிஷ் அரசினர் மாத்திரம் பழையவன்மை குன்றாது மென்மேலும் அதிகாரமும ஆற்றலும் பெற்று விருத்தியடைவாராயினர். பிரிட்டிஷ் அரசியல் முறையே பிரிட்டிஷாரின் உறுதிநிலைக்குக் காரணமாயது என்று கூறினும் மிகையாகாது.

பிறிட்டிஷாரின் அரசியல் அமைப்பின் பயனாக, அரசர்க்கு அதிகாரம் கிடையாதாயினும், பிறிட்டிஷார் தமது அரசர்மீது அளவுகடந்த விசுவாசமுடையராகக் காணப்படுகின்றனர். மற்றைய ஐரோப்பிய நாடுகளில் அரசர்கள் அகற்றப்பட்டு குடியாசுமுறை அரசியல்கள்ஏற்பட, இங்கிலாந்தில் மாத்திரம் அரசரின் அரசியல் இருந்துவருவது பெரும் சந்தோஷத்தை அளிப்பதாகாதா? தாமேற்ற பொறுப்பினையும் கடமைகளையும் முறைதவறாது பூரணமாக நிறைவேற்றி வந்தமையாலன்றோ அரசர்பெருமான் யாவராலும் புகழ்ந்து பேசப்படுகின்றனர். பிரஜைகள்மாட்டு இவருக்கிருந்த அன்புக்கு ஒரு வரம்புகிடையாது. அவர்களின் விருத்தியையே எப்போதும் கண்ணும்கருத்துமாகவுமுடையார். ஏகாதிபத்தியத்திற்கு ஏற்படுங் கஷ்டங்களை யெல்லாம் தமக்கேற்பட்ட கஷ்டங்களாகவே பாவித்துவந்தார்.

இவ்விதமான நற்குணமமைந்த அரசர்பெருமானின் பிரிவுயாவர்க்கும் பெருநட்டத்தையும் துயரத்தையும் உண்டாக்காது விடுமா? துக்கசாகரத்தில் அமிழ்ந்தியுள்ள இவரது பத்தினியாராகும் மேரி இராணிக்கும் மக்களுக்கும் எமது அனுதாபம் உடையதாகுக. அரசர்பெருமான் மறைந்ததும் அவரது சிரேட்ட குமாரராகும் எட்டாவது எட்வேட் அரசர் பதவியைப் பெறுகின்றனர். இவர் தமது தந்தையாரின் அடிச்சுவடு வழிச்சென்று கடமை ஆற்றுவாராயின், பெருங்கீர்த்தியையும் நன்மையையும் அடைவாரென்பதில் சந்தேகமின்று. பிறிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் என்றும் சமாதானமும், திருப்தியும், விருத்தியும் ஏற்படுதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வருவதும் இன்றியமையாத விஷயமாகும். அரசியலைப் பொறுத்தளவில் இவர் செய்யக்கூடியன சிறிதாயினும், நன்மைக்குரியனவற்றை நடுநின்று தொழிற்படின் குறைகூறுவாரெவருமில்லை.

இவருடைய ஆட்சிக்காலம் பல நன்மைகளை யுடைதாய் ஏகாதிபத்தியத்திலுள்ள நாடுகள் முன்னேறி உயர்ந்த நிலையை அடையின், அதுவே இவர்க்கு அழியாப் புகழையும், பெருமையையும் கொடுப்பதாகும். இவர் உண்மை வழிநின்று தொண்டாற்றக் கடவுள் கிருபைபுரிவாராக.

## இனியாவது கையாளப்படுமா?

இதுவரையும் சர்வதேசசங்கத்தினர் பெற்றோல் விஷயமாக நடபடிக்கையைக் கையாள்வதற்குத் தடையாக விருந்தவர் பிரான்ஸியரின் முதன் மந்திரியாகும் லவால் அவர்களே. இவர் இத்தாலியரைக் காலத்துக்குக் காலம் சிற்சில விஷயங்களிற் சார்ந்து நின்றது காரணமாக சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் மற்றைய நாட்டினர் மனஸ்தாபம் அடைந்ததும் உண்டு. சர்வதேச சங்கத்தினரது தீர்மானங்களை மீறி, யுத்தவெறிகொண்டு கொடியயுத்தஞ் செய்யும் இத்தாலியர்க்குச் சார்பாகச் சமாதான நிபந்தனைகளை சேர். சாம்யேல் ஹோர் என்பவருடன் சேர்ந்து வெளியிட்டவர் இவரன்றோ. இத்தாலியர் கொள்கைகளை மிக உக்கிரமாக எதிர்த்து நின்று ஹோர் அவர்களையும் தம்பக்கத்தில் வைத்து, அவமானத்தைக் கொடுக்கக் கூடிய சமாதான திட்டங்களைவெளியிட்டஇவர், பிரான்ஸிய அரசியலினின்றும் இப்போது நீங்கியது நற்காலஅறிகுறியேயாகும் இனிக்காலந் தாழ்க்காது சர்வதேசசங்கத்தினர் நடபடிக்கைகளைக் கையாண்டு இத்தாலியருக்குப் புத்தியுண்டாக்கக் கூடியவாறு செய்வாராக. பெற்றோல் விஷயமாக நடபடிக்கைகள் கையாளப்படின், இத்தாலியர் உண்மையை உணர்வரென்பதில் ஐயமின்று. இனி அமைக்கப்பட விருக்கும் பிரான்ஸிய அரசாங்கமும் நடபடிக்கையைக் கையாள்வதற்கு உதவி புரியுமென்பதில் ஐயமின்று. மேலும் இத்தாலியரும் யுத்தம் செய்து இளைப்படைந்துள்ளார். விரைவில் அபிசீனியரை வெற்றி கொள்ளலாமென்று எண்ணி அவர் அவம்போயினர். சென்ற சில மாதங்களாகப் பெற்ற வெற்றிதான் யாது? இனி மழைக்காலம் ஆரம்பித்தவுடன் இத்தாலியர் முன்னேற்றம் தடைப்படுமெனத் துணிவாகக் கூறலாம். இச்சமயத்தில் சர்வதேசசங்கத்தினர் நடபடிக்கைகளைக் கையாளின், யுத்தம் முடிவுக்கு வருமென்பதில் சந்தேகமின்று. யுத்தவெறி கொண்ட இத்தாலியரும் உண்மையை உணர்ந்து நீதி வழிக்கு ஒருப்படுவர். இச்சமையத்தைக் கைவிடாது சர்வதேசசங்கத்தினர் வேண்டியதைச் செய்வாராக. பிறிட்டிஷாரும் திடமாகத் தமது உதவியை முன்னணியில் நின்று செய்வது இன்றியமையாதது.

### மன்னவன் பிரிவு

(நவாலியூர் "சத்தியநாதன்")

மன்னவ னிறந்தான் மன்னவர் மன்னன்
ஞாயிறு படாத மாநிலம் புரக்கும்
ஞாயிறு பட்டது படாத புகழுததியில்
குடிமுத லானவன் கோல்கோ டாதவன்
மன்பதைக்கவ னொரு வேந்தன்
உலக மலைந்த பெரும்போ ருற்றுழித்
தலைவனாய் நின்றுதன் தானையை இயக்கி
நலந்தரு வெற்றி தந்தா னதான்று
குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்த
நெடுநில வேந்தர் பலர்முடி சிதறவும்
நீரொடு; வளரு மாம்பல்போ லவன்
உலகொடு விரிந்து,
குடியாட்சி வளர்த்து,
முடியாட்சி நிறுவினன்.
பண்டும் பண்டுமிப் பூமி பரங்கெட
வேந்தரைப் பலரு மீய்ந்தன ரின்று
ஓங்கிய பெரும்புக ழோங்கில மருளிய
காவலர் பெருந்தகை கடந்தான்*
கெடுதியிஃ, தொப்ப திவ்வுல கறியும்மோ.

கொழும்பு, ஜன. 21.

* காலங் கடந்தான் காலவெல்லையை வென்றான்.

## ஊர்காவற்றுறைப் பிரதிநிதி

வடமாகாணத்தில் அரசாங்கசபைக்குரிய ஐந்துஸ்தானங்களுள் ஊர்காவற்றுறைப் பகுதிக்குப் போட்டியின்றித்தெரிவு செய்யப்பட்ட திரு. வை. துரைசாமியவர்களுக்கு நாம் வாழ்த்துக் கூறுகின்றோம். திரு. துரைசாமியவர்களுடன் போட்டியிட எத்தனித்து நின்ற திரு. செல்லையா அமரசிங்கமவர்கள் பலரது வேண்டுகோளுக்கிணங்கியும், தாம் எவ்வித கோரிக்கைகளையுடையவராய் அரசாங்கசபையை அபேக்ஷித்து நின்றாரோ, அவ்வித கோரிக்கைகளையே திரு. துரைசுவாமி அவர்களும் உடையவராய்க் காணப்பட்டமையாலும், தமக்குப்போதிய ஆதரவிருந்தும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது விலகிக்கொண்ட பெருந்தன்மைக்காகத் திரு அமரசிங்கமவர்களுக்கும் நமது வாழ்த்தும் வணக்கமும் உரியதாகுக.

திரு. துரைசுவாமி யவர்கள் குறித்த பகுதிப் பிரதிநிதியாக முன்னரே போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டவர். சிங்களத் தலைவர்களதும் மற்றும் ஏனைய சாகியத்தாரதும் நன்மதிப்பைப் பெற்றவர். மீண்டும் எதிரிடையின்றித் தெரிவுசெய்யப்பட்டமை பெரிதும் மகிழ்ச்சிக்குரியதேயாம். திரு துரைசுவாமியவர்கள் தேச முன்னேற்றத்திற்குரிய தொண்டாற்றிப் பல்லாண்டு வாழ, இறைவன் கருணைபுரிவானாக.

## நகர சங்கத்துக்குப் புதிய காரியதரிசி

யாழ்ப்பாண நகரசங்கத்துக்குக் காரியதரிசியாகப் பிறக்றர் திரு. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் 24–1–36ல் நியமனம் பெற்றனரென அறியலானோம். இப்பதவியை அபேக்ஷித்து நின்றோர் 78 பேர்.

## யாழ்ப்பாணத்தில் ஐக்கியசங்கங்களின் தலைவர்.

### புகையிலைச்சங்கத்துக்குப் பாராட்டு.

இலங்கை ஐக்கிய சங்கங்களின் பதிவு காரியஸ்தராகிய திரு கால்வெட்துரை யவர்கள் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பல ஐக்கிய சங்கங்களையும்பார்வையிட்டபின், சென்ற 23-1-36 வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் யாழ்ப்பாணம்—மலையாளம் புகையிலை வியாபார ஐக்கிய சங்கத்தைப் பார்வை யிட்டனர். அச்சமையம் ஷை சங்கத்தின் காரியாலயத்தில், சங்கத் தலைவரும் சங்க அதிகாரசபை அங்கத்தினர்களும் குழுமி யிருந்தனர். பதிவுகாரியஸ்தரவர்கள் சங்கத்தினரால் இதுவரை செய்யப்பட்ட வேலைகள் யாவும் திருப்திகரமா யிருப்பதாகப் பாராட்டினர். இன்னும் செய்யவேண்டிய திருத்தங்கள் இவை யிவையெனவும் எடுத்துக்காட்டினர். பின் மலையாளத்திலிருந்து சங்க ஏஜண்டரால் அனுப்பப்பட்ட மேலைக்கச்சவடம் திரு. பிரபு அவர்களுடன் நிர்வாக சபையினர் கலந்துரையாடியதும் 6 மணியளவில் கூட்டம் நிறைவெய்தியது.

ந. நி.

# ஸ்ரீ பாலசிங்கம். (மனுப்புலியார் பாடியது.)

எந்நாட்டுப் பொருணிலையு மினிதறிந்தோன்
எம்மிலங்கை இனிதினுற்றிப்
பொன்னாட்டைப் போலவரப் புரிவனயா
னெனவெடுத்துப் புகல வல்லான்
கன்னாட்டிப் புகழெழுதுங் கதிரவேற்
பிள்ளைதரு காதன் மைந்தன்
இந்நாட்டுப் பிரதிநிதி யெனவருதற்
கியைந்தஸ்ரீ பால சிங்கம். 1

பல்லாண்டாய் அரசியல்மன் றத்திருந்து
பயிலறிவு படைத்த தீரன்
தொல்லாண்டிற் புகுந்தபிழை சரியெவையென்
றினிதாய்ந்து தொடர வல்லோன்
எல்லாரு மினிதறிந்தோன் எம்நாட்டின்
இயல்புமுழு தாகக் கற்றோன்
கல்லாருங் கற்றறிந்த கலைஞருங்கை
கூப்புஸ்ரீ பால சிங்கம். 2

சாதிமதப் பிரிவுகளிற் றங்காத
தகைமைநிறை தகுதி வாய்ந்தோன்
நீதியென நிற்குமெவை அவையெல்லாம்
நிலைநிறுத்தி வைக்க வல்லோன்
சோதியெனத் தமிழ்நாட்டின் தொன்மையெலாம்
துலக்கவந்து தோன்றி யுள்ளான்
மோதிவரு மெதிரிடைகள் முழுதகற்ற
வந்தஸ்ரீ பாலசிங்கம். 3

உறுதிபயப் பனவுரைக்கு மொருவனென
உலகறிந்த உயர்வு பெற்றோன்
வறிதிருந்து உண்டுடுக்குஞ் செல்வரைப்போ
லாகாது வையத் துள்ள

அறிவுதரு நூல்பலவும் ஆராய்ந்து
அகத்திடையே அமைத்த வல்லோன்
பொறிபுலன்கள் நல்வழியிற் பொருந்திடநின்
றருளுஸ்ரீ பால சிங்கம். 4

சிங்களரிற் தமிழர்களில் சேருபிற
சாதிகளிற் றிறமை வாய்ந்த
பொங்கறிவும் நன்னடையும் பொருந்துனரில்
முதலாகிப் போற்ற வாழ்வோன்
பங்கமிலா வகையெமது பிறப்புரிமை
பாங்காக நடத்த வல்லோன்
தங்கநிகர் விலையுடையோ னெனவுரைக்கத்
தகுந்தஸ்ரீ பால சிங்கம் 5

கலைமகளும் திருமகளும் கொண்டாடிக்
கலந்துறைந்த பெரியோன் எங்கள்
விலைமதிக்கக் கூடாத பிரபுஸ்ரீ
பொன்ராம நாதன் அன்று
நலமுடையன் அறிவுடையன் எனப்புகழப்
பெற்றுநின்ற நாதன் வல்லோன்
பலதுறையும் வருமறிவில் பார்புகழும்
ஸ்ரீலஸ்ரீ பால சிங்கம். 6

அரசவைக்குப் போகவிடும் போயதன்பின்
அதுஇதுநான் புரிவேன் என்று
பரபரக்கும் பலர்போலப் பட்டவனன்
றிதுகாறும் பலநற் செய்கை
குரல்எடுத்துக் காட்டாது குறிப்பறிந்து
பொதுவாகச் செய்த வல்லோன்
இரவியென எவருமறிந் திடவாழும்
எங்கள்ஸ்ரீ பால சிங்கம். 7

செயற்கரிய செய்குனரே பெரியரெனச்
செப்பினரால் எங்கள் முன்னோர்
செயற்கரிய செயவல்லான் சீராளன்
பேராளன் சிங்க மன்னன்
செயற்கரிய செயமாட்டார் தங்களையும்
இகழ்ந்தொதுக்கா இயல்பு பெற்றோன்
செயற்கரிய தெவையுமில வெனுமுறுதி
சேர்ந்தஸ்ரீ பால சிங்கம். 8

இருளகற்றச் சிறுவிளக்கு மேற்குமெனல்
எவ்வகையில் உண்மை அஃதே
பொருளெனக்கொண் டொருகோடிபுகன்றிடுவர்
பூரியர்கள் புண்ய மென்றே
மருளகற்றி அரசவையில் மதிகொழுத்தி
மாற்றுரை அடக்க வல்லோன்
குருநிகரும் நல்லமைச்சன் குற்றமிலா
எங்கள்ஸ்ரீ பால சிங்கம் 9

வாய்திறந்து வந்தனவந் தனவெல்லாம்
வனமொழியில் வளங்கி நின்று
காய்சினமும் கடும்பகையும் மிகவளர்த்துக்
கைகூடும் கருமந்தானும்
போய்விடலை ஆமதிப்பர் புகலுறுதி
பொருந்துமொழி புகன்றஞ் சாது
தாயகத்தைத் தான்காக்கத் தான்நினைந்தான்
தகுந்தஸ்ரீ பால சிங்கம் 10

(76) 25-1-36—1

# அங்கும் - இங்கும்.

அரசர் பெருமானின் பூத உடம்பு புதைக்கப்படும் தினம் (28-1-36) உரையும் அபேட்சகர்கள் தமது கொடிகளை மோட்டாரிலும் மற்றுமிடங்களிலும் தொங்க விடாதிருக்கும்படி அரசினர் கட்டளையிட்டுள்ளார். இக்கட்டளையை எப்படி அபேட்சகர்கள் அனுஷ்டிப்பர். கட்டிய கொடியை அகற்றுவதா? கொடியிலேயே எல்லாம் தங்கிநிற்கிறது.

* * *

இதுவரையும் ஜூன்மீ 3-ம்வ அரசர் பிறந்த தினமாகக் கொண்டாடப்பட்டுவந்தது. இனி அத்தினம் கைவிடப்படுமாம். புதியவரசர் பிறந்ததினமாகும் ஜூன்மீ 23-ம் திகதியே அரசர் பிறந்த தினமாகக் கொண்டாடப்படுமாம். எல்லாவற்றிற்கும் எல்லையுண்டு. ஜூன்மீ 3-ந் திகதியும் ஜோர்ஜ் மன்னருடன் மாண்டது. துக்கம்.

* * *

கொழும்பிலுள்ள ஒரு பிரதம கல்லூரி, அரசர் பெருமான் இறந்த தினத்தை விடுதலை நாளாகக் கொண்டாடவில்லை. ஏனெனில், அன்று விடுதலை கொடுத்தால் மாணவர் சந்தோஷம் கொண்டாடுவாராம். விடுதலை நாட்களெல்லாம் மாணவர்க்குச் சந்தோஷத்தை விளைப்பனவே. விடுதலை கொடுப்பது அரசர் பெருமானின் பிரிவுக்கு மரியாதை செய்யவும் ஞாபகப்படுத்தவுமே. இலங்கையிலுள்ள எல்லா வித்தியாசாலைகளும் அன்று மூடப்பட, இவ்வித்தியாசாலை மாத்திரம் மூடப்படாதிருந்தது நூதனமாகிறது. இராசவிசுவாசம் எவ்விதத்தில் காட்டப்படுகின்றது? வித்தியாசாலை மூடப்படுவதா அல்லது மூடாதுவிடுவதா இராசவிசுவாசமென்பதை அறிய விரும்புகிறோம்.

* * *

"அரசாங்கசபைக்குப் போட்டியில்லாமற் போவதென்பது ஒருபோதும் இயலாத காரியம்" என்றாராம் ஒரு அபேட்சகர். தமது சொந்தத் தகுதியே போதாதாகும் வரைக்கும் அப்படித்தான். போட்டிக்குத்தான் என் பயப்படுவான்? குட்டிச்சுவராகு மட்டும் செலவுசெய்யலாமே. எல்லாம் வெட்டையான்பின் விட்டுவிட்டு ஓடலாம். ஆர் கேட்பவர்? கேட்டுத்தான் என்னசெய்வார்?

* * *

சென்ற முப்பத்தாறு வருடங்களுள் நான்கு அரசினர் பிறிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அரசுபுரிந்துள்ளார். 36 வயதுடையோர் யாவரும் இந்நான்கு அரசியலையும் கண்டுள்ளார். இதுவும் ஒரு பேறோ? இன்னும் எத்தனை அரசியலைக் காண்பரோ!

பொறுமையே எல்லா நன்மைகட்கும் மாறுவது. தமது அயலவர், ஊரவர் தேசத்தவர் நற்பேறு அடைவதைச் சிலர் விரும்பார். தாமும் அப்பேறுகளை அடையார். பிறர் அனுபவிக்கத் தாம் பார்த்து நிற்பர். போலியதிகாரம் எத்தனை நாட்களுக்கு? தம்மைத் தெரியாதவர் மதிப்பைமாத்திரம் பெற்றுப் போலியாக நடித்தால் பெரியோராய் விடலாமோ? வினைப்பாண்டங்கள் நீங்கும்வரையும் சங்கடந்தான். எப்போதும் சாட்டொன்று கூற இயலுந்தான்.

* *

அரசர் பெருமான் இறக்கச் சிறிது நேரத்துக்குமுன் "ஏகாதிபத்தியம் எப்படியிருக்கின்றது" என்றார். அதற்குப்பதிலாக அவரது அந்தரங்க காரியதரிசி "எல்லாம் நல்லாய் நடக்கின்றதென்றார்" அரசர் பெருமான் எப்போதும் பிரஜைகளின் நன்மையையே நாடினவரென இவர் கேள்வியிலிருந்து விளங்குகின்றது. பிறிட்டிஷார் அவரைப் பின்பற்றி நிற்பின் பிறிட்டிஷ் ஏகாதிபத்தியம் மிகவுறுதியான நிலையை அடையுமென்பதில் ஐயமின்று.

* *

இதுவரையும் இளவரசர் ஒருவர் (Prince of Wales) இருந்துவந்தார். இனிக்கிடையாது. ஏன்? 42 வயதாயும் எட்டாவது ஜோர்ஜ் விவாகம் செய்யவில்லை. ஒருவேளை அரசரின் சகோதரர் யோர்க் இளவரசர் அப்பட்டத்தைப் பெறுவாரோ?

* * *

பிறிட்டிஷ் அரசர்கள் பொதுவாக அநேக வருடங்கட்குச்சீவித்திருந்துள்ளார். ஐந்தாவது ஜோர்ஜ் இறக்கும்போது 68 வயது. இரண்டாவது ஜோர்ஜ்ஜின் வயது 77. மூன்றாவது ஜோர்ஜ்ஜின் வயது 72. விக்டோரியா ராணி இறக்கும்போது 81 வயது. எட்வேட் அரசர் இறக்கும்போது வயது 69. ஆகையால் எட்டாவது எட்வேட் அரசரும் அநேக ஆண்டுகட்கு வசிப்பரெனலாம்.

* *

அரசர்பெருமா னிறந்த துக்கத்தைக் காட்டச் சிலர் கழுத்தில் கறுப்புத் துண்டுகளால் சுருக்கிட்டுக்கொண்டனர். சிலர் கையைச் சுற்றிக் கறுப்புச்சீலை சுற்றிக்கொண்டனர். அநேகர் இந்த வேலையில் ஆரம்பித்ததால் கடைகளிலும் துண்டுகள் தட்டுப்பட்டுப்போயினவாம்.

* * *

தேர்தலுக்கு முன்வந்த அபேட்சகர்கள் தமது கொள்கைகளை எழுதி வெளியிடாதிருப்பதன் நோக்கம் யாதோ? தமது எண்ணங்கள் யாது? தாம் அரசாங்கசபையில் (அங்கத்துவம் வகித்திருப்பின்) செய்தன யாவை? செய்ய எண்ணினவை பேசியன யாவை என வெளியிடப்படாதா? அவைகளை உள்ளபடி எடுத்துக் காட்டினால் நட்டம் வரும். என எண்ணுகிறாரா? அப்படியாயின் அதை மறைவி விடுவதுதான் நல்லது.

* *

இம்முறை அபேட்சகர்கள் அதுசெய்வோம்—இது செய்வோம்—என்று சொல்வதை நம்பார்களாம். சென்ற முறை சொன்னவை பல, இன்னும் முற்றுப்பெறவில்லை. சனங்களை ஏமாற்ற எப்போதும் முடியுமா? எப்படியாவது ஒரு முடிபுக்கு வரவேண்டும். அது சுளுத்தான் அல்லது பைக்கிரி.

* * *

எனக்கு என்னூரிலும் விரோதிகள் உங்குவந்தாலும் சத்துராதிகள் என்செய்வது சும்மா மோட்டாரில் திரிவதும் கஷ்டம். என்செய்வது. வீட்டிலிருந்து சில வேலைபார்க்கக்கூடாதா? என்றும் கேட்பாரும் உளர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு

நீர்வேலியிலிருந்து காலஞ்சென்ற நாகமுத்து கணபதிப்பிள்ளை பெண் அன்னம்மாவுடைய ஆஸ்தியைப்பற்றிய விஷயத்தில்

உரிமைத்தத்துவ வழக்கு இல. } 6870

மானிப்பாய், சின்னத்தம்பி இளையதம்பி
உரிமைத் தத்துவகாரன்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் மேற்குறித்த இலக்க உரிமைத்தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் மேற்குறித்த ஆதனத்தா லிறுபடவேண்டிய கடனுக்காக 1936-ம் ஆண்டு மாசிமாசம் 24-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகளின் விபரம்.

(1) நீர்வேலியிறை பெரியவயல் நெ. பா. 12-ம் அதைச் சேர்ந்த வைகளும் எல்லை கிழக்கு, பூதத்தம்பி பெண் தையல் முத்துப்பிள்ளைக்குரிய காணி. வடக்கு வேலாயுதர் சின்னத்தம்பிக்கும் கணபதி பெண் கதிராசிக்குமுரிய காணிகள், மேற்கு இராமு-மகள் செல்லத்துக்கும். வயித்தி பெண் தங்கத்துக்கு முரிய ஆதனங்கள். தெற்கு கே. கந்தையாவுக்கும் அவரின் சகோதரனுக்கு முரிய ஆதனம் இதடங்கலும்.

(2) ஷை நீர்வேலியிறை கண்டற்கடவை நெ-பா-20-ம் அதைச் சேர்ந்தவைகளும். எல்லைகிழக்கு தரவை நிலம், வடக்கு, சுப்பர்-கதிர்காமனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு, குழந்தைவேலு பெண் கதிராசிக்குரிய ஆதனம். தெற்கு, வேலாயுதர்-இராமுவுக்குரிய ஆதனம். இதடங்கலும்.

(3) நீர்வேலியிறை மணியகாராயணன் வெட்டுக்காடு நெற்பரப்பு 7-ம் அதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு T. இராமநாதிக்குரியவாதனம், வடக்கு வி. சின்னத்தம்பிக்குரியவாதனம், மேற்கு விநாயகமூர்த்திப் பிள்ளையார் கோவிலுக்குரியவாதனம், தெற்கு ஐயம்பிள்ளை வீரவாகுவின் ஆதனம். இதடங்கலும்.

சுதுமலை,
யாழ்ப்பாணம்,
22—1—36 } பெ. மூத்ததம்பி
கொம்மிஷனர்

(75) 26-1-35—1

## அரசர்பெருமானின் பிரிவு விழா.

சாண்டின்ஹாம் அரண்மனையில் இறந்த மாட்சிமை தங்கிய அரசரின் பூதவுடம்பு லண்டன் நகர்க்குக் கொண்டுவரப்பட்டுளது. அங்கே 8 நாட்களுக்குத் தேசமக்கள் காட்சி பெறும் பொருட்டு வைக்கப்படும். இம்மாதம் 28ம் திகதி செவ்வாய்க் கிழமை இவருடைய உடம்பு மிக மரியாதைகளுடன் புதைக்கப்படும். அன்று ஏகாதிபத்தியமெங்கணும் விசேஷ தினமாகக் கருதப்படும். இலங்கையரசாங்கத்திலும் அத்தினம் கொண்டாடப்படும். அன்று அரசினர் கந்தோர்கள், கோடுகள் விடுமுறை நாளாகக் கருதப்படும்

காலநிலை:—மழையில்லை பனி அதிகம். வாடைக்காற்று சிறிதாக வீசுகின்றது. தடிமல், காய்ச்சல் முதலிய நோய்கள் பரவியிருக்கின்றன.

பாவமானவை துன்பங்களைக் கொடுத்தலால் அவை தீயினுங் கொடியவை.

# இந்தியச் செய்திகள்

கடிதம்

## ஊர்காவற்றுறைப் பிரிவு வாக்காளருக்கு:

அன்பார்ந்த சகோதரர்களே!

இப்போது நிகழும் தேர்தலில் நான் ஓர் அபேட்சகனாகத் தோன்றியதும், நீங்கியதும் உங்களில் பலருக்கு மலைவையும் மனவருத்தத்தையும் உண்டாக்கி இருக்கின்றதென அறிந்து நான் அதிகம் துக்கப்படுகின்றேன்.

நான் தேர்தலினின்று நீங்கிய சந்தர்ப்பத்தை நீங்களறிவது நல்லது. கொஞ்சக்காலமாக பல நண்பர்கள் கூட்டமாகவும், தனி ஆட்களாகவும், என்னை வை. துரைசாமி அவர்களின் சார்பாக இம்முறை தேர்தலினின்று நீங்கவேண்டுமென்று கேட்டுவந்தனர். நான் அதற்கு முதலில் இணங்கவில்லை.

இப்படிச் சிலகாலம் நடந்தபின், கடைசியாய் சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பெற்றால், நான் நீங்குவதைப்பற்றி ஆலோசிக்கலாமெனச் சொன்னேன். அந்த நிபந்தனைகள் பின்வருமாறு: (1) வை. துரைசாமியும், நானுமாகச்சேர்ந்து ஊர்காவற்றுறை வாக்காளருக்கு தேர்தல் சம்பந்தமான ஓர் விஷயத்தை ஆலோசிப்பதற்கு வரும்படி ஓர் அழைப்பு அனுப்பவேண்டும். (2) அப்படிப்பட்ட கூட்டத்தில் பொதுவான ஓர் பெரியார் அக்கிராசனம் வகித்து போட்டியினால் வரும் கேடுகளையும், நஷ்டங்களையும் எடுத்துக்காட்டி, போட்டியில்லாது ஒருவரைத் தெரிந்தெடுத்து அனுப்புவதன் விசேஷத்தை விளக்கவேண்டும். (3) அதன்பின் வை. துரைசாமி அவர்கள் தம்முடைய அரசியற் கொள்கைகளையும், தாம் நிகழ்த்த இருக்கும் வேலைகளையும்பற்றிச் சனங்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். அவருடைய கொள்கைகளும், வேலைத்திட்டமும் என்னுடைய கொள்கையையும் வேலைத்திட்டத்தையும் அதிகமாய் ஒத்திருக்கவேண்டும். (4) இதற்கிடையில் அக்கிராசனர் அல்லது வை. துரைசாமி அவர்கள் தங்கள் பிரசாரணங்களில் என்னைத் தேர்தலிலிருந்து நீங்கும்படிகேட்க, நான் கடைசியில் என் சிநேகிதரை அப்படி நீங்குவதற்கு உத்தரவு கொடுக்கும்படி மன்றாட்டமாய்க் கேட்கவேண்டும்.

எல்லாச் சமாதானப் பேச்சிலும், நான் இப்போதாவது, அல்லது எப்போதாவது சட்டசபைக்குப் போவதிலும், என் சிநேகிதரைத் திருப்திபண்ணுவதே நான் அதிகமாய் வாஞ்சிப்பதென வற்புறுத்தியிருக்கிறேன். ஆகையாற்றான், முதலாம் நிபந்தனையைச் சேர்த்துக்கொண்டதும், அதை முதலாவதாய்க் கூறியதும்.

சமாதானப்பேச்சு நடந்துவந்த சில காலத்தின் பின், அவைகளைத் தட்டி எறிந்துபோட்டுப் போவது மிகவும் கஷ்டமாயும், கேவலமாயும் வந்துவிட்டது. முதலாம் நிபந்தனைக்கு வை. துரைசாமி அவர்கள் சம்மதிக்கவில்லை. Dr. ஐசக் தம்பையாவும் அவர் சார்பாகவே இருந்தனர். ஐசக் தம்பையா அவர்களின் மறுப்பில் கருத்துமிருந்தது. A. V. குலசிங்கமும, N. செல்வத்துரையும் கூட்டத்திற்குத் தொடக்கத்திலே சம்மதித்தபோதிலும், கூட்டத்தை விட்டுவிடுவதே புத்தியெனத் தீர்மானிக்கப்பட்டது. மற்ற நிபந்தனைகள் சந்தர்ப்பத்திற்கேற்ப நிறைவேறின.

உங்கள் ஒவ்வொருவரையும் ஆலோசித்தபின்னரே இவ்வித சமாதானத்திற்கு இணங்கவேண்டுமென்பது என்னுடைய விருப்பமாயிருந்தபோதிலும், அப்படிச் செய்யமுடியா திருந்ததைபற்றி நான் அதிகம் கவலைப்படுகிறேன். நீங்களும் அதன் இயலாமையை விளங்கிக்கொள்ளவேண்டுமென்று மன்றாட்டமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உடுவில், 25-1-36. } செல்லையா—அமரசிங்கம்

### பண்டிதர்நேரு

இவர் தற்போது ஜர்மனியில் தமது பாரியாருடன் வசிக்கின்றனர். மாசிமாதக் கடைசியில் இந்தியாவிற்குப் புறப்படுவாராம். காங்கிரஸ் மகாசபை மாசிமாதங் கூடுங்கால் அதில் சமுகமளிக்க வேண்டுமென்ற ஆவலுடையவராயிருக்கின்றார். இவருடைய மனைவியாரைப் பீடித்தநோய் இன்னும் முற்றாக நீங்கினபாடில்லை. சென்ற சிலநாட்களுக்குமுன் கமலாநேருவின் தேகநிலை மிகக் கவலைக்கிடமான நிலையிலிருந்தது. இப்போது சிறிது குணமடைந்திருக்கின்றதாம். தேசநலத்தைநாடி இவரது பாரியார் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் கட்டாயம் சமுகமளிக்க வேண்டுமெனதனது நாயகரைக் கேட்டுள்ளாராம். பண்டிதர் தற்போது எழுதிமுடித்த புத்தகம் மாசிமாதத்தில் அச்சிட்டு வெளியாகுமாம். இந்தியாவின் அரசியல் வளர்ச்சியைக்குறித்து மிக இனிய பாஷையில் ஒரு சரித்திரம் எழுதியுள்ளார். லண்டன் நகரிலுள்ள ஒரு புத்தகவியாபார சமுதாயத்தவர் அப்புத்தகத்தை அச்சிடுகின்றனர். அப்புத்தகம் 500 பக்கம் கொண்டதாயுளதாம்.

### தமிழ்நாடு மாகாணக்கூட்டம்

37-வது மாகாணக்கூட்டம் இவ்வருடம் செட்டிநாட்டிலுள்ள காரைக்குடியில் ஸ்ரீமதி ருக்குமணி லக்குமிபதியின் அக்கிராசனத்தின்கீழ் இம்மாதம் 25-ம் 26-ந் திகதிகளில் நடக்கின்றது. அன்று தேசியக்கொடி ஸ்ரீமதி கமலாதேவிசத்தோபாத்தியாயா அவர்களால் தொங்க விடப்படும், இக்கூட்டத்தையொட்டித் தமிழ்நாட்டுப் பெண்கள் மகாநாடும் நடைபெறும். அதன் தலைமையும் ருக்குமணி லக்குமிபதியே வகிப்பாராம். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் சபையின்பேரால் அகில இந்திய காங்கிரஸ் நிர்வாக சபைக்குப் பிரதிநிதிகள் தெரியப்படுவர்; மேலும் லக்நோ நகரில் நடக்கவிருக்கும் காங்கிரஸ் சபைக்கும் பிரதிநிதிகள் தெரியப்படுவர். இம்மகாநாடு மிக விமரிசையாக நடைபெறுவதற்கேற்ற ஆயத்தங்கள் சென்ற பலநாட்களாகச் செய்யப்பட்டு வந்தன. முதன்முதலாகச் செட்டிநாட்டில் இவ்வருடமேகூட நேர்ந்தது.

### தென்னாபிரிக்காவில் ஒரு விவாகம்

இந்தியப் பிரதிநிதியாகத் தற்போது தென்னாபிரிக்காவில் கடமை பார்க்கும் சேர் றஜாஅலி என்பவர்க்கும் ஓர் இந்துக்கனவானது மகளுக்கும் (18-1-39) விவாகம் நடந்தேறியதாகச் சமாச்சாரம் எட்டுகின்றது. சேர் றஜாஅலி ஒரு மகமதியர். இவர் உயர்ந்த அரசாங்கபதவியை வகிக்கின்றார். உத்தியோக அதிகாரத்தை நடத்துங்கால் ஓர் இந்துப்பெண்ணை விவாகஞ் செய்வது முறையல்லவெனத் தென்னாபிரிக்காவில் வசிக்கும் இந்துக்கள் ஆட்சேபித்தனர். மேலும் இவ்விவாகம் இதுவரையும் இந்துக்களுக்கும் மகமதியர்க்குமிடையிலிருந்த ஒற்றுமையைக் கெடுத்துவிடுமெனவும் கூறப்படுகின்றது. இவ்விவாகத்தை நடைபெறாது தடுக்கும்படி இராசப்பிரதிநிதிக்கு தென்னாபிரிக்கா இந்தியர் தந்திநிருபம் விடுத்தனர். ஒன்றும் வாய்க்கவில்லை. இப்போது சேர் றஜாஅலி ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். தாம் விவாகம்செய்த பெண் மதத்தை மாற்றவில்லையென்றும், அப்பெண் தமது பொருளை நினைத்தபடி செலவு செய்யலாமென்றுங் கூறுகின்றார். இந்தியப் பிரதிநிதியாகச் சென்று இந்தியர்க்குள் வேற்றுமையைக் கிளப்புபவர் பெருமை இவ்வாறுகின்றது.

### புதிய மாகாணங்கள்

புதிய இந்திய அரசியற்றிட்டப்படி இரு புதியமாகாணங்கள் சிருட்டிக்கப்படும். அவை ஒறிஸா, ஸிந்து என்பனவாம். புதிய திட்டம் அனுட்டானத்துக்கு வருமுன் இவ்விருமாகாணங்களும் இப்போது பிரிக்கப்படப் போகின்றன. வருகிற சித்திரைமாதம் முதற்றிகதி தொடக்கம் புதிய தேசாதிபதி நியமிக்கப்படுவரென்றும் அவரே இம்மாகாணங்களைப் பரிபாலிப்பரென்றும் சொல்லப்படுகின்றது. ஆனல் சட்டசபைத் தெரிவு இப்போது ஏற்படாது. ஒறிஸா பிரதேசத்துத் தேசாதிபதி தமக்கு ஆலோசனை கூற 20 பிரதிநிதிகளை நியமிப்பர்; ஸிந்து பிரதேசத்துத் தேசாதிபதி 25 பேர்களை நியமிப்பர். இவ்விதமாக அரசியல் புதியதிட்டம் 1937-ம் வருடம் அனுசரணைக்கு வரும்வரையும் நடைபெறும். ஒறிஸாவில் ஏற்படும் உயர்தர நீதிமன்றம் பற்னு நீதிமன்றத்தின் மேற்பார்வையிலமையும். ஒரு வருடத்துக்குள் இம்மாகாணங்கள் மற்றைய மாகாணங்கள்போல் அரசாங்கப் பகுதிகள் அமைக்கப்பட்டுப் புதியதிட்டத்தை வேலைசெய்யக்கூடியதற்கேற்ற நிலையை அடையுமெனவும் சொல்லப்படுகின்றது. இதுவரையும் ஒறிஸாவின் ஒரு பகுதி சென்னையரசினராலும் மற்றையபகுதி பீஹார் அரசினராலும் பரிபாலிக்கப்பட்டு வந்தது. ஸிந்து பிரதேசம் பம்பாய் அரசினர் கீழிருந்தது.

### மகாத்மாவின் தேகாரோக்கியம்

மகாத்மாவின் தேகாரோக்கியம் நன்னிலையை அடைந்துளதென்பதையறிந்து சந்தோஷமடைகின்றோம். அவருடைய பற்களே நோய்க்குக் காரணமாயது என வைத்தியர் அபிப்பிராயப்பட்டனர். இதுவரையில் ஆறு பற்கள் பிடுங்கப்பட்டன. பிடுங்கியதன் காரணமாக இரத்தோட்டம் தடைபடுவது சிறிது குறைந்துளது. இப்போது வார்டாவிலிருந்துபம்பாய் வந்து சேர்ந்துள்ளார். அங்கே வைத்தியர் இவர் தேகநிலையைப் பரிசோதித்து நன்னிலையிலிருப்பதாகக் கூறினர். பம்பாயிலிருந்து ஆமதபாத் செல்வாராம். ஒருபோது மகாத்மா மைசூர் பிரதேசத்திலுள்ள பங்களூர் சென்று அங்கே நந்திமலையிலுள்ள சுகஸ்தானத்தில் வசிக்கக்கூடுமென்றுஞ் சொல்லப்படுகிறது. மைசூர் அரசினர் இதற்கு உறுதுணையாகவேண்டிய சௌகர்யங்கள் அளிப்பார்களென்றுஞ் சொல்லப்படுகிறது.

### எச்சமயத்திற் புகுவாரோ

Dr. அம்பத்கார் தாம் இந்து சமயத்தைக்கைவிடுவதென முற்றாகத் தீர்மானித்து விட்டதாகப் பன்முறை கூறிவிட்டனர். ஆனல் எச்சமயத்தை ஏற்கப் போகின்றனரென இன்னும் முடிவு செய்யவில்லை. கிறீஸ்து சமயம் மகமதியசமயம்என்பனவற்றைத் தழுவினும் அங்கும் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்க வேண்டியதாகுமெனவுங் கூறுகின்றார். இவர் ஒருபோது ஒரு புதியசமயத்தைச் சிருட்டிக்கக்கூடுமெனப் பலர் கருதுகின்றனர். தம்மைத் தலைவராக அதாவது சர்வாதிகாரியாக எண்ணிப் பின் தொடர்ந்தால் பெருநன்மை ஏற்படக் கூடுமென்கின்றனர். தாம் செய்வது சரியோ பிழையோவென வாதித்துநிற்பின் நன்மை வந்தெய்தாது என்கின்றனர். இவர் தம் உள்ளக்கிடக்கையை வெளிக் கூறின் மற்றையோர் இவரை நன்கு அறியலாம். அதைவிட்டு இரகசியத்தில் எல்லாவற்றையும் வைத்துவிடில் என்ன செய்யலாம்?

### "தமிழ்ச்சொற்பிறப்பகராதி"

கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் சென்றசனிக்கிழமை (18-1-36) 3-30 மணியளவில் நியாயவாதி திரு. A. ஞானப்பிரகாசம் B. A. அவர்களின் தலைமையின்கீழ் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அத்தருணம் வண. சுவாமி S. ஞானப்பிரகாசர் அவர்கள், "தமிழ்ச்சொல் அடிகளினின்றும் பல பாஷைகளை இலகுவில் கற்றுக்கொள்ளலாம்" என்னும் பொருள்பற்றி ஓர் சிறந்த சொற்பொழிவாற்றினர். இவர் தமது உபநியாசத்தில் தமிழ்ச்சொல் அடிகளையும் சில ஆங்கில, சமஸ்கிருத ஜெர்மன் சொற்களின் அடிகளையும் எடுத்துக்காட்டி, அவைகள் ஒருஅடியினின்றும் பிறந்தவையெனக் கூறினர். பின்னர் திருவாளர்கள். S. பெரியதம்பி, B. A., C. பேரம்பலம்பிள்ளை, வண. சுவாமி கோகிலர் அவர்களும் அவைத்தலைவரும் மேற்கூறிய பொருள்பற்றி குறிப்புரைகள் கூறினர். ஷெ அகராதியை அச்சிடுவதற்காக ரூபா 5000 சேர்ப்பதற்கெனக் கீழ்க்காட்டிய அங்கத்தவர்களைக்கொண்ட ஓர் அதிகார சபை நிறுவப்பெற்றது.

திருவாளர்கள். A. மகாதேவா, (தலைவர்) ராவ் பகதூர் I. X. பெரோரா, முதலியார் C. இராசநாயகம், C. பேரம்பலம்பிள்ளை, L. B. இம்மானுவேல், S. பெரியதம்பி, K. கனகரத்தினம், V. T. S. சிவகுருநாதன், M. S. சிவரத்தினம், A. சபாரத்தினம், A. கார்டினர், காஸ்பர் கோமஸ் J. N. C. திருச்செல்வம், P. PR. சுப்பிரமணியம் செட்டியார், A. ஞானப்பிரகாசம் (கௌரவ காரியதரிசியும் தனதிகாரியும்)

—கடித.

### மத மாற்றம்

Dr. அம்பத்கார் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டகிளர்ச்சி ஐக்கிய மாகாணத்தில் பெருங்கிளர்ச்சியை உண்டுபண்ணி விட்டதாகும். அக்கிறுப் பகுதியில் தாழ்த்தப்பட்டவர்களின் கூட்டங்கள் பல கூட்டப்பட்டன. இந்து சமயத்தையும் அதன் தலைவர்களையும் கண்டித்து மிக உக்கிரமாக ஹரிஜனத் தலைவர்கள் பேசினராம். பத்துக் கிராமங்களில் 300 தாழ்த்தப்பட்டவர்கள் கிறீஸ்து சமயத்தைத் தழுவினராம். பர்பன் என்னுமிடத்தில் 8000 பேர் சமயம் மாறினராம். கிறீஸ்தவ சங்கத்தினர்களும் இடைவிடாது வேலை செய்கின்றனர்.

### காங்கிரஸ் மகாசபை.

இத்திய தேசியமகாசபை யாகும் காங்கிரஸின் வருடாந்தக் கூட்டம் மாசிமாதம் 25ந் திகதி தொடக்கம் நடக்குமென முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனல் அத்திகதிகளில் இந்திய சட்டசபையின் கூட்டம் நடைபெற விருக்கின்றதென்றும் காங்கிரஸ் பிரதிநிதிகள் சமுகளிப்பது கஷ்டமாயிருக்குமென்றும் கூறப்பட்டது. ஆகையால் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் ஏப்றில் மாதம் 14ந் திகதி தொடக்கம் லட்சுமணபுரியில் ஆரம்பமாகுமென காங்கிரஸ் தலைவர் ஓர் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளார் இவ்வாறு திகதி பின் போடப்பட்டமையால் பண்டிதர் ஜவஹர்லால்நேரு அவர்களும் ஐரோப்பாவிலிருந்து இந்தியா வருதற்கும் சாவகாசம் ஏற்படுகின்றது. ஈஷ்டர் விடுதலை நாட்களை ஒட்டியே கூட்டம் ஆரம்பிக்கின்றமையால் யாவரும் சமுகமளிக்க வசதிகள் நன்கு ஏற்படும்.

### தடுத்துவிட்டனர்.

இந்தியரைப் பிரதானமாக இந்துக்களை மிக இழிவாகத் தாக்கி அமரிக்க மாதாகும் கதறயின் மேயோ என்னும் மாதால் சமீபத்தில் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட புத்தகம் இந்தியாவிற்குள் எவ்வழியாக வாவது கொண்டுவரக் கூடாதென அரசினர் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். இப்புத்தகம் இந்துக்களும் மகமதியர்க்குமிடையில் குரோதத்தையும் கிளப்பிவிடக் கூடியதாம். அரசினர் காலந்தாழ்க்காது இப்புத்தகத்தை இந்தியாவில் பரம்பாது தடுத்தது நற்செய்தியே யாகும்.

அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய, செறுவார்க்குஞ் செய்யா விடல்.

# கலாசக்கரம்

உலூகன் தூதும் சஞ்சயன் தூதும் அங்குமிங்கும் நடைபெற்றன. இந்தப் பத்திரிகையும் அந்தப்பத்திரிகையும் அந்த விஷயங்களை வெளியிட்டன. அவைகளை அன்பர் பலர் நன்கு ஞாபகமாக வைத்திருப்பர். சென்ற வாரம் கிருஷ்ணன் தூதும் முற்றுப் பெற்றது. விதுரனும் வில்லை முறித்துவிட்டான். வீட்டுமருடைய உபந்நியாசமும் இதோபதேசமும் புறங்காட்டில் ஒதுக்கப்பட்டன. "கன்னன் ஒருவனும் போதும்; அவன் எனக்கு முடிசூட்டிவைப்பான்" என்று துரியோதனன் ஒரேவசனமாகக்கூறி முடித்துவிட்டான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த கன்னனும் தனது தலையைச் சிறிது மேலே தூக்கி ஒருதரம் அசைத்து ஆமாச்சொல்லி "அன்று போரினிடை காணலாகுமெனதாடல் வெஞ்சிலையி னுண்மையே" என்று அட்டகாசம் செய்துவிட்டான்.

* * *

இப்படியிப்படியாக இருந்திருந்து மெல்லமெல்ல அரசாங்கசபைத் தெரிவுப்போரும் ஒருபடி மூண்டுகொண்டது. சென்ற பதினைந்தாந் திகதி போர்க்கறை கூவப்பட்டது. படை எழுப்பப்படுகிறது. அணிவகுக்கப்படுகிறது. வாசுதேவர்பலர் படைத்துணையாகச் சேர்க்கப்பட்டனர். முந்தி வந்தவருக்கு வாக்குப்பண்ணி விட்டோமென்ற சிலரிடம் பிந்திச்சென்றோர் படைக்கலமெடுத்துப் போர்செய்ய வேண்டாமென வரம்பெற்றுக்கொண்டனர். சகுனிமாமாக்கள் தங்கள் உள்ளக்கிடக்கையை நிறைவேற்றுவதற்காக அங்குமிங்கும் இதசத்துருக்களாயினர். தனதுபகையை நேரேசாதிக்கும் வன்மையற்றவளாகிய அம்பையென்பவள் சிகண்டியாக உருமாறிவந்து மற்றப்பக்கத்துப் படைத்துணையாயினள். திட்டத்துய்மனும் தனது கருத்தை நிறைவேற்றுவதற்கு இதுவே வாய்ப்பானசமையமென்று கோகுதட்டிக்கொண்டான்.

* * *

அநேக நதிகள் ஒரு சமுத்திரத்திற் கலக்குந் தன்மைபோல இவர்களைப்போன்றோர் பலரும் பல நோக்கங்களும் முன்னை வினைகளும் பின்னை வினைகளும் இந்தத் தெரிவுப்போரிற் கலக்கின்றனர்; கலக்கின்றன. நாகாஸ்திரமுமொன்றுண்டு. அது தனது சத்துருவுக்குப் பகைவனுக யாரிருக்கிறார்களென்று தேடிச்சென்று ................ருடைய கையிலிருந்து பழிக்குப்பழி வாங்குவதற்காக அருந்தவம் புரிந்தபடியேயிருக்கிறது. இனி "அதிரதனுலன்றி யங்கர்கோனமரில்வாரான்." அதுவும் அப்படியாய்விட்டது. அருமந்த அஸ்வத்தாமன் அவன், அங்குங் கெட்டான், இங்குங்கெட்டான். எப்படியாயினும் ஒற்றுமைப்படுத்த வேண்டுமென முயன்ற பலபத்திரரும் விதுரனும் தமது நோக்கம் நிறைவேறாமையினல் ஸ்தலயாத்திரையிற் கால் வைத்துவிட்டனர். போரில் வெற்றி பெறுவதற்காகக் களப்பலி யூட்டுவதற்கு ஒரு வாய்ப்பான முகூர்த்தம் குறிக்கும்படி துரியோதனன் சகாதேவ சாஸ்திரியாரைக் கேட்டான். சாத்திரியார் ஒரு உண்மையான மனுஷன். உள்ளபடியே கூறிவிட்டார். அரரவானும் ஒரு சுத்தவீரன். முந்திக்கேட்ட துரியோதனனுக்கு ஆமாச்சொல்லி விட்டான். இதனை அறிந்த தாயைக் கொல்லி மாயவன் சந்திர சூரியருடைய துணையைக்கொண்டு முகூர்த்தத்தை ஒரே புரட்டாய்ப் புரட்டிவிட்டான். எல்லாம் கமலகுண்டலமாயின.

மேனுட்டு வல்லரசுகளுக்கிடையில் மகாயுத்தம் நடைபெற்றபோது சும்மாகிடந்த யப்பான் தனத்தையும் ஈட்டி ஆதிக்கத்தையுங் கூட்டிக்கொண்டமைபோல இந்தத் தெரிவுப்போரிலேதான் செல்வத்தை விருத்திசெய்ய வேண்டுமென்று, அரிச்சந்திர வேடம்பூண்டோர் சிலர் வணிகராக நடிப்பாராயினர். "ஒன்றுபட்டா லுண்டுவாழ்வு" என்று உபந்நியாச மேடைமீது நின்று பாரதிபாடலைப் பாராயணம் செய்வோர் சிலருக்கு இந்தத் தெரிவுப்போர் முழுவதும் முரணுகவே முற்றியது. "இரண்டு பட்டா லுண்டு வாழ்வு" என்பதே இவர்களுடைய மனன பாராயணமாகும். முத்துக்குளிப்பென்று கருதிப்போலும் கோமுட்டிகளும் பலர் வந்திறங்கியிருக்கின்றனர். "பணம் பாதாளமட்டும்" என்னும் முதுமொழியை இந்தத் தெரிவுப் போரிலேதான் பிரத்தியட்சமாகக் காணவேண்டும்.

* * *

நாம் ஒற்றுமையாக விருக்கிறோமென்பதைக் கண்டால் அதிகாரிகளுக்கு மண்டைவலியுண்டாய்விடும். அதை அறிவதற்காக ஏற்படுத்திய அளவு கருவிதான் இந்தத் தெரிவு ஆகும். ஒரு சிறிய பிரிவிலுள்ள நாம் ஒற்றுமையாக எமக்கிட்ட பிச்சையைக் கௌரவத்துடன் ஏற்றுக்கொள்ளும் தகுதியில்லாமல் கொடுக்குக் கட்டுவோமாயின் நாம் எங்கே! கண்மூடாது காணும் சுயராச்சியக் கனவெங்கே!! இந்தத் தெரிவினலே ஒரு பிரிவு இரண்டுபடுவது மாத்திரமா? எங்கும் குடும்பப்பிரிவு தகப்பன் ஒருகட்சி; மகன் மறுகட்சி; தம்பி ஒருபுறம்; தமையன் மறுபுறம்; தலைவன் இந்தப்பக்கம்; தலைவி அந்தப்பக்கம் அழுக்காறு அவா வெகுளி இன்னுச்சொல் முதலான எல்லாம் இந்தத் தெரிவுத் தந்தையின் புத்திர பாக்கியங்களேயாகும். இதனலே மனஸ்தாபம் கோபம் கலகம் ஒன்றுபடாது பலபடுதல் என்றும் நிலையாகவே வேரூன்றி நிற்கும். இவைகளெல்லாம் ஐந்துவருடத்துக்கு ஒருமுறை புதுக்குவிக்கப்படும். இந்தத் தெரிவுக்காகச் செலவுசெய்யும் அந்தப் பாழும்பணத்தை அந்தப் புண்ணியவாளர் இரும்புப் பெட்டிகளுள் அடைத்துத் தோணியிலேற்றிக் கொண்டுபோய் நடுக்கடலில் தள்ளிவிடுவார்களானல் அவர்களுக்குக் கோடிபுண்ணியமுண்டு. ஒன்றுபட்ட வாழ்வும் மலைபோல வளரும். நாடு சிறக்கும். நாமும் உய்ந்துவிடுவோம்.

# கலம்பகம்

பெஹிலியகொடைஎன்னுமிடத்திலுள்ள பாலுயோர்சியா என்னும் மனிதன் தன்னைப் பைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதாகத் தனது தாய் கூறியதால் பயமடைந்து, கொட்டுக்கொடை என்னுமிடத்திலுள்ள தென்னை மரத்திலேறி ஒருவாரகாலமாக இறங்காது இருந்துவந்தான். இதையறிந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் அவ்விடத்துக்குச் சென்று அவனை இறக்கினராம்.

o o o

வருகிற ஏப்பிரல் மாசம் முதலாந் திகதி தொடக்கம் சிந்து, ஒரிசா இரண்டும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அரசாட்சி நடத்தப்பெறுமாம்.

o o o

மட்டக்களப்பைச் சேர்ந்த நாயப்பட்டிமூனை என்னுமிடத்தில் ஒரு பெண் பாடசாலை அமைப்பதற்குக் கிராமக்கல்விச்சபையார் தீர்மானித்திருக்கின்றனராம்.

o o o

வட இந்தியாவைச் சேர்ந்த குவெட்டா என்னுமிடத்தில் சென்ற 17ந் திகதி ஓர் பூகம்பம் ஏற்பட்டதாம். ஆனல் சேதம் ஒன்றும் ஏற்படவில்லையாம்.

o o o

"இந்தியத்தாயின் முகம்" என்னும் பெயருடன் அமெரிக்கப் பெண்ணுகிய மேயோவால் எழுதி வெளியிடப்பட்ட புத்தகத்தின் மீது இந்திய அரசினர் தடையுத்தரவு பிறப்பித்துள்ளனர்.

o o o

ஸ்ரீமதி. சாந்தநாயகி என்னும யாழ்ப்பாணத்துப் பெண்மணி நொத்தாரிஸ் பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறாராம்.

o o o

உலகத்தின் தொகையையும், பொருளாதார நிலைமையையும் கவனிக்கும் போது, மனிதர் விஞ்ஞான சாஸ்திர முறையால் தமது ஆயுளை நீடிக்க முயற்சி செய்வது ஆபத்தாகும்." என நியூயார்க்டாக்டர்கரால் என்பவர் கூறுகின்றார்

o o o

லண்டன் நகரசபை மேயருக்குச் சம்பளமும் படிச்செலவுமாக வருடமொன்றுக்கு 11442 பவுண் கொடுக்கப்படுகிறதாம்.

o o o

ஹோலிவுட் என்னுமிடத்திலுள்ள நடிகைகள் தங்கள் அதரத்தை அழகுபடுத்தும் 'குச்சிகளுக்காக மாத்திரம் வருடமொன்றுக்கு இருபதினயிரம் பவுண் செலவு செய்கின்றனராம்.

o o o

ஸ்பெயின் தேசத்திலுள்ள இன்டோநதியில் ஒரு கல்லைப் போட்டால் சிலமாதங்களின் பின் அந்தக்கல்லு வேறுகல்லோடு ஒட்டிக்கொள்ளுகின்றதாம்.

o o o

கொக்குவிலில் வசிக்கும் தம்பித்துரை என்னும் பையன் தனது மைத்துனன் முறையினனுன சண்முகரத்தினம் என்னும் 13 வயதுடைய பையனின் நெஞ்சில் கத்தியால் குத்தினுனெனக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கசையடித்தண்டனை விதிக்கப் பெற்றானும்.

கிறிஸ்துவுக்கு 672-வது ஆண்டுக்கு முன் ஒருவருடம் 10 மாதங்களாக இருந்தன. அதன் பின்பே ஒருவருடம் பன்னிரண்டுமாதங்களாக ஏற்படுத்தப்பட்டதாம்.

o o o

சூடான் தேசத்தில் இறங்கிய இத்தாலிய ஆகாயவிமானத்தை அத்தேசத்து அரசினர் கைப்பற்றியதோடு அதிலிருந்த நாலுபேரையும் கைது செய்தனராம்

o o o

இஸ்மாரி கோஜா வகுப்புத்தலைவராகிய மேன்மை தங்கிய ஆகாகான் அவர்கள், இமாமத் பதவியேற்ற 50-வது வருடப் பொன்விழாக் கொண்டாட்டம் சென்ற 19-ந் தேதி மாஸ்கான் ஹாசன்பாத் என்னுமிடத்தில் கொண்டாடப்பட்டது. அப்போது அவரின் நிறையுள்ள 3,35,000 ரூபா பெறுமதியுள்ள தங்கம் சன்மானமாக அவருக்கு அளிக்கப் பட்டதாம்.

o o o

கொழும்பு-கொம்பனித் தெருப்புகைரதப்பாதையில் 8 வயதுடைய சிறுவன் ஒருவன் புகைரதத்தால் மோதுண்டு உயிர் துறந்தானும்.

o o o

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் நோயாளியைப் பார்க்கச் சென்ற ஒருவரின் கால்சட்டைப் பையிலிருந்த ஐந்து ரூபா நோட்டை ஒருவன் களவாடிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குள் ஓடினுன். உடனே இரகசியப் பொலிசார் அவனைக் கைது செய்து பொலிஸ் ரேஷனுக்குக் கொண்டு சென்றனராம்.

o o o

கொழும்பு-கோட்டையிலுள்ள 'ரோமியல், குஞ்சார் என்னும் இரு தொழிலாளிகள் வைசூரிநோய் காணப்பட்டதினுல் தொற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பெற்றனராம்.

o o o

அலகபாத்தைச் சேர்ந்த பர்கான் பிரதேசத்தில் வசிக்கும் 8000 ஆதி இந்துக்கள் கிறிஸ்தவர்களாகிவிட்டார்களாம்.

o o o

நீதிபதியாயிருந்து இளைப்பாறிய சுரேத் சந்திரகட்டக் என்பவர் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதால், அரசினர் அவருக்குக் கொடுத்த "ராய்பகதூர்" என்னும் பட்டத்தைத் திரும்பிப் பெற்றுக் கெண்டனராம்.

o o o

தாராபுரம் என்னுமிடத்துக்குச் சமீபமாகவுள்ள ஒரு கிராமத்தில் 2-ரூபா 50 சதம் பெறுமதியுள்ள அரைஞாண் அபகரிப்பதற்காக அது கட்டியிருந்த மூன்றரைவயசுக் குழந்தை யொன்றைச் சுப்பசக்கிலி என்னும் ஒருவன் கொலை செய்து விட்டானும்.

o o o

சென்ற வெள்ளிக்கிழமை இலங்கையில் ஓர் செஞ்சிலுவைச் சங்கம் தேசாதிபதியால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதாம்.

o o o

உடுவிலிலுள்ள வயிரவன்-இராமன் என்பவன், வெளிச்சமில்லாது மாட்டு வண்டியைப் பிரசித்த தெருவால் செலுத்திச் சென்றானெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 15 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றானும்.

o o o

அரசாங்கசபைப் பிரதிநிதித்தெருவில் யாழ்ப்பாணப்பகுதி அபேட்சகரில் ஒருவராகிய திரு. நெவின்ஸ் செல்வத்துரை அவர்களின் பாரியார் காலஞ் சென்று விட்டாராம்.

o o o

இந்திய இராசப்பிரதிநிதியாக நியமனம் பெற்றிருக்கும் லின்லித்கோ பிரபு வருகிற ஏப்பிரல் மாசம் இந்தியாவுக்கு வந்து தமது பதவியை ஏற்பாராம்.

o o o

ஜெர்மனியில் பொதுவுடமை ஆட்சி ஏற்பட்டபின் புத்தகங்கள் வெளியிடுதல் குறைந்து விட்டதாம்.

o o o

சாக்கடையிலுள்ள ஒரு தொன் தண்ணீரைக் காய்ச்சினுல் ஏறக்குறைய 190 றாத்தல் நிறையுள்ள உப்புக்கிடைக்குமாம்.


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் தலவாக்கொல்லை மெயின்ஸ்றீற் 2-ம் நம்பர்க்கடையில் நா. மா. தி. ஞா. ஞானசேகரம் என்பவரிடம் 1933-ம் ஆண்டு புரட்டாசி மாதம் தொடக்கம் 1934-ம் ஆண்டு மார்கழி மாதம் முடியும்வரையும் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பிய நகைகளை ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி 8-2-1936 சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

நகை விற்பனவு தொடங்கும்நேரம்வரைக்கும் மேற்குறித்த கடையில் பார்வையிடலாம்.

விபரத்துக்கு ஜாபிதா தேவையுள்ளோர் அடைவு பிடிப்பவரிடமாவது, இதன்கீழ்க் கையொப்பமிடுபவரிடமாவது பெற்றுக்கொள்ளலாம்,

Talawakele, 19-1-36

H. P. WIKRAMASINGHE,
*Auctioneer.*

(69) 19-1-36-2.

## மகாநாடுகள்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் ஒருசிறு துண்டுப்பத்திரத்தை என்னிடம் கொடுத்து, 'இம்முறை இந்தியாவுக்குப் போய் புண்ணியஸ்தலங்களைத் தரிசித்தற்கு இது சிறந்த சந்தர்ப்பம். என்ன சொல்லுகிறீர்' எனக் கேட்டார்.

துண்டுப் பத்திரத்தைப் படித்துப் பார்த்தபொழுது தென்னிந்தியறயில்வேயில் பதினைந்து நாட்களுக்கு விரும்பியவிதமே பிரயாணஞ் செய்வதற்குரியசீட்டொன்று மார்கழியில் உண்டென்றும், அதன்விலை 12-50 சதமென்றும், இரண்டாம் கிளாஸ் துண்டு 37-50 சதமென்றும், அதிற் குறிப்பிட்டிருத்தலைக் கண்ணுற்றேன். பதினைந்து நாட்களுக்குப் பிரயாணஞ் செய்ய 12½ ரூபாவென்றதும் கட்டாயம் இம்முறை இந்தியாவுக்குப் போக வேண்டுமெனத் தீர்மானித்து, வேறு சிலரையும் கூட்டிச்செல்ல முயற்சித்தோம். இன்னும் இருவர் வருவதாக வாக்களித்தனர். இதற்கிடையில் சைவர் மகாநாடு திருவண்ணாமலையில் நடைபெறுமென்றும் சுவாமி விபுலாநந்தா அவர்கள் தலைவராகச் செல்கின்றாரென்றும் "சித்தாந்தம்" எனும் திங்கள் வெளியீட்டால் அறிந்து அதனையும் போய்ப்பார்க்க வேண்டுமெனத் தீர்மானித்தோம். இன்னும் "இந்து" பத்திரிகையைப் படித்துப் பார்த்தபொழுது மார்கழி முழுமாதமும் சென்னை நகர் சங்கீதசாகரத்தில் அமிழ்ந்திக்கிடக்கும் என அறிந்தோம். அத்துடன் காங்கிரஸின் ஜுபிலிக் கொண்டாட்டமும் நடைபெறுமென அறிந்தோம். வேறு மகாநாடுகள் உண்டோ என்று பத்திரிகையைப் பார்த்தால் எங்கும் மகாநாடுதான். இந்து மகாநாடு, மங்கையர் மகாநாடு, மாணவர் மகாநாடு, சங்கீத மகாநாடு, வைத்திய மகாநாடு, பண்டிதர் மகாநாடு, இன்னும் பலவுள. இலங்கையில் மகாநாடு இல்லையேயென்ற கவலை. இந்தியாவில் எந்த மகாநாட்டிற்குச் செல்வது என்ற கவலை. சில சமயங்களில் ஓரே தினத்தில் ஓரேநேரத்தில் ஓரிடத்தில் சிறந்த சங்கீதம் நடைபெறும். வேறோரிடத்தில் பரதநாட்டியம் நடைபெறும். பிறிதோரிடத்தில் பாரதியாரின் பாவன்மையைக்குறித்துச் சொற்பொழிவு நடைபெறும். இன்னோரிடத்தில் புதிதாகச் செய்யப்பெற்ற சங்கீத வாத்தியத்தை ஏற்றுக்கொள்வதா என்பதைப்பற்றிய ஆராய்ச்சி நிகழும். மற்றோரிடத்தில் 'கந்தபுராணம் நம் சொந்தபுராணம்' என்பதைப்பற்றிச் சொற்பொழிவு நிகழும். இங்ஙனம் பல மகாநாடுகளும் தேசியப்பொருட்காட்சியும் உண்டென அறிந்து கட்டாயமாக மார்கழி விடுமுறைநாட்களில் இந்தியாவுக்குச் செல்லவேண்டுமெனத் தீர்மானித்தோம். எங்கள் தீர்மானப்படி இலங்கையிலிருந்து சென்ற மாதம் 23-ந் திகதி பிரயாணமானோம். அடுத்தநாட் காலை தனுஷ்கோடியில் சிவத்த தலைப்பாகைக்காரரின் சோதனை முடிந்ததும் வண்டியிலேறற்குத் துண்டுவாங்கச் சென்றோம். இலங்கையில் பெரிய புகைரத வீதிகளைக் கண்ட எமக்கு தனுஷ்கோடி ஸ்ரேஷனைக் கண்டதும் அடக்கமுடியாத சிரிப்புண்டாயிற்று. றயில் வண்டியின் பழைய பெட்டியே ஸ்ரேஷன் மாஸ்றருடைய கந்தோர். அதற்குள் ஒருவர் கண்ணாடி போட்டுக்கொண்டு பாயின்மேல் தாராளமாக உட்கார்ந்துகொண்டு டிக்கட் விற்பதைப்பார்த்து அவரிடமே நாங்களும் டிக்கட் பெற்றோம். அவரிடம் ஒரு துண்டு பெறுவது கொஞ்சம் கஷ்டந்தான். பன்முறை பார்த்தபின்தான் கைவிடுவார். சிலசமயம் எங்கள் கையில் துண்டைக் கொடுத்த பின்பும் கொடுத்தடிக்கட் சரிதானோவெனப் பார்த்துக்கொள்வார். சிறிது நேரத்தால் வண்டி புறப்பட்டது. ஓடும்பொழுது இலங்கை றயில் வண்டியைப்போல் சத்தமின்றிச் செல்வதை யாரும் கவனிக்கக்கூடியதாயிருக்கும், ஒவ்வொரு ஸ்ரேஷனிலும் வடை, இட்லி, காப்பி பெற்றுக்கொள்ளலாம். சிலவிடங்களில் தயிர்ச்சாதம், புளிச்சாதம் முதலியனவும் வாங்கலாம். தனுஷ்கோடியிலிருந்து புகைவண்டி பெரும்பாலும் வயல்களுக்கூடாகவே சென்றுகொண்டிருந்தது.

(தொடரும்)

### குளிர்காய்ந்ததால் மரணம்

சிலநாட்களுக்குமுன் ஓமாரர் கிராமத்தைச் சேர்ந்த எஸ் ஏ திநேஸ்காமி என்னும் 15 வயதுள்ள ஓர் ஊமைச்சிறுவன் குசினியில் தீ முன் குளிர்காய்ந்து கொண்டிருக்கும் பொழுது அவனுடைய ஆடையில் தீப்பற்றிக்கொண்டதாகத் தெரிகிறது. அவன் படுகாயமடைந்ததால் வலஸ் முல்லை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டான். இரண்டு நாட்களுக்குப்பின் அங்கு அவன் இறந்துபோனான்.

### காதல் நஷ்ட ஈட்டுக்கு ரூபா 1250

கடுசணுவையில் தற்பொழுது றெயில்வேயில் வேலைபார்க்கும் திரு. வெர்மன்டங்கன் செயின்ட்கிளேர் முல்லர் என்பவர்மீது நம்பிக்கைத்துரோகம் செய்ததாக ரூபாய் 5000 நஷ்டஈடு கோரி தெஹிவளை, பெட்டோஜு ரோட்டைச் சேர்ந்த செல்வி எலனு ஹேஸின்த் கெல்லார்ட் என்பவள் தொடர்ந்த வழக்கு சென்ற 20உ கொழும்பு ஜில்லாக் கோர்ட்டில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டு முடிவடைந்தது.

குறித்த வழக்கில் பிரதிவாதி வாதியைக் கல்யாணம் செய்துகொள்ளுவதாக வாக்களித்துப்பின் ஏமாற்றியதாகக் கூறப்பட்டது.

விசாரணைக்குப்பின் இருகட்சியினரும் கலந்து செய்த ஒப்பந்தத்திற்கிணங்க நீதவான் தீர்ப்பளித்தார். அந்த ஒப்பந்தத்தின் விபரம் வருமாறு:-

செலவுத் தொகையைத் தவிர பிரதிவாதி ரூபாய் 1,250 வாதிக்கு மூன்று தவணையில் கட்டவேண்டும். அதாவது இவ்வருஷம் பெப்பரவரி மாதம் 28 ந் தேதிக்குமுன் ரூபாய் 250 ம், ஜூன் மாதம் 30 ந் தேதிக்கு முன் ரூபா 500 ம், டிசம்பர் மாதம் 31 ந் தேதிக்கு முன் ரூபாய் 500 ம் கட்டவேண்டும்.

### கள் வைத்திருந்தவனுக்கு ஒருவருடக் கடுங்காவல்

சட்டவிரோதமாக 8 கலனுக்கு அதிகமான கள்ளு வைத்திருந்ததாக முல் கம்பளை வாசியான டிங்கிரிபண்டா பிபிலி என்பவன்மீது கண்டிப் பொலீஸ் நீதவான் முன் தொடரப்பட்டவழக்கில் எதிரிதான்குற்றவாளியென்று ஒப்புக்கொண்டான். ஆகவே நீதவான் எதிரிக்கு ஒருவருஷக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

### தீண்டாவகுப்பைச் சேர்ந்த நீதியரசர்

திருவிதாங்கூர்ச் சமஸ்தானத்தில் ஸ்ரீ குமரன் என்னும் தீண்டா வகுப்பைச் சேர்ந்தவர் உயர்தர நீதிமன்றத்து நீதியரசராக மகாராஜாவால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.


"பெண்களே — உங்கள் அழகைக் காப்பாற்றுங்கள்" என்று Jean Harlow சொல்லுகிறாள்.




Metro-Goldwyn Mayer

சருமத்தின் மேலிலும் மயிர்க்கால்களினிடையிலும் கெடுதலுண்டாக்கும் அழுக்குகள் சேருவது சகஜம். இவ்வழுக்குகளைப் பூராவும் நீக்கினாலொழிய சருமத்தின் அழகுகெட்டு விடும். லக்ஸ் டோயிலெட் ஸோப் வெகு லேசாய் இந்த அழுக்குகளை முற்றிலும் நீக்கி சருமத்திற்கு உண்மையான அழகைக் கொடுக்கிறது. ஸினிமா நடிகை ஜீன்ஹார்லோ சொல்லுகிற புத்திமதிப்படி, லக்ஸ் டோயிலெட் ஸோப்பைத் தவறாமல் உபயோகித்துவாருங்கள். இதன் கெட்டியான வெண்மை நுரை, சருமத்தை லேசாய் சுத்தம் செய்து மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கச்செய்கிறது. 857 பிரபல ஸினிமா நடிகைகளில் 846பேர்கள் தங்களின் மாசற்ற மேனியைப் பாதுகாப்பதற்கு லக்ஸ் டோயிலெட் ஸோப்பையே உபயோகிக்கிறார்கள். நீங்களும் ஒரு கட்டி இன்று வாங்குங்கள்.




LUX TOILET SOAP

X-LTS 400-288A TAMIL LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

## போசனகாலத்தில் முதன் முதல் காகத்திற்கு ஒருகவளம்சோற்றைவைத்துப் பின் புசிக்கவேண்டிய நியாயமும் பிறவும்.

சகுனி என்னும் ஒரு பெண் தேவதையானது காக்கை, டேகை முதலிய பட்சிகளைப் பெற்றதென்றும், அதனால் அப்பட்சிகளினுள் அங்கர்கதமாய் அது சலர்துநின்று நன்மை தீமைகளை அறிவிக்குமென்றும், இது விஷ முதலியவைசேர்ந்த உணவுகளை உண்ணுவதில்லை. இதனாற்றான் போசன உணவில் விஷங் கலந்திருக்கின்றதா? இல்லையா? என்னும் சந்தேகம் நீங்கும்பொருட்டே நம்மவர்கள் போசனஞ் செய்வதற்கு முன் ஒருகவளம் சோற்றை காகத்திற்கு வைத்து அது உண்டபிற்பாடே உண்ணவேண்டுமென்று ஆன்றோர்கள் அனுஷ்டித்து வருகின்றார்கள்.

பிதா மாதா இறந்ததிதியிற்செய்யும் சிராத்தத்தில் பிதிர்தேவதைகளைக்கருதி உருண்டையாயிருக்கிற வாயசபிண்டத்தைக் காகத்தைக் கூப்பிட்டு வைக்கின்றார்கள். இதற்கு வாயசபலி என்று பெயர்.

இந்தக் காகத்தினிடம் ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடிய சில நற்குணங்களிருக்கின்றது. அஃதாவது; திருக்கோவையாரில்,

"பணங்களஞ்சாலும் பருவர வார்த்தவன் றில்லையன்ன, மனங்கொளஞ்சாயலு மன்னனுமின்னே வரக்கரைந்தால், உணங்கலஞ்சா துண்ணலா மொண்ணிணப் பலியோக்குவன்மாக், குணங்கலஞ்சாற் பெலியுந்நலசேட்டைக் குலக்கொடியே"

இதன்பொருள். மறைந்த புணர்ச்சியும், கலங்காமையும், நெடுகக்காண்டலும், மடியின்மையென்னுஞ் சிறந்த குணங்களையுடைய தென்பதும் விளங்குகின்றன.

காகம் அழுதவுடன் காலடியளந்து அத்துடன் (12) கூட்டி (7)ல் பிரித்தமீதி—1. தனம், 2. சந்தோஷம், 3. மழை, 4. சண்டை, 5 சத்துருவெற்றி, 6. மரணம், 7. சுற்றத்தாருடன் சிநேகமென அறியக்கிடக்கின்றது.

"தந்தலாபம் பொருள்நாசந் தக்கோர் வரவுநிதிப்பேறு, நந்துமழைபோர் சாவச்சநண்ணுமுதய முதலாக, முந்துகிழக்கோடெண்டிசையு மூன்றேமுக்காணுழிகையாய், வந்ததிசையே முதலாக வயங்குகாகங் கரைந்திடினே"

என்னும் பிரமாணப்படி காகங் கரையும்போது உதயமுதல் மூன்றேமுக்கால் நாழிகையை ஒருசாமமாக வைத்து கிழக்குத்திக்கு முதலாக முறையே சுகம், சத்துருவெற்றி, பந்துவருகை, பொருளிலாபம், மழை, சண்டை, மரணம், மனப்பயம் என்று பலாபலனையறிந்துகொள்க.

காக்கை அழும் சத்தம், 1-5 ஆயின் தனக்குப், 2-6. ஆயின் அன்னியருக்கும், 3-7. ஆயின் உறவினருக்கும், 4-8. ஆயின் சத்துருவுக்கும் பயனும்.

இக்காகத்திற்கு இரண்டு கண்ணிருந்தும் ஒரு கண்ணாற்றான் பார்க்கின்றது. இதற்கு ஆயுள்வரையறைகிடையாது. சனீஸ்வரனுக்கு வாகனமாகவும், மூதேவிக்குக் கொடியாகவும் அமைந்திருக்கின்றது.

காகமானது தந்தரமுள்ளதும் சமயோசித புத்தியுடையதும், சில சமயங்களில் அறிவீனமுடையதும், ஏனைய பிராணிகளைப்போல் தன் பெடையுடன்புணராமல் மனிதசஞ்சாரமில்லாதஇடத்தில் புணர்ச்சிசெய்யும் சுபாவமுடையதுமாகும். அனேகமாக இப்பட்சி மலைச்சாரலில் தான்வசிக்குமிடத்தில் புணர்ந்து இன்பமடையுமென்பதாம்.

ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்
சுதுமலை.

# வாக்காளர் கடமை.

(மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதம ஆசிரியர் ஸ்ரீமான் வி. வீரசிங்கம் B. A., அவர்கள், சென்ற 3வ வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு அராலியில் மிஷன்பாடசாலையில் நிகழ்த்திய பேருரையின் பொழிப்பு.)

சபையோர்களே!

ஓர் ஆசிரியர் செய்யக்கூடிய சுலபமான தொண்டுயாதெனில், தான் அறிந்த உண்மைகளை மற்றவர்கள் அறியும்படி கூறுவதேயாகும். ஸ்ரீமான் கந்தையா அவர்கள் என்னைப் பலமுறையும் இங்கேவந்து பேசும்படி கேட்டனர். நான் அவருடைய குணநலங்களைப் படிக்கும்வரையும் அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. அவருடைய குணங்களை நன்றாய் ஆராய்ந்தறிந்த பின் அவருக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தீர்மானித்தேன். ஏனெனில் அவரை ஓர் உண்மையான தொண்டனென அறிந்துகொண்டேன். ஆசையால் அவர் விரும்பிக் கேட்டுக்கொண்டபடி "வாக்காளர் கடமை" என்பதைக்குறித்துப் பேசுவதற்குத்துணிகின்றேன். வாக்காளர் கடமை என்பதைக் குறித்துப் பேசும்போது ஏதோ ஓர் பக்கம் சார்பாகப் பேசுகின்றேனென்று நீங்கள் விளங்குவது சரியல்ல. அங்ஙனம் யான் பேசும்போது, ஆரோ ஒருவர்க்குச் சார்பாகப் பேசவில்லையென்பதை முன்னமே உறுதியாகக் கூறுகின்றேன்.

இப்பொழுது அரசியற்சபைக்கு அங்கத்தவரைத் தெரிந்தனுப்ப வேண்டியகாலமாகும். ஒரு வட்டாரத்துக்கு நாலு ஐந்து பேர்கள் முன்வருவார்கள். இவர்களிற் பலவகையாலும் தகுதி வாய்ந்தவரைத் தெரிந்தனுப்பினாலே எமது நாடு முன்னேற்றத்தை அடையும். ஐரோப்பியருடைய தெரிவுகாலங்களிற் பாராளுமன்றத்துக்குப் பக்குவமுடையவரை தெரிந்தனுப்பப்படுகிறார்கள். அவருடைய முறையையே நாமும் கைக்கொள்ளவேண்டும். ஆங்கில நாட்டில் தொழிற்கட்சியார்க்கும் பிரபுக்கள் கட்சியார்க்குமிடையில் தெரிவுகாலங்களில் மிகுந்த சச்சரவுகள் ஏற்படுகின்றன. ஆனால் தெரிவு முடிந்தவுடனே அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டுவிடுகின்றது. தெரிவு காலங்களில் ஒருவருக்கொருவர் ஏற்பட்ட மனஸ்தாபம் பின் நிலைநிற்பதில்லை.

தகுதி வாய்ந்தவரைத் தெரிந்தனுப்புவது உங்களுக்கு ஏற்பட்ட ஓர் உரித்துரிமையாகும். சைவம், கிறீஸ்தவம் என்ற மதபேதங்கள் இக்காலங்களில் தலைகாட்டுவது சரியல்ல. இயமம், நியமம் என்ற இரு கொள்கைகளிருக்கின்றன. இயமம் என்பது விலக்கப்படுவன. நியமம் என்பது செய்யவேண்டியன. அதர்மத்தை விலக்கித் தர்மத்தை மேற்கொள்ளவேண்டும். தர்மமென்பது உண்மையையாகும். உண்மையின்படி நடத்தலே தர்மமாகும். அல்லாவிடில் உலகம் கேட்டினை அடையும். பொதுநலத்தைக் குறித்த விஷயத்தில் எல்லோரும் ஒன்றாய்த்திரண்டு ஒற்றுமைப்படுதலே மேலான கடமையாகும்.

அனேகர் தெரிவுகாலங்களில் தெரிவிடங்களுக்குப் போகின்றாரில்லை. "இராமர் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன" என்று கூறி நின்றுவிடுகிறார்கள். அங்ஙனம் செய்வதனாற் கெடுதியே ஏற்படுகின்றது. உங்களுக்குள்ள உரிமையைப் பாவியாவிடின் நீங்கள் தெய்வத்துக்கும் நாட்டுக்கும் விரோதமான செய்கைகளைச் செய்கிறீர்களென்று கூற வேண்டும். ஒரு வாக்காளன் தனது உரிமையை வழங்குவது அவன் தனது மதத்திற்குச் செய்யும் கடமையேயாகும். இக்கடமையைச் செய்யாதவன் ஓர் பாவியாவன். ஓர் மைந்தன் தனது மாதாவுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யாதுவிடுவானா! எமது மாதாவாகிய இலங்காதேவிக்கும் அவனது மைந்தராகிய நாம் எமது கடமைகளை இயற்றாது விடுவோமாகின் மிகுந்த பாவிகளாவோமல்லவா?

தெரிவுகாலங்களில் நீவிர் உமது வீட்டுவேலைகள் அல்லது வயல்வேலைகளைக் கருதித் தெரிவிடங்களுக்குச் செல்லாது நின்றுவிடவுங்கூடும். உமது உழைப்பை இழந்துவிடவேண்டுமென் றெண்ணித் தூரத்திற்கு வாக்குரிமை வழங்கப்போவதற்கு உமக்கு இயலாமலிருக்கும். இதற்காக ஓர் ஐம்பதுசதத்தையும் ஓர் கிளாஸ் நிறைந்த மதுபானத்தையும் கைக்கூலியாகப் பெற்றுத் தெரிவுநிலையத்துக்குச் செல்லச் சிலருக்கு நேரும். ஆனால் இச்செய்கைக்கு அவரிடத்துக் குற்றங் காண்பதும் நல்லதல்ல. ஆயினும் உண்மையான வாக்குரிமையின் உணர்ச்சியின்றிக் கைக்கூலி பெற்றுச் சென்று வாக்குச் செலுத்துவது சரியாகுமா?

ஊர்காவற்றுறைப் பகுதியில் 70000 வாக்காளர் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். 10 இடங்கள் தெரிவு நிலையங்களாயிருப்பதாகவும் எண்ணுவோம். ஓர் நிலையத்துக்கு 4000 அல்லது 5000 வாக்காளர் உண்டு. ஆனால் இந்திய ஆங்கில நாடுகளில் ஒரு தெரிவு நிலையத்துக்கு 500 அல்லது 600 வாக்காளர்களை உண்டு. இந்த நாடுகளில் 1 மணிநேரத்தில் ஓர் வாக்காளன் தனது கடமையை முடித்து விடக்கூடிய அத்தகைச் சமீபத்தில் தெரிவு நிலையம் குறிக்கப்பட்டிருக்கும். எம்து நாட்டில் ஒருநாள் முழுவதையும் ஒரு வாக்காளன் செலவு செய்யவேண்டிய அத்தகைத் தூரத்தில் தெரிவு நிலையம் ஏற்பட்டிருக்கும். இந் நிலையங்களுக்குப் பஸ் (bus) வண்டிகளில் ஏறிச்செல்லவேண்டும். இது பற்றி நாணத்தினாற் பெண்கள் வாக்குரிமை வழங்கச் செல்வாரில்லை. பெண்களுக்கும் வாக்குரிமை இருக்கும்போது அவர்களதைச் செலுத்தாது விடுவது ஏனோ! போதிய வசதிகள் அவர்களுக்கு ஏற்படுத்தப் பெறாத காரணத்தினாலல்லவா? மேலும் வலோற்காரமாய்ச் சனங்களைப் பஸ் வண்டியிலேற்றிச் சென்று ஒருவர் சார்பாகவுள்ள மஞ்சட் பெட்டி அல்லது கறுத்தப் பெட்டியிற் போடுமென்னப் போட்டுத்திரும்புவது நீதியா? ஆகையால் பெண்களும் வாக்குரிமை வழங்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்துவதுமன்றிப் பொது சனங்களுக்கு வாக்குரிமை வழங்கவேண்டிய ஒழுங்கான முறைகளையும் கற்பிக்க வேண்டும். நான் சிங்கள நாட்டிற் கண்டகாட்சியை இங்கே கூறுவேன். ஒருவன் ஒரு வெற்றிக் கொடியை உயர்த்திப் பிடிக்கவும் பெருந் திரளான வாக்காளர் அவ்விடத்திற் கூடுகின்றனர். உடனே யாவரும் வரிசையிற் கால் நடையாய்ச் சென்று தாம் தகுதியுள்ளவர் என்று கருதும் அபேட்[illegible]ரின் பெட்டியில் தமது [illegible] பத்திரத்தை இட்டபின் [illegible] றனர். இதுவே உ[illegible] யாகும். இம்முறை[illegible] யில் ஏறவேண்டிய அவசியமும் ஏற்படுகின்றதில்லை. எமது யாழ்ப்பாணத்தில் ஒருவருடைய பஸ் வண்டியில் ஏறிச் சென்றாலும் வேறொருவருக்குத் தமது வாக்கைச் செலுத்திச் செல்வாரும் சிலர் உளர். இதுவும் ஓர் வகையான நன்மையென்றே சொல்லவேண்டியது. விருப்பத்துக்கு மாறாக ஒருவருடைய பஸ் வண்டியில் ஏறிச் செல்ல நேர்ந்தாலும், அங்குச் சென்று தாம் தகுதியுடையாரெனக் கருதும் அபேட்சகருக்கே வாக்குச் செலுத்திச் செல்லும் இரகசிய வாக்களிக்கும் முறையே மிகவும் நன்று. இவரே தகுதி வாய்ந்தவர், யான் இவருக்கே வாக்களிக்கப் போகின்றேனென்று துணிவாய்ப் பேசுவதற்கு அஞ்சுவதும் பெரிதும் பாவம். ஆயினும் கலகத்தை நீக்கி அமைதியை விரும்புவீர்களாகில் இரகசியமாய் உமது கடமையைச் செய்வீராக.

எம்மிடத்தில் ஓர் பெரிய குறை இந்த விஷயத்தில் ஏற்பட்டிருக்கின்றது. அதாவது ஓர் தகுதி வாய்ந்தவரைத் தெரிந்தனுப்புவதற்கு இறுதி நேரம் வரையும் முயற்சி செய்யாதிருந்து பின் முயற்சிப்பது. இது ஓர் தவறான செயலாகும். காலத்துக்கு முன் சங்கங்கள் உண்டுபண்ணி கிழமை வீதம் கூட்டங்கள் கூடிப் புதினப் பத்திரிகைகள் வாசித்தும், அரசியல் விஷயங்களைக் குறித்து வாதித்தும், தாமறிந்தவற்றை மற்றவர்களுக்குக் கற்பித்தும் வரவேண்டும். ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளிலுள்ள சனங்களுக்குத் தமது நாடுகளின் அரசியல் முறை நன்றாய் விளங்கும். எமதுநாட்டாருக்கு எமது அரசியல் முறை நன்றாய் விளங்காது. புதினப் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர்பக்கம் சார்புடையதாயிருக்கும். வியாபார பலிதத்தின் பொருட்டுப் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் ஒரு சார்புடைய கொள்கைகளையுடையனவாயே நிலவும். ஆகையால் நீவிர் பத்திரிகைகள் கூறுவதில் மாத்திரம் தங்கியிராது விஷயத்தை நன்றாயாராய்ந்து எவர் தகுதி வாய்ந்தவர் என்றுணர்ந்து அவரையே தெரிந்தனுப்ப வேண்டும். இங்ஙனம் நீர் செய்யாவிடின், நீரே உமது உரிமைகளை வைத்தாளுவதற்குத் தகுதியற்றவராய் விளங்குவீர்கள்.

ஆங்கிலநாட்டின் தொழிற்கட்சியாரையும் பிரபுக்கள் கட்சியாரையும் நோக்குங்கள். தாம் தெரிந்தனுப்பிய அங்கத்தவனிலிருந்து தமது நாட்டில் இன்ன திருத்தங்களும் நன்மைகளும் ஏற்படுமென்பதை யாவரும் நன்றாய் உணருவார்கள். பிரபுக்கள் கட்சி அங்கத்தவர்தெரியப்பட்டால்அவருடைய நோக்கம் "ஆர்குடி கெட்டாலும் தம் குடி வாழவேண்டும்" என்பதே என்று யாவருமறிவர். தொழிலாளர் கட்சியினர் தெரிபட்டால் நன்மைகள் ஏற்படுமென்பதையும் அறிவார்கள். இது இங்ஙனமாக அரசியல் ஞானமுடையவர் எமது நாட்டவர்க்குள் மிகவும் சிலரே. இதற்காகவே சங்கங்களை ஏற்படுத்தி அரசியல் ஞானத்தைப் பொது ஜனங்களுக்குப் போதிக்கவேண்டுமென்று வற்புறுத்தினேன்.

நீங்கள் தெரிவு காலங்களில் கடவுள் பயத்தோடு உங்கள் கடமைகளைச் செய்யவேண்டும். அங்ஙனம் செய்யாவிடில் உங்கள் நாட்டுக்கே கெடுதி ஏற்படும். தெரிவு காலங்களில் சிலர் ஒவ்வோர் அங்கத்தினர் சார்பாகவும கூடித் திரிந்து அவரவர்க்கேற்ற விதமான கதைகளைப் பேசித் திரிபவருமுண்டு. ஒவ்வோர் கட்சியினரிடம் சென்று எதிர்க் கட்சியின[illegible] [illegible]ன்றோங்கள் கூறி[illegible]

# "வசைபாடக் காளமேகம்."

(மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியர், பண்டிதர் திரு. கா. போ. இரத்தினம் அவர்கள் வட்டுநகர் இந்துவாலிபர் சங்க ஆதரவில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.)

(முற்றொடர்.)

குமர குருபர சுவாமிகள் குமரன் அருளால் தமது ஊமைத் தன்மை நீங்கியவுடன் கந்தர் கலிவெண்பாப்பாடியது போலக் காளமேகப் புலவரும் சாரதா தேவியினருள் பெற்றுப் புலமையடைந்ததும் திருவானைக்காவுலா வொன்று பாடினர். அப்பால் எங்கும் இடித்து மின்னி எல்லோருளமும் நல்வளங் கூரக் கவி மழை பொழியுமாறுபலதிருத்தலங்களுக்குஞ் சென்று இடையிடையே கண்ட காட்சிகளையும், தமக்கு நேர்ந்த இன்னல்களையும்; அவற்றைச்செய்தோரையும், தம்மை உபசரித்தோரையும், திருத்தலங்களிலுள்ள கடவுளரையும் பற்றிச் சிறந்துயர்ந்த தனிச் செய்யுட்கள் பல பாடினர். இவற்றில் சிலவற்றையும் அவற்றின் சொற் பொருணயங்களையும் பின்னர்க் கூறுதும்.

தம் காதற் கிழத்தியும் புலமையடைதற்கு ஏதுவாயிருந்தவளுமாகிய மோகனங்கியுடன் உறைந்து வரும் நாளில் ஓர்நாள் மோகனங்கி தன் காதலரை நோக்கி "திருமலைராயன் பட்டினத்தில் நல்ல முத்துக்கள் கிடைக்குமாம். ஆகையால் தாங்கள் சிரமத்தைப் பொருட்படுத்தாது ஆங்குச்சென்று யானணிந்து மகிழ் பூப்ப, அழகிய விலையுயர்ந்த முத்துக்களைக் கொண்டுவருக." என்று கூறி வேண்டினள். புலவர் பெருமானும் அதற்குத் திருவுளங் கொண்டு புறப்பட்டுச் சென்று திருமலைராயன் பட்டினத்துக் கடைவீதியை அடைந்தார்.

செந்நெறிச் செல்வர்களே!

சங்ககாலத்தில் அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர்களை அறமுறை சிறிதும் வழுவா நெறிநின்று செங்கோல் செலுத்திய முடியுடை மூத்தமிழ்நாட்டு வேந்தரும், வேளிரும், வள்ளல்களும் பிறரும் தம்முயிரினும் பார்க்குப் போற்றி வந்தனர். தண்டமிழ்ப் புலவராய சாத்தனர்க்குக் குமண வள்ளல் தன் தலையைத் தானுமீந்தான். தன்னையுண்டாரைப் பன்னெடுங் காலமுயிருடனிருக்கச் செய்யுமாற்றல் வாய்ந்த நெல்லிக்கனியைத் தானுண்ணவிரும்பாது அதிகமான் அருந்தமிழன்னையாய ஔவையார்க்கு அளித்தான். சேரன் செங்குட்டுவன் தன்னுருயிரனைய மகனைக் காணமமைந்த காசறு செய்யுட் பாணருக்குக் கொடுத்தான். முரசு கட்டிலிற்றுயின்ற மோசிகீரனுருக்குச் சாமரையிரட்டியவனும் ஓர் சேர வேந்தனே! தன்னுட்டரசியலையும் தமிழ்ப்புலவருக்குக் கொடுக்க வெண்ணியவனும் எங்கள் பண்டைத்தமிழ்வேந்தனே! இவ்வாறு சங்ககாலத்திலன்றி, இடைக்காலத்திலும் தமிழ்வேந்தர்களுந், குறுநிலமன்னர்களும் செல்வச்சீமான்களும் செந்தமிழ்ச் செல்வர்களை மிக மரியாதையுடன நடத்தி அவர்களை நல்குரவால் நலியவிடாது பாதுகாத்துவந்தனர். தங்கள் கொலு மண்டபங்களில் புலவர்களுக்கென இடங்கள் வகுத்திருந்தனர். சிறந்தபுலவர்களைக் கொலுமண்டபங்களில் தங்களுடைய ஆசனங்களுக்குச் சமமான

சந்திரன் சுவர்க்கியும், கம்பரைச் சடையப்பவள்ளலும், வில்லிபுத்தூராள்வரை வரபதியாட் கொண்டாலும் ஆதரித்து அன்னுரியற்றிய விலைமதித்தற்கரிய மணிகளாம் நூல்களினும் தாங்களிடம் பெற்றனர். இவ்வாறே திருமலைராயனும் அறுபத்துநாலு புலவர்களுக்குத் தண்டிகை முதலியன கொடுத்து, அவர்களைத் தமது சமஸ்தான வித்துவான்களாக்கிப் போற்றிவந்தான். அவர்களெல்லோரும் தண்டிகைப்புலவரென அழைக்கப்பட்டனர். அவர்களுக்குத் தலைவன் அதிமதுரகவியென்பவன்.

கடந்த இரண்டொரு நூற்றுண்டுகளிற்றான் தமிழ்ப்புலவர்கள் தாங்கொணுத் துன்பமுற்றனர். 'மூவேந்தரும் அற்றுச் சங்கமும்போய்ப் பதின்மூன் றெட்டுக் கோவேந்தரும் அற்று மற்றொரு வேந்தன் கொடையுமற்றுப் பாவேந்தர் காற்றில் இலவம் பஞ்சாகப்' பறந்தனர். அவர்களை உபசரிப்பாரும் மரியாதை பண்ணுவாரும் அருகிவந்தனர். மிடியினல் மனம் மடிந்து

"அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக் கல்வி, அதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில் லாமல், திடமுளமோ கனமாடக் கழைக்கூத் தாடச், செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோ மில்லைத். தடமுலைவேசையாகப்பிறந்தோமில்லைச், சனியான தமிழைவிட்டுத் தையலார் தம், இடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை, என்ன சென்ம மெடுத்துலகிலிரக்கின்றோமே" என்றும்,

"கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானு, இல்லைத்தான் பொன்னைத்தா னெனக்குத்தான் கொடுத்துத்தா னிரட்சித்தானு; அல்லைத்தான் சொல்லித்தானுரைத் தானேவைத்தா னையோவெங்கும்; பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான் புவியிற்றான் பண்ணினனே."

என்றுமவர்கள் பாடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இவ்வாறு அவர்கள் கீழ்நிலையை அடைந்து துன்பப்பட்டதற்குப் பல காரணங்களுள, தமிழ் மூவேந்தரும், தமிழ் நயம் தெரிந்த வள்ளல்களும் அற்றுத் தமிழ்நாடு அன்னிய ராட்சிப்பட்டுத் தமிழை விரும்பிக் கற்பாருகியதனுல் தமிழ் நலம் துய்ப்பார் குறைந்து வந்தமையும் பிறவுமென்க.

காளமேகப்புலவர் கடைவீதியை அடைந்தபொழுது, அதிமதுரகவி ஏனைய புலவர்களுடன் திருமலைராயனுடைய கொலுமண்டபத்திற்குச் செல்வதற்குச் சகல விருதுகளுடனும் பல்லக்கில் வந்துகொண்டிருந்தான். அவனுக்கு முன்னே கட்டியங்காரர் அவனுடைய வருகையை அறிவித்துக் கொண்டுவந்தனர். அதிமதுரக்கவியைக் கண்டோர் யாவரும் எழுந்துவணங்கி நின்றனர். திருமலைராயனுடைய பவனிக்கும் அதிமதுரகவியினுடைய பவனிக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை யென்னினுமாம். இவற்றைக் கண்டுகொண்டு நின்ற காளமேகப்புலவருடைய செவியிற் கட்டியங்காரர் கூறுகின்ற மொழிகள் புகுதலோடும், அவர் அதிம...யைப் பழிப்பதற்கெண்ணி, உ...காரமில்லாத காட்டுச் ச...க்குன்றிமணி வேருக்...பெருமை, என்ப

## உடல்நூல்

[சாவகச்சேரி ஆசிரிய கலாசாலைப்பிரசாரகர் திரு. நி. வ. வீரகத்திப்பிள்ளை அவர்கள் எழுதியது.]

(உரிமை ஆக்கியோனுக்கே உரியது.)

(26-ம் இலக்கத் தொடர்)

7. குக்கி அல்லது இரைப்பை (Stomach) என்பது. விதானத்திற்குக்கீழே சுவாசப்பைக்கும் இரத்தாசயத்திற்கும் அடுத்தாற்போ லிருக்கின்றது. இது மூன்று சவ்வுப் பேசிகளாலானது. இடமிருந்து வலம்வரை ஒன்பது அங்குல அகலமுள்ளது. இச்சவ்வுகளில் சளி ஊறும் சவ்வுகளுந், இரத்த நரம்புகளும் அமைந்திருக்கின்றன. இரைப்பையின் சவ்வுகள் இறுகி நசிப்பதினல் இரை பிதுங்கி உருண்டுவர, இரப்பையின் உட்பக்கத்திலிருந்து பாசகமென்னும் புளிப்புநீர் சுரந்து உணவுடன் கலக்கின்றது. இப் பாசகமென்னும் புளிநீர் (The gastric Juice) சுத்தமானது, நிறமற்றது. அமிலம் (Acid) கலந்தது. புளிப்புள்ளது. இது நீரும் உப்பும் அமிலமும் "பெப்சின்") (Pepsin) "பெப்ரோன்" (Peptone' ஆக மாறுதலடைகின்றது.

"அதிமதுரமென்றே அகிலம் அறியத், திதிமதுர மாயெடுத்துச் சொல்லும்—புதுமையென்ன, காட்டுச் சரக்குலகிற் காரமில் லாச்சரக்குக், கூட்டுச் சரக்கதனைக் கூறு"

எனும் வெண்பாவைச் செப்பினர். (தொடரும்)

அந்திரம் அல்லது வயிற்றுக் குடல்கள். இவைகள் சிறுகுடல்கள் (The small Intestines) பெருங்குடல் (The large Intestine) என்று இரண்டாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. சிறுகுடலின் அதிகமான பாகம் கீழ்வயிற்றுக்குள் குவியல் குவியலாயிருப்பதை நாம் ஆடு கோழி வெட்டும்நேரத்தில் அவதானிக்கக் கூடும். அதை நீட்டி யளந்துபார்த்தால் அது சுமார் 25 அடி நீளமுள்ளதாயிருக்கக் காணலாம். பெருங்குடல் 5 அடி நீளமானது. இது சிறுகுடலை வளைந்து இருக்கக் காணலாம். இவைகள் ஒவ்வொன்றும் மூன்று சவ்வுக்களாலானது. உட்சவ்வுச் சளியூறுஞ் சவ்வாயுந், நடுச்சவ்வுப் பேசியாலானதாயும், இருபுடையுள்ளதாயும், வெளிச்சவ்வுப் பாலாடைபோன்றவோர் மெல்லிய சவ்வாயும் அமைந்திருக்கின்றன. சிறுகுடலின் உட்சவ்வாகிய சளியூறுஞ் சவ்வு மடிப்புக்களாயும், காலங்குலக்கனமுள்ளதாயும் அமைந்திருக்கின்றது. சிறுகுடலின் உட்பக்கத்தில் மூன்று நரம்புகள் பின்னப்பட்டிருக்கக்காணலாம். அவை நாடி (Artery) நாளம் (Vein) இரசாயனி (Lacteal) என்றழைக்கப்படுகின்றன. இவைகளுள் நாடி செவ்விரத்தத்தைக்கொண்டுவருகின்றது. நாளம் சாரிரத்தத்தைக் கொண்டுசெல்வது. இரசாயனி சிறுகுடலுட் சீரணித்த உணவின் சாரமாகிய அன்னரசம் (Chyle) செல்லுங்குழல். இது இரசதாரையுடன் சேர்ந்திருக்கின்றது. இச்சிறுகுடலின் பிரதான தொழில்கள் பின் விபரிக்கப்படும். (தொடரும்)


## மருந்துச் சரக்குகளின்

### விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச் சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக் கொம்பு, சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம். கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—25 | 7—50 |
| ,, குங்குமப்பூ | 50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1-ம் நம். காண்டாமிருகக்கொம்பு களஞ்சு ஒன்றுக்கு சதம் 50.
றுத்தல் ஒன்றுக்கு ரூபா 40.

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்லசரக்குகளே, எங்களிடம் நேரில்வந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக் கற்பூரம் ஜவ்வாது, அரைத்த சந்தனம், சந்தனக்கட்டை, சந்தனவில்லை, சாம்பிறாணிப் பதங்கம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர்வகைகளும், அபிஷேகத்திரவியங்களும், ஓமவாட்டர், சுருட்டுக்கோடாச் சரக்குவகைகளும் பலவிதமான திறம் ஊநிவத்திவகைகளும், மற்றும் மருந்துச் சரக்குவகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளுந்; திருச்சி, டக்றர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும்; யாழ்ப்பாணம், டக்றர் ஜே. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்துவகைகளும் இவ்விடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வீ. பீ. மூலம் பெற விருப்புவோர், நான்கிலொருபாகத்தை முற்பணமாக அனுப்பவேண்டும். தொடுவாய்ப்பருதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மணிஆடர் அனுப்பும் விலாசம்:

**ஆ. இராசையா,**
சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடை
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

(59) 29-12-35—12.


...ய்யற்க செய்யி, னிலஞகு மற்றும் பெயர்த்து.

# குமரிபெற்ற பிள்ளை.

## கொலைசெய்ததாகக் குற்றம்

யாழ்ப்பாணம் 23

யாழ்ப்பாணம் போலீஸ் கோட்டில் சுண்டிக்குளியைச் சேர்ந்த கொய்யாத்தோட்ட வாசிகளாகிய (1) கந்தையா மகள் செல்லம், (2) பண்டாரி-கந்தையா, (3) கந்தையா-சிவஞானம், (4) முருகேசு-செல்லத்துரை முதலியவர்களுக்கெதிராகச் சென்ற 15-ம் திகதியளவில் முதலாம் எதிரி குமரியாயிருந்தே ஓர் குழந்தையைப் பெற்றுக் கொலை செய்தாளெனவும், ஏனைய எதிரிகள் அச்செயலுக்கு உதவிசெய்தார்களென்றும், சப் இன்ஸ்பெக்ட்ர் ஜே. டபிள்யூ. எல். அற்றிக்கலையால் தொடரப்பட்ட வழக்கு மீண்டும் இன்று விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணைபின்போது செல்லத்துரை பெண் சின்னம்மா கூறிய சாட்சியத்தின் சாராம்சம் வருமாறு:-

"முதலாம் எதிரி எனது மருகள் தற்சமயம் ஆஸ்பத்திரியில் வசிக்கிறுள். சென்ற சில மாதங்களின் முன்னர் அவள் கர்ப்பவதியாகவிருப்பதாகக்கண்டு அவளது மாமியார்க்குத் தெரிவித்தேன். அவளிடம் கேட்கவில்லை. சம்பவம் நடைபெற்ற அன்று அதிகாலையிலெழுந்து பார்த்தபோது முதல் எதிரி எனது அறையினுட் படுத்திருக்கக் கண்டேன். ஆனல் அன்றயதினம் நான் வெளி விருந்தையில் நித்திரை செய்தேன் சில சமயங்களில் அவள் எனது அறையிலும் படுக்கும் வழக்கமுண்டு. அவளை முதன் முதல் கண்டதும் நான் கவனமாகப் பார்க்கவில்லை. ஏறக்குறைய 12 மணியளவில் அவள் படுத்திருந்த பாயிலும், இடத்திலும் இரத்தக் கறையைக் கண்டேன் உடனே நான் அதனையிட்டுப் பேசியதும் அவளது தாயார் அவ்விடம் வந்து அதனைப் பார்வையிட்டதன் மேல் எதிரியிடம் பாயைக்கழுவும்படி சொல்லி, தான் அவ்விடத்தைச் சாணத்தினல் மெழுகினுள். அன்றைய தினம் அவள் (எதிரி) அணிந்திருந்த சேலையிலும் இரத்தக் குறிகள் காணப்பட்டன. கண்டதும் பிள்ளைபிறந்து விட்டதென உணர்ந்தேன்."

இதன் பின்னர் கந்தையாபெண் தங்கம் சொல்லிய சாராம்சம் வருமாறு:-

"முதலாம் எதிரி எங்களுடனேயே வசிப்பவள். அவள் குளிக்கும்போது அவளது வயிறு பெரிதாயிருப்பதைக் கண்டிருக்கிறேன். அவளிடம் அப்படி ஏன் வயிறு பெரிதாயிருக்கிறதென ஓர் முறை நான் கேட்டபோது வழமையிலேயே தனக்கு வயிறு பெரிதென எதிரி கூறினுள்"

நீதிபதி இன்றையத்தினம் 1-ம் எதிரியைத் தவிர்ந்த ஏனைய எதிரிகளை விடுதலை செய்து வழக்கைத் தவணையிட்டார்.

—நமது நிருபர்

# விநோதம்.

நாட்டுப்புரத்தான் :—போய்மாத்தரய்யா! உயிலங்குளத்துக்கு போய்ட்டுக் கொங்கோ, ஐயா.

போஸ்மாஸ்டர் :—என்ன குளம்?

நா—பு :—உயிலங்குளம் ஐயா! உயிலங்குளம்.

போஸ்மாஸ்டர் :—எந்தக்குளமும் இங்கே கிடையாது ஓடிப்போ.

o　o　o

ஒருவன் :— (கோவிலில் கற்பூரத்தைக் கொளுத்திவிட்டு) ஈஸ்வரா நான இரவுக்குப்போகும் களவில் அனேகம் திரவியம் எடுக்க அருள்புரியும். லாபத்தில் ஓர் பகுதிக்கு அபிஷேகமும், சற்கரைப் பொங்கலும் செய்விக்கிறேன் என்று கும்பிட்டான்.

கேட்டுக்கொண்டவந்த குருக்கள்:— அடே! கடவுள் என்ன கமிஷன் ஏஜண்டா? உன் சற்கரைப் பொங்கலால் கடவுளை ஏமாற்றவா நினைத்தாய், ஓடிப்போ வெளியே.

o　o　o

நியாயாதிபதி:—நீ குற்றவாளியா அல்லது சுற்றவாளியா?

குற்றவாளி:—ஐயா! அதைத் தெரிஞ்சு கொண்டுபோகவே இங்குவந்தேன். ஏன் என்னைக் கேட்கிறீர்கள்.

o　o　o

நியாயாதிபதி:—திருடனைக் குற்றவாளியாக எடுத்துக் கொண்டேன். அதில் நீ ஓர் பெண்பிள்ளையாயிருந்தும் இக்கள்வனைப் பிடித்து அடித்து உதைத்தது மிகவும் பாராட்டத்தக்கது.

அம்மாள்:—அவன் திருடன் என்று தெரியாது. தெரிந்தால் கிட்டவும் போக மாட்டேன். என் புருஷன் என்று நினைத்துத்தான் இவ்வளவு வேலையும் செய்தேன்.　o　o　o

நாட்டுப்புரத்தான்:—ஐயா! கோச்சு வந்திட்டுது இக்கட்டு கொடுங்கோ.

புக்கிங்கிளாக்:—எந்த ஊருக்கு, சல்லி எடு.

நா—பு :—எங்கஊருக்குத் தான்ய்யா. எங்க ஊருக்கு.

புக்கிங்கிளாக் :—பிளடிபூல், உங்க ஊர் எது?

நா—பு :—கண்ணே! எங்கள் கல்யாணம் நிறைவேறிவிட்டது. இனிமேல் நாங்கள் சம்சாரம் என்னும் டிப்பாட்மென்டை நடத்தவேணும். நீ தலைமை, உத்தியோகம் வகிக்கிருயா அல்லது உபதலைமை உத்தியோகம் போதுமா?

மனைவி :—அவ்வளவு பெரிய உத்தியோகங்கள் வேண்டாம். "காஷ்கீப்பர்" பதவியைத் தந்தால் போதும்.

க. சே. சோமசுந்தா ஐயர்,
புன்னாலைக்கட்டுவன்.

# மேளகர்த்தா.

(அளவெட்டி, சதானந்த வித்தியாசாலை ஆசிரியர்
திரு. க. முத்தையா அவர்கள் இயற்றியது.)

(22-ம் இலக்கத் தொடர்)

## கர்த்தா ராகங்களின் பெயரும் முறையும்.

### சுத்த மத்திம ராகங்கள் முப்பத்தாறு.

கட்டளைக் கலித்துறை

**சுத்தரிஷபத்தோடு சுத்த காந்தாரம் சேர்ந்து வரும் முதற் பேதத்துக்குரிய ஆறுகர்த்தாக்களின் பெயர்.**

முன்னே பிரித்தவெண் ணென்பதின் பேரும் மொழிகுவன்கேள்
மின்னே உணர் கன காங்கி ரத் னங்கி விழங்க நின்ற
மன்னு வுயர் கான மூர்த்தி வனஸ்பதி மானவதி
பின்னர் தரும்தான ரூபியும் ஆதியிற் பேதங்களே. 16

**சுத்த ரிஷபத்தோடு சாதாரண காந்தாரம் சேர்ந்து வரும் இரண்டாம் பேதத்துக்குரிய ஆறுகர்த்தாக்களின் பெயர்,**

சேனு பதிஅனு மத்தோடி தேனுகை சீருலவு
மானு டகப்பிரி யங்கோ கிலப்பிரி யஞ்சிறந்த
வானுரும் ரூப வதியெனு மாறும் வகுத்த சுத்த
மானு யிடபநற் சாதா ரணத்தினில் ஆவனவே 17

**சுத்த ரிஷபத்தோடு அந்தர காந்தாரஞ் சேர்ந்து வரும் மூன்றும் பேதத்துக்குரிய ஆறுகர்த்தாக்களின் பெயர்.**

ஆகு மருங்கா யகப்பிரி யம்வகு ளாபரணம்
பாகந் தருமாயா மாளவ கௌளம் பகர்ந்த சக்ர
வாகஞ் சொலும் சூர்ய காந்தம் மருவாட காம்பரியாம்
ஏகங் கொள் சுத்த இடபத்தில் அந்தா மெய்திடவே 18

**சதுர்ச் சுருதி ரிஷபத்தோடு சாதாரண காந்தாரம் சேர்ந்து வரும் நான்காம் பேதத்துக்குரிய ஆறு கர்த்தாக்களின் பெயர்.**

ஓது சங்காரத் தொனிநட பைரவி ஒன்றுமிசைப்
பேத மிலாக்கி ரவாணி காயகப் பிரியை யுடன்
ஏதமில் கௌரி மனேகரி யேவரு ணப்பிரியை
சாதா ரணத்திற் சதுர்ச்சுரு திச்சுரம் சார்ந்திடவே 19

**சதுர்ச் சுருதி ரிஷபத்தோடு அந்தர காந்தாரம் சேர்ந்துவரும் ஐந்தாம் பேதத்துக்குரிய ஆறு கர்த்தாக்களின் பெயர்.**

தருமார ரஞ்சனி சாருகே ஶீசர சாங்கியுடன்
திரு மாண் புணரரி காம்போதி தீர சிவாபரணம்
பொருமா றிலநாக நந்தினி ஆறும் புகன்ற சதுர்ச்
சுருதி இடப நல் லந்தரஞ் சேர்ந்திட சொல்லிசையே 20

**சட் சுருதி ரிஷபத்தோடு அந்தர காந்தாரம் சேர்ந்து வரும் ஆறும் பேதத்துக்குரிய ஆறுகர்த்தாக்களின் பெயர்.**

காய கப்பிரியை ராக வருத்தனி யாழிசையின்
ஏகு நற் காங்கேய பூஷணி சொல்வாக தீசுவரி
தாகங் கொழும்சூ லினிசல நாட்டைநற் சட்சுருதி
யாகு மிடபமோ ரந்தா காந்தாரத் தாவனவே 21

(தொடரும்.)


திருநெல்வேலி ஒற்றுமைநிதி
(வரைவுளது)
அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 5,00,000
ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி
ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.
தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.
வேண்டிய இடங்களில்
கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்
முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.
இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் போருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
வ. சோமசுந்தரம், காரியாதிகாரி
(30) 18-11-34—11-35.



எல்லோரும்
நட்க்ஷேத்திர
(ஸ்டார்) அடையாளமுள்ள
உருக்கினுற் தயாரிக்கப்பெற்ற

(ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

பாத்திரங்களையே
வாங்குகிருர்கள்!
இதனை வாங்குவது:
இதன் பெயருக்கும் மதிப்புக்குமன்று. ஆனல்,
இதன் நெடுங்காலப் பாவிப்புக்கும்
உயர்தரமான வேலைப்பாட்டிற்குமே!!
இலங்கையில் எவ்விடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
எல்லா விதமான இரும்பு, பித்தளைச்சாமான்களும் ஜர்மன் உள்ளூர் கைவாளிகளும், கேத்தல், தோசைக்கல் முதலிய மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும். விலை சகாயம்.
இறக்குமதி தனி ஆட்களும் வியாபாரிகளும்:
அ. மு. சீ. சீனிமுகம்மது தம்பி
அன் பிறதர்ஸ்
122, மூன்றும் குறுக்குத்தெரு,
கொழும்பு.

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED — BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 26th January 1936, Sunday. { No. 28

அகில இலங்கை

## ஆதாய எலச்சீட்டுக் கம்பனி

**THE LANKA BENEFIT CO.,**

**GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.**

தலைமைக் காரியாலயம் :

பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:

சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 5-ம் வகு. | 1000/- | ரூபா 40/- | ரூபா | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | 8-ம் | ,, 500/- | ,, 20/- | ,, | ,, | 25 | ,, |
| C | 14-ம் | ,, 250/- | ,, 10/- | ,, | ,, | 25 | ,, |
| D | 7-ம் | ,, 125/- | ,, 5/- | ,, | ,, | 25 | ,, |
| BMC | 2-ம் | ,, 250/- | ,, 10/- | ,, | ,, | 12½ | ,, |
| WC | 3-ம் | ,, 250/- | ,, 5/- | ,, | ,, | 50 | கிழமைகட்கு |
| WD | 4 | ,, 125/- | ,, 5/- | ,, | ,, | 25 | ,, |
| தினசரி | 6&7ம் | ,, 100/- | ,, 1/- | ,, | ,, | | |

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.

மனேஜர், அகில இலங்கை ஆதாய எலச்சீட்டுக் கம்பனி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34

## லங்கா பினன்ஸ் கம்பெனி

**The**

**Lanka Finance Company**

**Stanley Street, Grand Bazaar**

**JAFFNA**

காரியாலயம் :

ஸ்ரான்லி ஸ்றீட், பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பின்வரும் வகுப்புச்சீட்டுகள் இப்போது அமைக்கப்படுகின்றன :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | வகு. | ரூ. 1000- | ரூ. 40- | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | ,, | ,, 500- | ,, 20- | ,, | 25 | ,, |
| C | ,, | ,, 250- | ,, 10- | ,, | 25 | ,, |
| D | ,, | ,, 125- | ,, 5- | ,, | 25 | ,, |
| E | ,, | ,, 75- | ,, 3- | ,, | 25 | ,, |
| F | ,, | ,, 100- | ,, 10- | ,, | 10 | ,, |
| FNC | ,, | ,, 250- | ,, 10- | ,, | 12½ | ,, |
| WC | ,, | ,, 250- | ,, 5- | ,, | 50 | கிழமைகட்கு |
| WD | ,, | ,, 125- | ,, 5- | ,, | 25 | ,, |
| தினசரி B1&2 | ,, | 100- | ,, 1- | ,, | | |

கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதி
வேண்டிய விபரங்கள் அறிந்துகொள்ளலாம்.

மனேஜர், லங்கா பினன்ஸ் கம்பெனி,
ஸ்ரான்லி ஸ்றீற், யாழ்ப்பாணம்.

(33) 22-9-35.

விலை நிதானம்! நயம் சரக்கு!


## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்
**மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்**
நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்
விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.
கொழும்பு,- வெள்ளவத்தை 2, 4, 6, 8, 10, 20-ம்
நம்பர் நூல் தொகையாகவும் சில்லறையாகவும்
யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34

## பவுண்மார்க் ஓடுகள்



இப்பொழுதும்
விசேடமாக மதிப்புப்பெறும்
பவுண்மார்க் ஓடுகள்
இவைகளே.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்

**சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்**

(இவை விற்கும்இடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை } சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்
காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை
ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

## SRI LANKA BOOK DEPOT

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

**வண்ணார்பண்ணை**

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு வடக்குப்பக்கமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும், வேறு இலங்கை இந்திய பதிப்புகளும் பென்சில், பேனா முதலியனவும், கொப்பி (Ex. Copy) கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும் ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்

அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை,
வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி"யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1936-ம் ஆ ஜனவரி மீ 26-ந உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.